கோகுலம்

GOKULAM

அக்டோபர் '91 ரூ. 3/-



பாரீஸ் பிஸ்கட்டுகள்

"வாழ்க்கை சுவையாக இருக்கவேண்டும்"
இதைச் சொல்லப் பல வழிகள் உண்டு...



வாழும் வாழ்வில் சுவை இருக்கவேண்டும். மனத்துக்கினிய மணம் இருக்கவேண்டும். அதற்கு பாரீஸ் காட்டும் வழி: ☐ சாறுள்ள பைனாப்பிள் கிரீம் ☐ சாறு செறிந்த ஆரஞ்சு கிரீம் ☐ கெட்டியான சாக்லேட் கிரீம் ☐ புத்துணர்ச்சி தரும் கார்டமம் கிளாஸிக் ☐ சத்து நிறைந்த குளுக்கோஸ் ☐ உடல்நலத்திற்கு மில்க் பிஸ்கட்டுகள் ☐ எந்நேரத்திற்கும் ஏற்ற மாரி வாழ்வில் சுவை கூட்ட இவை எல்லாம் சேர்ந்து சிறந்த சுவையை அள்ளித் தருகின்றன.


பாரீஸ் – அனைவரும் விரும்பும் தரமான பிஸ்கட்டுகள். மிட்டாய்கள்.

PARRYS

Parry's
FRESH & CRISP BISCUITS

கோகுலம்

1991 அக்டோபர் மாத இதழ்
மலர் : 9 இதழ் : 9



அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஆசிரியர் தினத்தன்று உங்கள் ஆசிரியர்களைச் சந்தித்து வணங்கி
அவர்களது ஆசியைப் பெற வேண்டும் என்று சென்ற இதழ் தலையங்கத்தில்
எழுதியிருந்தேன். அடேயப்பா! எவ்வளவு கடிதங்கள்! இப்படி ஒரு நல்ல
செயலைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைச் சிறுவர் சிறுமியர் மனத்தில்
விதைக்க நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எங்கள் பாராட்டுக்கள் என்று
ஆசிரியர்கள் எழுதும் கடிதங்கள் தினமும் வந்து குவிகின்றன! நீங்கள் எழுதிய
படியே நாங்கள் ஆசிரியர் தினத்தன்று எங்கள் ஆசிரியர்களைச் சந்தித்து
வணங்கி, அவர்களது நல்லாசிகளைப் பெற்றோம் என்று சிறுவர் சிறுமியர்
பலரும் எழுதியிருக்கிறார்கள். சிலர் புகைப்படங்களைக் கூட
அனுப்பியிருக்கிறார்கள். எனது வேண்டுகோள் நல்லதொரு தொடக்கத்தை
ஏற்படுத்தியிருப்பதற்குப் பெரிதும் மகிழ்கிறேன். இந்த வழக்கம் தொடர
வேண்டும்.

அக்டோபர் மாதம் என்றாலே காந்தி மகானின் நினைவுதான் வரும்.
சத்தியம், அஹிம்சை, மனிதாபிமானம் ஆகியவைகளுக்கு நடமாடும்
உருவமாக இருந்து, தேசவிடுதலையை வாங்கித் தந்தவராயிற்றே.
அதனால்தானே அவரை 'தேசத் தந்தை' என்று அழைக்கிறோம். அவரைப்
பற்றிய குறிப்பும், ஒரு பாடலும் இந்த இதழில் வெளியாகின்றன. அவ
ருக்கிருந்த தியாக உணர்வு நமக்கும் வர வேண்டும் என்று இறைவனை
வேண்டுவோம். அதற்கு முயல்வோம்.

பிருந்தாவனக் கதையரங்கத்திற்குக் கதைகள் வருவது குறைந்து
விட்டது. வரும் கதைகளும், ஏற்கெனவே பல பத்திரிகைகளில் வெளி
யானவையாக இருக்கின்றன. இக் குறையைத் தீர்த்து வைப்பது உங்கள்
கையில்தானே இருக்கிறது? உங்கள் கதைகளை ஒரு 'இன்லேண்ட் லெட்டரில்'
எழுதியனுப்புங்கள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

எங்கேயும் விற்கலாம்!



ஒரு சமயம் முல்லா, ஒரு பழத் தோட்டத்தில் நுழைந்து, பழங்களைத் திருட எண்ணி உயரமாக இருந்த தோட்டத்துச் சுவரில் ஏறிக் குதிக்க ஒரு ஏணியை எடுத்துச் சென்றார். ஏணியில் ஏறி சுவற்றின் மேல் நின்றார்.

மறுபக்கம் குதித்து விடலாம். ஆனால், அதற்குப் பிறகு மறுபடியும் எப்படி வெளியே வருவது?'' என்று எண்ணிய முல்லா மீண்டும் வெளியே வருவதற்காக, வெளிப்புறம் இருந்த ஏணியை எடுத்து உட்பக்கம் வைத்து இறங்க நினைத்தார்.

முல்லா ஏணியை எடுத்துத் தோட்டத்தின் உட்பக்கம் வைப்பதற்குள் தோட்டக்காரன் பார்த்து விட்டான். ஏணியைத் தூக்கியபடி சுவர் மேல் நிற்கும் முல்லாவைக் கண்ட தோட்டக்காரன், முல்லா திருடுவதற்காக வந்துள்ளார் என்று சந்தேகமடைந்து அங்கே விரைந்து வந்தான்.

முல்லாவைப் பார்த்து, ''முல்லா, ஏன் ஏணியைச் சுமந்து கொண்டு தோட்டத்துச் சுவற்றின் மேல் நிற்கிறீர்கள்?'' என்று வினவினான்.



அதற்கு முல்லா, ''நான் ஏணியை விற்கிறேன்'' என்று சொன்னார்.

உடனே தோட்டக்காரன், ''தோட்டத்தில்தான் ஏணியை விற்பார்களா?'' என்று கேட்டான்.

முல்லா, ''முட்டாளே, எந்த இடத்திலும் ஏணியை விற்கலாம். ஏணியை இன்ன இடத்தில் விற்கக் கூடாது என்று எந்தச் சட்டம் சொல்கிறது?'' என்று கேட்டார். முல்லா அதட்டிக் கேட்கவும் தோட்டக்காரன் ''என்ன பதில் கூறுவது?'' என்று தெரியாமல் விழிக்கவே, முல்லா அதுதான் சமயம் என்று ஏணியை வெளிப்புறம் சாத்தி மடமட வென்று இறங்கித் தப்பினார்.

- நல்லாலம் காசிதாசன், வந்தவாசி.

இட்லி ரங்கா முழிக்காதே



காவிரிக் கரையில் உள்ள கிராமம் ஒன்றில், ஒரு கிராம அதிகாரி இருந்தார். நான்கு மொழிகள் அறிந்த அவர் மிகுந்த தெய்வ நம்பிக்கை உடையவர். யாருக்கும் கெடுதல் எண்ணாது, தரும சிந்தனையோடு, எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அதனால், அவர் ஏழையாகவே இருந்தார். அவருடைய ஒரே செல்லப் பெண்தான் சிறுமி செல்லி.

செல்லி மிகுந்த அறிவாளி. தந்தையிடம் இருந்த அத்தனை நல்ல குணங்களும் அவளிடமும் இருந்தன. அதோடு அவளுக்கு நினைத்தவுடன் பாட்டுக் கட்டும் அதிசயத் திறமையும் இருந்தது.

ஒரு நாள் செல்லி தன் வயதுச் சிறுவர் சிறுமிகளுடன் வழக்கம் போல் காட்டில் சுள்ளி சேகரிக்கப் போனாள். அன்று எதிர்பாராத விதமாக எளிதில் சுள்ளிகள் கிடைத்து விட்டன. அதனால், சிறிது நேரம் விளையாடி விட்டுப் போகலாம் என்று எல்லோரும் முடிவு செய்தனர்.

ஒளிந்து விளையாடும் ஆட்டம். எல்லோரையும் ஒளிய அனுப்பி விட்டு செல்லி கண்டுபிடிக்க வேண்டிய முறை.

செல்லி அடர்ந்த ஓர் ஆலமரத்தை நெருங்கினாள்.

''இதுதான் தாச்சி மரம். கண்ணை மூடிக் கொண்டு பாட்டுப் பாடுவேன். ஐந்து முறை நான் பாடி முடிப்பதற்குள் நீங்களெல்லாம் ஒளிந்து கொண்டு விட வேண்டும்'' என்று எ ச் ச ரி க் கை கொடுத்து விட்டு மரத்தில் முகம் வைத்து, கைகளை வைத்து மூடிக் கொண்டு பாடினாள் செல்லி.

இட்டிலி ரங்கா முழிக்காதே!
இருபது இட்டிலி திங்காதே!
சட்டினி அரைத்த சுப்பையன்
சிறிதும் உப்பைப் போடலையே!
இட்டிலி இருபதை எப்படித்தான்
இன்றே தின்று முடிப்பாயோ!

செல்லி பெரிய கவி அல்ல. ஆனாலும், இயற்கையாகவே எதையும் எளிய கவிதைச் சுவையோடு பாடலாக்கி உடனே பாடிக் காட்டும் திறமை அவளுக்கு இருந்தது. விளையாட வந்திருந்த குட்டிப் பட்டாளத்தில் ரங்கன் என்று ஒரு குறும்புக்காரச் சிறுவன் இருந்தான். இட்லி என்றால் அவனுக்குக் கொள்ளை ஆசை! அவனை மனத்தில் வைத்துத்தான் ஒரு வேடிக்கைப் பாட்டை அவள் கட்டினாள். உடனே பாடியும் முடித்தாள்! பாடி முடித்ததும், ஒளிந்து கொண்டிருந்த சிறுவர் பட்டாளத்தைக் கண்டு பிடிக்க செல்லி ஓடிச் சென்றாள்.

செல்லி தாச்சியாக வைத்துப் பாடிய அந்தப் பெரிய ஆலமரத்தின் அடர்ந்த கிளைகளில் ஒன்றில் மறைந்திருந்தார் ஜமீன்தார் சிவரங்கன். அவருக்கு இட்டிலி என்றால் உயிர். இட்லிப் பிரியரான அவர் தினமும் இருபது இட்லிக்குக் குறையாது சாப்பிடுவார். அவருக்கு எட்டுப் பிள்ளைகள். நாலு பெண்கள். இருபதுக்கு மேற்பட்ட பேரன்

சின்ன பாபு

பேத்திகள். அவர் தட்டுத்தட்டாக இட்லி தின்பதைப் பார்த்து, பேரன் பேத்திகள் கேலியாகப் பேசிக் கொண்டனர். அவரது மனைவியும் நோயாளி. அதனால், வீட்டில் எல்லோருக்கு எதிரேயும் இஷ்டத்திற்கு இட்லி தின்ன முடியாமல் ஜமீன்தார் சிவரங்கன் படாதபாடு பட்டார்.

கடைசியில், அவரது நிலையைக் கண்டு மனமிரங்கிய சமையல்காரன் சுப்பையா ஒரு வழி கண்டுபிடித்தான். வாரத்தில் ஒரு நாள், வேட்டைக்கு வரும் சாக்கில், ஜமீன்தார் சிவரங்கன் தான் மட்டும் காட்டுக்கு வருவார். சுப்பையன் தயாராக இருபது இட்லி பண்ணி, சட்டினி வைத்து, பெரிய பொட்டலமாக அந்த மரக் கிளையில் வைத்து விட்டுப் போவான். ஜமீன்தார் சிவரங்கன் அந்த இருபது இட்லியையும் சட்டினியையும் ஒரு பிடி பிடித்து விட்டுப் போவார்.

அன்றும் அப்படித்தான், ஜமீன்தார் இட்லிக்காக வந்து, மரத்தில் ஏறி மறைந்து கொண்டிருந்தார். அவர் இட்லிப் பொட்டலத்தைப் பிரிக்கும் நேரம். மரத்தின் கீழே, செல்லி அதே மரத்தைத் தாச்சியாக்கிப் பாடினாள்.

செல்லி ''இட்லி ரங்கா'' என்று பாடியது தன்னைத்தான் என்று ஜமீன்தார் எண்ணிக் கொண்டார். சுப்பையா என்று குறிப்பிட்டது தனது சமையற்காரர் சுப்பையாவைத்தான் என்றும் அவருக்குத் தோன்றியது. செல்லி சென்றதும் இட்லிப் பொட்டலத்தைப் பிரித்தார். சட்டினியை வாயில் வைக்க முடியவில்லை. அதில் துளி கூட உப்பில்லை!

ஜமீன்தார் சிவரங்கன் அசந்து போனார்! அதிசயம் தாங்கவில்லை அவருக்கு.

தனக்கு 'இட்லி ரங்கன்' என்ற பட்டப் பெயர் இருப்பதும், பொட்டலத்தில் இருபது இட்லிகள் சரியாக இருந்ததும், சமையற்காரன் பெயர் சுப்பையன் என்பதையும், அன்று சட்டினியில் உப்புப் போடவில்லை என்பதையும் கண்டுபிடித்து பாட்டாகப் பாடிக் காட்டியுள்ள சிறுமி செல்லிக்கு அதிசயமான ஜோசியத் திறமை இருக்கிறது என்று ஜமீன்தார் உறுதியாக நம்பினார். இவ்வளவு புத்திசாலியான, அறிவுத் திறன் கொண்ட சிறுமியைத் தனது கடைசிப் பேரனுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். மறுநாளே தனது உதவியாளர் கிட்டு என்ற கிருஷ்ணனை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

ஜமீன்தாரின் வண்டி, செல்லி வீட்டு வாசலில் வந்து நின்றது. அப்பொழுது, செல்லி தனது குட்டிப் பட்டாளத்துடன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து தாயக் கட்டம் ஆடிக் கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில், எதிர்க் கட்டப் பையன் கிட்டு ஆடி, காயை நகர்த்த வேண்டிய நிலை. அந்தச் சிறுவனுடைய ஆட்டக் காய் சுண்டைக்காய். அவனை எச்சரிக்கும் வகையில் செல்லி பாடினாள் :

கிட்டுப் பையா முழிக்காதே!
கட்டம் கடந்து வாராதே!
வெட்டிப் போகும் சுண்டைக்காய்!
வீணாய் வந்து சிக்காதே!






ஜமீன்தாரும் அவரது உதவியாளர் கிட்டு என்ற கிருஷ்ண ஹும் அசந்து போனார்கள்! செல்லியைத் திருமணம் பேச எண்ணியிருந்த ஜமீன்தாரின் பேரன் மாணிக்கம், சிறிது குள்ளம். அந்தக் குடும்பத்தில் மற்ற எல்லோரும் உயரம். அதனால் அந்தப் பேரப் பிள்ளைக்கு 'சுண்டைக்காய்' என்ற பட்டப் பெயர் இருந்தது!

''ஜமீன்தார்வாள், நமக்கு இந்த இடம் சரிப்பட்டு வராது. பெண் முக்காலமும் அறிந்தவளாக இருக்கிறாள்!'' என்று நடுங்கினார் கிட்டு.

''ஆமாம் ஆமாம்! சுண்டைக்காயை வெட்டிடுவேன் என்று எச்சரிக்கை வேறு செய்கிறாளே! இந்த இடமே வேண்டாம்!'' என்றார் ஜமீன்தார்.

வண்டி பறந்தது.

ஜமீன்தார் வண்டி ஏன் வந்தது எதற்காக நின்றது, ஏன் உடனே பறந்தது என்று தெரியாமல் எல்லோரும் முழித்தனர். உங்களுக்குத்தான் காரணம் தெரியுமே!



யாரென்று கண்டுபிடி - போட்டி

உங்கள் ''வரலாறு'' நூலில் இருந்து உங்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ள சிலரது தொப்பி, அல்லது கிரீடம் தரப்பட்டுள்ளன. அவர்களைப் பற்றிய சிறு குறிப்பும் உதவிக்காகத் தரப்பட்டுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் கிரீடம் அல்லது தொப்பிக்கு உரியவர் யாரென்பதைக் கண்டுபிடித்து எழுத வேண்டியதுதான். கூப்பனைத் தவறாது அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு.

குறிப்புகள்

★ ஒருவர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு இலக்கணமானவர். ....தான். அக்பர் காலத்தில் வாழ்ந்தவர்.

★ இந்தியாவில் காலடி வைத்த முதல் போர்த்துக்கீசியர்.

★ தாஜ்மஹல் எழக் காரணமாக இருந்த அரசனும் அவரது மனைவியும்.

★ மராட்டிய அரசை உருவாக்கிய சத்ரபதி இவர்தான்.

★ ஆங்கிலேயர்களைக் கதிகலங்க வைத்த மைசூர் மன்னன்.

★ விஜயநகர ஆட்சியின் பொற்காலம் என்பது இவரது காலத்தில்தான்.

★ 'தீன் இலாஹி' மதத்தை உருவாக்கிய மொகலாய மாமன்னர்.

★ 'சதி'யைத் தடை செய்ய முதலில் குரலெழுப்பியவர்.

★ திருப்பாவையைத் தந்த சிறுமி.

★ கபிலவஸ்துவில் பிறந்து துறவியான சித்தார்த்த மன்னர்

யாரென்று கண்டுபிடி
- போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி: ....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.10.91



◆ எஸ். ஐஸ்வர்யா



◆ வி. சரண்யா

◆ வி. திவ்யா





◆ கே. லாவண்யா

எனக்குப் பிடித்த பொம்மை!

நவராத்திரி கொலுவை இப்போதும் சில வீடுகளில் வைக்கறாங்க. இப்படி அந்தப் பழக்கத்தை விடாமல் கடைப்பிடித்து வரும் சில வீடுகளின் தங்கைகளை 'உங்க வீட்டு கொலுவிலேயே உங்களுக்குப் பிடிச்ச பொம்மை எது?' என்று கேட்டோம். அவர்கள் சொன்னார்கள் -

கே. லாவண்யா : கிருஷ்ணர் பொம்மை தான். ரொம்ம்ம்ம்ப அழகா இருக்கும். எவ்ளோ ஜ்வெல்ஸ்! தலைக் கிரீடத்லேருந்து கால் கொலுசு வரைக்கும் அழகழகா


எவ்ளோ நகைகள்! கிருஷ்ணர் ஆம்பிளைன்னாலும் லேடீஸ் மாதிரி நிறைய நகை போட்டுக்கிட்டு அழகாகவும் இருக்கார். அதனால இந்த கிருஷ்ணர் பொம்மைதான் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். எங்க வீட்டு கொலுவிலேயே இந்தப் பொம்மைக்குத் தான் ஒசந்த இடம் உண்டு.

வி. திவ்யா : ராமாயண செட், தசாவதாரம் செட் மாதிரி எங்க வீட்லே தேசிய செட் இருக்கு. அப்படீன்னா என்ன தெரியுமா? தேசத் தலைவர்கள் காந்திஜி, நேருஜி, நேதாஜி, வல்லபாய் படேல், இந்திரா காந்தி மாதிரி பெரிய பெரிய தலைவர்களோட பொம்மைங்கதான் அந்த செட். எங்க அப்பா ஏற்கெனவே அவங்களைப் பத்தியெல்லாம் நிறைய சொல்லியிருக்கறதினால, கொலுவிலே அந்தப் பொம்மைங்களை வைக்கற போது அந்த விவரமெல்லாம் எனக்கு ஞாபகத்துக்கு வரும். ரொம்ப மரியாதையோட வைப்பேன். ரொம்ப அழகான பொம்மைங்க...

எஸ். ஐஸ்வர்யா : எங்க வீட்டு கொலுவிலே எனக்குப் பிடிச்ச பொம்மை - பெரிய்ய்ய அழகான நாய் பொம்மைதான். அது உட்கார்ந்துகிட்டு ஸ்டைலா மூஞ்சியைத் திருப்பிப் பார்க்கற அழகு, சும்மா சூப்பர்! தினமும் தெருவிலே ஒருத்தர் ஒரு அழகான நாயைப் பிடிச்சுக்கிட்டுப் போவார். எங்க வீட்லேருந்து நான் பார்த்து டாட்டா காட்டுவேன். ரொம்ப நாளா அந்த நாய் வரக் காணோம். அதனோட சொந்தக்காரங்க வீடு மாத்திப் போயிட்டாங்களோ என்னவோ! அதைப் பார்க்காம எனக்கு ரொம்ப கஷ்டமா போயிடுச்சு. தற்செயலா அந்த வருஷமே என் அப்பா இந்த நாய் பொம்மை வாங்கி வந்தார். அம்மா அதை கொலுவிலே வெச்சாங்க. எனக்கு, மறுபடியும் வராமல் போன அந்த நாயைப் பார்க்கற மாதிரியே சந்தோஷமாயிட்டுது.

வி. சரண்யா : ராமர் - சீதை - லட்சுமணர் - அனுமார் இருக்கற ராமாயண் செட் பொம்மைதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். டி.வி.லே ராமாயணம் சீரியல் வந்ததே, அப்போதிலிருந்தே எனக்கு இந்த பொம்மை செட் மேல ரொம்ப ஆசை. இந்தப் பொம்மைங்களைப் பார்க்கற போதெல்லாம் அந்த சீரியல் ஒவ்வொண்ணா ஞாபகம் வரும். அதனாலேயே எனக்கு இந்தப் பொம்மைங்க ரொம்பப் பிடிக்கும்.

புகைப்படம், பேட்டி : **பிரபுசங்கர்.**





5. புதிய திட்டம்.

நாற்புறமும் மலைகள் சூழ்ந்து ஏகாந்தமாய் விளங்கிய அப்பிரதேசத்தில் அவ்வப்போது வீசிய காற்றில் முட்புதர்களும், குற்றுச் செடிகளும் ஒன்றையொன்று உரசிக் கொண்டு சரசர வென்று ஒலி எழுப்பின. ஆள் உயரத்திற்கு வளர்ந்து நின்ற புதர்களிடையே ஒற்றையடிப் பாதையொன்று மலைப் பாம்பாக வளைந்து செல்வது மங்கிய நிலவில் தெரிந்தது. அதன் வழியாகச் சந்திரகிரியைச் சேர்ந்த ஆண்கள் புதர்களை விலக்கிக் கொண்டு வரிசையாகச் சென்று கொண்டிருந்தனர். சிலர் கைகளில் தீவட்டிகள் இருந்தன. முன்னால் சென்றவர்கள் நீண்ட கத்திகளை வைத்திருந்தார்கள். சில இடங்களில் பாதையை மறைத்திருந்த புதர்களை அந்தக் கத்திகளால் வெட்டி அகற்றியவாறு அவர்கள் முன்னேறினார்கள். அடிக்கடி திரும்பிப் பார்த்து தங்களை யாரும் தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, அவர்கள் நடந்தனர்.

மேலே போகப் போக மொட்டைப் பாறைகள் எதிர்ப்பட்டன. பெரும் சிரமத்துடன் அதில் ஒருவர் பின் ஒருவராக ஏறிச் சென்றனர். சில இடங்களில் ஒரு பாறையிலிருந்து இன்னொரு பாறைக்குத் தாவிச் செல்ல வேண்டியிருந்தது. இன்னும் சில இடங்களில் கால்களாலும், கைகளாலும் தவழ்ந்து செல்லும்படி இருந்தது. சுமார் ஒன்றரை மணி நேர பயணத்திற்குப் பின், அவர்கள் மேலே வந்த போது, கோட்டை அமைந்திருந்த மறுபக்கச் சரிவு கண்ணெதிரே பரந்து விரிந்து கிடந்தது. அந்தப் பகுதியும் நாற்புறமும் மலைகளால் சூழப்பட்டு, யாரும் எளிதில் வர முடியாதபடி பாதுகாப்பாக விளங்கியது.

ஓரிடத்தில் இருபுறமும் பாறைகள் செங்குத்து அரணாக நிற்க, இடையே தோன்றிய குறுகிய வழியில் நுழைந்த போது ஒரு பருமனான முரட்டு மனிதன் எதிர்ப்பட்டு அவர்களைத் தடுத்தான். முன்னால் சென்றவனைப் பார்த்து, ''வீரமாணிக்கம், இன்னைக்கு எத்தனை பேர் வந்திருக்கீங்க?' என்று கட்டைக் குரலில் கேட்டான்.

வீரமாணிக்கம் என்று அழைக்கப்பட்டவன் பணிவுடன் ''ஐம்பத்து இரண்டு பேருங்க'' என்றான்.

அவர்களை தன் பார்வையால் ஒரு முறை அளந்து விட்டு, ''பின்னால உங்களைத் தொடர்ந்து யாரும் வரல்லியே?'' என்று கேட்டான் அந்த முரட்டு மனிதன்.

வீரமாணிக்கம் இல்லை என்று பதில் சொல்லிவிட்டு முன்னேறினான். மற்றவர்களும் பின் தொடர்ந்தனர். ஒவ்வொருவரும் தன்னைக் கடந்து சென்ற போது, தன் கையிலிருந்த டார்ச்சு விளக்கை அவர்கள் முகங்களில் அடித்துப் பார்த்துக் கொண்டான் முரடன்.

இது போல ஆங்காங்கே சோதிக்கப்பட்டு மேலும் அரைமணி நேரத்திற்கு அதிகமாக நடந்து சென்றபின் சமவெளியாய்க் காணப்பட்ட பகுதிக்கு அவர்கள் வந்து சேர்ந்தனர்.

சற்றுத் தொலைவில் தென்னம் ஓலைகளால் வேயப்பட்ட சிறிய குடில் ஒன்று காணப்பட்டது. அதில் மண்

ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் ஐந்தாறு பேர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

எல்லோரும் வந்து கும்பலாக அந்தக் குடிலுக்கு வெளியே நிற்க, உள்ளேயிருந்து எழுந்து வந்த பாஞ்சா அவர்களைப் பார்த்து, ''போய் வேலையைப் பாருங்க.....'' என்று உத்தரவிட்டான்.

அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டு தலையசைத்தவர்கள் அந்தக் குடிலுக்குப் பின்புறம் குவித்துப் போடப்பட்டிருந்த தோட்டக் கருவிகளை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டு செல்ல முற்பட்டனர். பாஞ்சாவின் குரல் மீண்டும் ஒலித்தது.

''வேலையை சீக்கிரம் முடிச்சிட்டு மறுபடி எல்லோரும் இங்க வரணும்... உங்ககிட்ட பேசி ஒரு முக்கியமான முடிவு எடுக்க வேண்டியிருக்கு.''

அவர்கள் தலையசைத்து விட்டு நடந்தார்கள். சலசல்வென்று மலை மீதிருந்து தண்ணீர் விழும் ஓசை ஒருபுறம் கேட்டுக் கொண்டிருந்தது.

சற்று நேரம் குடிலின் வாசலில் நின்று மேற்பார்வையிட்ட பாஞ்சா, மீண்டும் உள்ளே சென்றான். விளக்கு வெளிச்சத்தில் அமர்ந்திருந்தவர்களோடு தானும் அமர்ந்து கொண்டான். எல்லோரும் பழிபாவத்திற்கு அஞ்சாதவர்களாகத் தோன்றினர். பின் மற்றவர்களைப் பார்த்து, ''சந்திர கிரியில் அணை கட்டறதால நமக்கு ஏற்பட்டிருக்கிற பெரிய பிரச்னை, அந்த ஊர் முழுக்க தண்ணிக்குள்ள மூழ்கிப் போறது தான்.... இதனால அங்கே குடியிருக்கிறவங்களுக்கு உதவிப் பணமும், பாசன நிலங்களும், தரதா அரசாங்கம் அறிவிச்சிருக்கு.... அதை இந்த ஜனங்க வாங்க முடியாதபடி எப்படியாவது தடுக்கணும்'' என்றான்.

''இன்னும் ஒரு வருடத்துல அணை வேலை முடிஞ்சுரும் போல இருக்கு.... அதுக்குள்ள இந்த சந்திரகிரி ஜனங்களுக்கு ஒரு வழி சொல்லி ஆகணும் இல்லே? வெறும் உதவிப் பணத்தையும் நிலத்தையும் வச்சுக்கிட்டு இவங்க என்ன செய்வானுங்க? குடியிருக்க ஒரு இடம் வேண்டாமா?'' என்று மீசையைத் திருகினான் ஒருவன்.

பாஞ்சா அவனைப் பார்த்து, ''அட, நீயொண்ணு, குடியிருக்க வீடும் கட்டித் தர்றதா அரசாங்கம் அறிவிச்சிருக்கு.... அதுதானே நான் பயப்படறேன்... நமக்கு இவங்களை விட்டா, இப்படி நம்பகமான வேறு ஆட்கள் கிடைக்கிறது கஷ்டம். சீக்கிரமா ஒரு வழி கண்டு பிடிக்கலேன்னா நம்ம பிழைப்புல மண் விழுந்திரும்'' என்றான்.

எல்லோரும் சிந்தனையில் ஆழ்ந்திருக்க பாஞ்சாவே தொடர்ந்து, ''இதுக்கு உடனடியா ஒரு வழி கண்டு பிடிக்கலேன்னா அரசாங்கம் விரிக்கிற வலையில இந்த ஜனங்க நிச்சயமா விழுவாங்க... உதவிப் பணம், வீடு, நிலம்னு அவங்க காட்டற ஆசையில இப்பவே நிறைய பேருக்கு ஒரு நோக்கம் விழுந்தாச்சு. அரசாங்கத் தொடர்பு ஏற்பட்டா, அப்புறம் நம்ம பிடிக்கு அடங்க மாட்டானுங்க... இதை ஆரம்பத்திலேயே கிள்ளணும்'' என்றான்.

குடிலின் வாசலில் நிழலாடியது. எல்லோரும் திரும்பிப் பார்க்க, அங்கே நாகராஜன் தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தான்.

பாஞ்சா அவனை ஏறிட்டுப் பார்த்து, ''என்ன செய்தி?'' என்று கேட்டான்.

''சந்திரகிரி கிராமம் புதுசா கட்டற அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிக்குள்ளே வருதாம்.... அதுனால கிராமம் முழுக்க தண்ணிக்குள்ள முழுகிப் போயிடுமாம்.... அங்க குடியிருக்கிற ஜனங்க எல்லாம் உடனே போய்த் தங்களோட பெயர்களைப் பதிவு செய்யணுமாம்... அவங்களுக்கு வேற இடத்துல வீடு கட்டித்தர ஏற்பாடு நடக்குதாம்...

''நீங்க தினமும் எங்க வீட்டுக்கு வந்து.....''

''என்ன! நான் பாட்டு பாட ணுமா?''

''ஊஹும்! கண்டல் செய்து தந்தால் போதும்.''





ஊர் முழுக்க தண்டோரா போடறாங்க'' என்றான் நாகராஜன்.

பாஞ்சா சுற்றியிருந்தவர்களைப் பார்த்து, ''நான் சொன்னது சரியாப் போச்சா?'' என்று கேட்டான்.

யாரும் பதில் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருக்க நாகராஜன் அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு, ''ஐயா, இந்த ஜனங்க அரசாங்கத்தின் கையில சிக்கிக்குவாங்கன்னு தானே பயப்படறீங்க...? இவங்களை இனி சந்திரகிரிக்கு விடாம இங்கேயே வச்சுக்கிட்டா என்ன?'' என்று கேட்டு பாஞ்சாவைப் பார்த்தான்.

அவன் கூறியதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். ''ஏண்டா உங்கிட்ட யாராவது யோசனை கேட்டாங்களா? வேலையை பாத்துட்டுப் போக மாட்ட?'' என்று அதட்டினான் ஒருவன்.

சிந்தனையோடு அமர்ந்திருந்த பாஞ்சா, திடீரென்று துள்ளி எழுந்தான். ஓடிச் சென்று நாகராஜனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''டேய், நீ பெரிய ஆளுடா...! உன்னை சாதாரணமா நெனச்சுட்டேன்...! இது இல்லியா சரியான யோசனை! வீரமாணிக்கத்தோட மவன்னு நிரூபிச்சுட்டே'' என்று அவன் தோளை உற்சாகமாகத் தட்டினான்.

''என்ன அண்ணே! நாகராஜன் உளறினதைக் கேட்டு இப்படிக் குதிக்கறீங்களே''? என்று ஒருவன் கேட்க.

பாஞ்சா அவனைப் பார்த்து, ''இவனுங்களை எல்லாம் மாளிகை கட்டியா குடியேத்தணும்... அதோப் பாரு, அந்த மலையில வெட்ட வெளியா கிடக்கிற இடமெல்லாம் இனி நமக்குத்தான்.... அங்க ஓலைக் குடிசை போட்டு எல்லோரையும் குடியேற்றிட்டா பிரச்சனை விட்டது. இதுக்குப் போய் இப்படி மண்டையைக் குழப்பிக்கிட்டு இருந்தோம் பாரு! கடைசியில ஒரு சின்னப் பயல் நமக்கு யோசனை சொல்லும் படி ஆச்சு'' என்று தலையிலடித்துக் கொண்டான்.

''அண்ணே, சொல்றதுக்கு சுலபமாத்தான் இருக்கு.... ஆனா, இங்க வந்து அவங்க காற்றைக் குடிச்சா உயிர் வாழ்வாங்க புராணகால முனிவர்கள் மாதிரி...? அரிசிக்கும், பருப்புக்கும் வழி என்னன்னு யோசிச்சீங்களா''?



"படிக்க வேண்டிய புத்தக மெல்லாம் எங்கே?"

"படிக்கட்டுலே இருக்கு."

என்று கேட்டான் ஒரு மீசைக்காரன்.

பாஞ்சா நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டான். "இது ஒரு பிரச்னையா...? நம்ம தொழில் விஷயமா ஆளுங்க வெளியே போறாங்க இல்லே... அவங்க திரும்பி வரும் போது அதையெல்லாம் வாங்கிட்டு, வந்துடப் போறாங்க" என்று நிதானமாகச் சொல்லி விட்டு 'ஓ'வென்று சிரித்தான். மற்றவர்களும் அவனோடு சேர்ந்து சிரித்தனர்.

பாஞ்சாவின் தோட்டத்தில், ஆங்காங்கே தீவட்டிகளைக் கொளுத்தி, தரையில் ஊன்றி வைத்துக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்த சந்திரகிரி கிராம மக்களில் ஒருவன், "இன்னைக்கு சந்திரகிரி முழுக்க தண்டோரா அடிச்சாங்களே, யாராவது என்ன விஷயம்னு கேட்டீங்களா...? எப்படியும் அணை கட்டியதும் சீக்கிரமே ஊர் முழுக்கத் தண்ணியில மூழுவப் போகுது.... பிறகு என்ன. சர்க்காரு தர நிலத்தையும், பணத்தையும் வாங்க எதுக்கு இந்த தயக்கம்...? பேசாம எல்லோருமா போயி நம்ம பெயர்களைப் பதிவு செய்துடலாம்" என்றான்.

"அடேய், நீ சுலபமா சொல்லிவேடா. சர்க்காரு பேச்சை நம்பி இருக்கிற பொழைப்பை விட்டுட்டா, அப்புறம் எவன் கிட்ட போய் கையேந்தி நிப்ப...? ஏதோ, தெய்வ புண்ணியத்துல பட்டினி இல்லாம காலம் கடத்தறோம். நல்லது பொல்லாததுன்னா முகம் சுளிக்காம பாஞ்சா பணம் தருவாரு. இதையெல்லாம் மறந்துட்டுப் பேசறியே?" என்று ஒரு முதியவர் அவனைக் கண்டித்தார்.

அதற்கு அந்த மனிதன், "நமக்கும் நிலம்னு இருந்தா அதுல ஏதாவது பயிர் செய்து பிழைக்கலாமே? எப்போதும் இன்னொருத்தரை நம்பிக்கிட்டு இருக்க வேண்டாமேன்னு நினைச்சேன்.... அதோட சர்க்காருக்குப் பயந்து எத்தனை நாள் இப்படித் தலை மறைவா இந்தத் தொழிலைச் செய்யறது?" என்று கேட்டான்.

அதைக் கேட்டதும் கூட்டத்தில் ஒருவன் உணர்ச்சி வசப்பட்டவனாக, "எலேய், எந்த சர்க்காரு வந்தாலும் பாஞ்சாவை அசைக்க முடியாது தெரிஞ்சுக்க... பாஞ்சா இருக்கிறவரை நம்மையும் ஒண்ணும் செய்ய முடியாது... பெரிய பேச்சு பேசறியே? நாம குடிக்கக் கஞ்சி இல்லாம தவிச்ச நேரத்துல எந்த சர்க்காரு வந்து உதவி செஞ்சது?" என்று பாய்ந்தான்.

மேற்கொண்டு யாரும் பேசவில்லை. வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர்.

வேலையை முடித்து விட்டு அவர்கள் வந்த போது, மற்றவர்களும் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாக இருந்தனர். மேற்குத் திசையில் சந்திரன் மறைந்து கொண்டிருந்தான். பொழுது விடிவதற்கு இன்னும் சிறிது நேரமே இருந்தது.

அவர்கள் அனைவரும், மீண்டும் குடிலுக்கு முன் வந்து நின்ற போது, சிரித்த முகத்துடன் வெளியே வந்த



"என்னடா உளர்றே...? பூனையை எலி கடிச்சிட்டுதா?"

"ஆமாம் காகிதப்பூனை பொம்மையை!"

பாஞ்சா அவர்களை அன்புடன் பார்த்து, ''அணை கட்டி முடியற நேரம் உங்க வீடு, வாசல் எல்லாம் தண்ணிக்குள்ள போயிரும்... அந்த என்ஜினியரு ஊரெல்லாம் என்னவோ தண்டோரா அடிக்கிறதா கேள்விப்பட்டேன்... உங்களைத் தந்திரமா அங்கேயிருந்து வெளியேற்றத் தான் அவன் திட்டம் போடறான். இதை முதல்ல புரிஞ்சுக்குங்க.... வீடு, நிலம், அது இதுன்னு ஆசை காட்டி வெளியேற்றிட்டு, அவன் வேலை முடிஞ்சதும் அம்போன்னு விட்டுட்டு போயிருவான்.... அவன் அரசாங்கத்தோட ஆள். அவன் பேச்சை நம்பி மோசம் போகாதீங்க'' என்றான்.

கும்பலாக நின்றவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். எல்லோர் முகத்திலும் பாஞ்சா தங்கள் மீது வைத்திருக்கும் பரிவை உணர்ந்ததால் ஏற்பட்ட நன்றியுணர்ச்சி நன்றாகப் பிரதிபலித்தது.

பாஞ்சா மேலும் தொடர்ந்து, ''ஆனால், நீங்க எதுக்கும் கவலைப் பட வேணாம். உங்களையெல்லாம் நானே வேற இடத்துல குடியேத்தறதா முடிவு பண்ணிட்டேன்'' என்றான்.

எல்லோரும் ஆவலுடன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, சற்று நேரம் அமைதியாக நின்ற பாஞ்சா, ''சந்திரகிரியில இருந்து இனி நீங்க இவ்வளவு தூரம் தினமும் மலையேறி வர வேண்டிய அவசியமில்லை. அதோட போலீசுக்குப் பயந்து, ராத்திரியோட ராத்திரியா வேலை செய்ய வேண்டியதுமில்லை... நீங்க எல்லோரும் இனி இங்கேயே குடி வந்துடலாம்... நாளைக்கே உங்க குடிசைகளை இங்கே போடற வேலையை ஆரம்பிக்கப் போறேன்'' என்று புன்னகைத்தான்.

அதைக் கேட்டதும் கூட்டத்தில் நின்றவர்கள் திகைப்படைந்தனர். ''இங்கேயா'' என்று சில குரல்கள் அதிர்ச்சியுடன் எழுந்தன. யாருமே அந்த யோசனையை மகிழ்ச்சியோடு வரவேற்கவில்லை என்பதை அவர்கள் குரலே காட்டிக் கொடுத்தன. பாஞ்சாவின் முகத்தில் ஆத்திரம் பொங்கியது. அவன் என்ன செய்வானோ என்று எல்லோரும் பயந்தனர்.

- -வளரும்.





★ கோமாளிகளுக்காக வெனிஸ் நகரில் ஒரு கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரியில் எப்போதும் சிரிப்புமயம்தான்! பபூன்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதுதான் இந்தக் கோமாளி கல்லூரி பேராசிரியரின் வேலை! இந்தக் கல்லூரியில் தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு உடனடியாக எந்த சர்க்கஸிலும் வேலை கிடைத்து விடுகிறது.

- சக்தி. கமலேஸ்வரன்,
சத்தியமங்கலம்.

இறுதி ஆசை

★ கிரேக்கத்தின் பெரும் சிறையில் சிறைப்படுத்தப்பட்ட சாக்ரடீஸ் தன் மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அப்பொழுது அவருடன் அந்தச் சிறையில் இருந்த மற்றொரு கைதி ஒரு பாடலைப் பாடினான். உடனே சாக்ரடீஸ் அந்தக் கைதியிடம் ஓடிச் சென்று அந்தப் பாடலைத் தனக்கு மீண்டும் ஒருமுறை பாடிக் காட்டுமாறு வேண்டினார்.

''மரண தண்டனைக் கைதியான உனக்குச் சாகப் போகும் நேரத்தில் இது எதற்கு?'' என்று ஏளனமாகக் கேட்டான் அந்தக் கைதி. இதைக் கேட்டு விட்டு, ''சாவதற்குள் இன்னும் ஒரு புதிய விஷயத்தைக் கூடுதலாகத் தெரிந்து கொள்ளலாமே!'' என்று பதில் கூறினார் கிரேக்க ஞானி சாக்ரடீஸ்.

எதையும் துருவித் துருவித் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதில்தான் எத்தனை ஆர்வம் அந்தத் தத்துவ மேதைக்கு!

- என் நாகராஜன், தேனி.

காட்டே கவிதாலயம்

★ லத்தீன் மொழியில் அருமையான கவிதைகளை எழுதியவர், ''ஜின் கான்டெல்.'' இவர் தமது கவிதைகளை காகிதத்தில் எழுதியது இல்லை. பிரான்ஸ் நாட்டில், தான் பிறந்த ஊருக்கு அருகிலுள்ள சான்டிலி காடுதான் அவரது கவிதா நிலையமாக இருந்தது. ஊசியினால் அங்குள்ள மரங்களில் தமது கவிதையை எழுதுவார். பிறகே நண்பர்களால் இவை பிரதியெடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன.

- என். நாகராஜன், தேனி.

சாகடித்த சங்கீதம்!



★ இத்தாலியிலுள்ள உடின் என்ற நகரத்தில் ஒரு பாப் இசை விழா நடைபெற்றது. அந்த இசை விழா நடந்து முடிந்ததும், இசை விழா நடந்த இடத்துக்கு அருகில் இருந்த கோழிப் பண்ணையில் இருநூறு கோழிகள் செத்துக் கிடந்தன! மின்சார கித்தார் வாத்தியங்கள் எழுப்பிய கிரீச்சிடும் ஓசைதான் அந்தக் கோழிகளின் சாவிற்குக் காரணம் என்று தெரியவந்தது. எனினும் கோழிப் பண்ணையின் சொந்தக்காரர் இதற்கு நஷ்டஈடு கோர முடியவில்லை. அவரும் பாப் சங்கீதப் பிரியர். அது மட்டுமல்ல, அந்த இசைவிழாவுக்கு ஏற்பாடு செய்தவர்களில் அவரும் ஒருவர்.

- எஸ். அரவிந்தன், ஆற்காடு.

சாதனை படைத்த சிறுவன்



★ நியூயார்க் பல்கலைக் கழகத்தின் 159 ஆண்டு கால வரலாற்றில் 13 வயதில் (உயிரியலில்) அறிவியலில் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ள சிறுவனின் பெயர் ''பால முரளி கிருஷ்ணா''. தனது அடுத்த இலட்சியம் மிக மிக இளம் வயதில் டாக்டர் ஆனவர் என்னும் பெருமை பெறுவதே என்கிறார். இந்த சாதனையாளர் 4 வயதாகிய போது இவருக்கு ''கால் குலஸ்'' - தண்ணி பட்டப்பாடு. 11 வயதில் நியூயார்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த போது ''வயதுக்கு மீறிய படிப்பால் அவனது ஆரோக்கியம் பாதிக்கக்கூடும்'' எனப் பயங்கரமாக ஆசிரியர்கள் எச்சரித்தார்களாம். ஆசிரியர்களின் கடும் எதிர்ப்பை சமாளித்து, விடாப்பிடி முயற்சி செய்ததே'' அவனுடைய வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. 3 வருடங்களுக்கு முன்னால் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் அவரது அண்ணனோடு சேர்ந்து ''எய்ட்ஸ் நோய்'' பற்றிப் புத்தகம் நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த இளஞ்சாதனையாளரின் பணிகள் வெல்க! தொடர்க! என நாமும் வாழ்த்துவோம்.

- சுகாராஜ், மதுரை.

வௌவால் சரணாலயம்



★ சாதாரணமாக சிங்கம், புலி, குரங்கு போன்ற விலங்குகளுக்குத்தான் சரணாலயம் அமைத்திருப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால், வௌவால்களுக்கும் ஒரு நாட்டில் சரணாலயம் அமைத்திருக்கிறார்கள்! அமைத்துள்ள நாடு பிரிட்டன்தான்! ஷீலா ரைட் என்பவர் இதை அமைத்துள்ளார். வௌவால்களுக்கு என்று மட்டுமே இருக்கும் சரணாலயம் உலகிலேயே இது ஒன்றுதான்!

- கே. எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.

ஜோக் அடிப்பதில் சாதனை

★ பலரும் பலவிதமான சாதனைகள் செய்து தங்கள் பெயரை கின்னஸ்ஸில் இடம் பெறச் செய்கிறார்கள். அந்த வரிசையில் யூகோஸ்லேவியா நாட்டைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்து 101 மணி நேரம் ஜோக்கடித்து சாதனை புரிந்தார். ஜோக் அடித்த அவருக்கு தாடை வலி ஏற்பட்டது! கேட்டுக் கொண்டிருந்தவருக்கு விலாவில் வலி ஏற்பட்டது. இவர் தொடர்ந்து ஒரு மணி நேரம் ஜோக் அடித்து விட்டு ஐந்து நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். இதற்கு முன்பு இவர் 74 மணி நேரம் ஜோக் அடித்து சாதனை புரிந்துள்ளார்.

- ஆர். மூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.



சபாஷ் இளங்கோ!

கிராமத்திலிருந்து நகருக்குச் சென்று படிப்பவன் இளங்கோ. அன்று பஸ்ஸில் நல்ல கூட்டம். இளங்கோவுக்கு உட்கார இடம் கிடைத்து விட்டது. கண்டக்டரிடம் தனது பாஸைக் கொடுத்து 'டிக்' வாங்கிக் கொண்டு ஆங்கிலப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

அடுத்த கிராமத்தில் சிறிது கூட்டம் ஏறியது. ஒரு பெண் கைக் குழந்தையுடன் ஏறினாள். இளங்கோ முன் சீட்டில் உட்கார்ந்திருந்ததாலும், ஈடு பாட்டோடு ஆங்கில பாடம் படித்துக் கொண்டிருந்ததாலும் எதையும் கவனிக்கவில்லை. பெண்ணிடமிருந்த அந்தக் கைக்குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை போல் இருக்கிறது. திடீரென்று வாந்தியெடுத்தது. பஸ்ஸில் நிற்கவும் முடியாமல், குழந்தையைப் பிடிக்கவும் முடியாமல் அந்தப் பெண் ரொம்பவும் கஷ்டப்பட்டாள். அவளுக்கு யாருமே உதவ முன்வரவில்லை. குழந்தையின் மீதும் அந்தப் பெண்ணின் சேலையெங்கும் வாந்தி வழிந்திருந்தது. பக்கத்தில் இருந்தவர் தன் செருப்பின் மீது கொஞ்சம் வாந்தி பட்டு விட்டதென்று திட்ட ஆரம்பித்து விட்டார். கூச்சல் கேட்டுத் திரும்பிப் பார்த்த இளங்கோவுக்கு நிலைமை தெரிந்தது. உடனே எழுந்து சென்று அந்தப் பெண்ணை அழைத்து வந்து தனது சீட்டில் உட்கார வைத்தான். நன்றிப் பார்வை அந்தத் தாயின் கண்களில் தெரிந்தது. குழந்தையையும் தன் புடவையையும் நன்கு துடைத்து விட்டாள்.

பஸ் சிறிது நேரத்தில் இரயில்வே கேட்டை அடைந்தது. இரயில்வே கேட் மூடியிருந்ததால் பஸ் சற்று நேரம் அங்கு நின்றது. எதிரேயிருந்த பெட்டிக் கடையில் கொஞ்சம் தண்ணீர் கேட்டு வாங்கி வந்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தான். குழந்தையின் வாயைத் துடைத்து விட்டு தன் கைகளையும் சுத்தப்படுத்திக் கொண்டாள் அந்தப் பெண். இதற்குள் இளங்கோ, கொஞ்சம் மண் எடுத்து வந்து வாந்தி இருந்த இடத்திலெல்லாம் போட்டான்.

அவன் பள்ளிக்கருகில் இறங்கும் வரை வாந்தியுள்ள இடத்தில் நின்று கொண்டு யாரும் அதை மிதித்து விடாமல் பார்த்துக் கொண்டான். இளங்கோவின் செயலை பஸ்ஸிலிருந்த அனைவரும் பாராட்டினர்.

மற்றவர்களுக்கு உதவும் பண்பு நமக்கு இளமை முதலே வர வேண்டியது அவசியமல்லவா?


- க. இராமலிங்கம், புதுப்பேட்டை.

''கவிதா! நம்ம வகுப்புக்கு ஓர் அழகான புதுமுகம், வராடி.''

கலா சொன்னதைக் கேட்டு ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள் ரேணு.

தூய சீருடையில் அழகு மாணவியாய் உள்ளே நுழைந்த கவிதாவையே எல்லோரும் வைத்தக் கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதில் ஒரு ஜோடிக் கண்கள் மட்டும் பொறாமையுடன் பார்த்தன. ரேணுகாதான் அது!



நான் ஏன் மன்னிப்பது?

கவிதா என்ற அந்தப் புதிய மாணவி, ரேணுகாவின் இருக்கைக்கு முன்பிருந்த இருக்கையில் இடம் காலி இருக்கவே அதில் அமர்ந்தபடி, சிநேகத்துடன் பிற மாணவிகளைப் பார்த்துச் சிரித்தாள். ரேணுவைத் தவிர பிற மாணவிகள் கவிதாவைச் சூழ்ந்துக் கொண்டு அவளைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

பணத்திலும், படிப்பிலும் முதலாக விளங்கும் ரேணுகாவிற்கு, புதிய மாணவி கவிதாவின் மேல் எரிச்சலாக வந்தது.

'புதுசா ஒருத்தி வந்திட்டா போதுமே அவகிட்டே எல்லோரும் ஓடிடுவாங்க. இந்தக் கலாவும் கூட அவங்களோட சேர்ந்துக்கிட்டாளே! ஏதாவது தேவைன்னா எங்கிட்டே தானே வந்தாகணும்? அப்போ இந்தக் கலாவை பார்த்துக்கறேன்', என்று ஆத்திரத்தில் கவிதா மனம் புழுங்கினாள்.

பள்ளிக்கூடம் விட்டதும் தனக்காகக் காத்திருந்த காரில் ரேணுகா ஏற முற்படுகையில் கலா மிக வேகமாக ஓடி வந்தாள்.

''என்ன ரேணு, இன்னைக்கு என்னை விட்டிட்டே போறே?''

''நீதான் அந்த புதுப்பெண் கவிதாவோட சேர்ந்திட்டயே. இனிமே அவளே உன்னை கூட்டிட்டுப் போவா. போய்க்க,'' என்று கோபத்துடன் கூறி விட்டுக் காரில் ஏற முயன்றவளின் கையைக் கலா கெஞ்சலுடன் பற்றிக் கொண்டு பின் தொடர்ந்தாள்.

''புரியாமே பேசாதே ரேணு. அந்தக் கவிதாவைப் பற்றித் தெளிவா விசாரிச்சி உங்கிட்டே சொல்ல வேண்டாமா...? அதுக்குத்தான் அவளிடம் பேசினேன். அவ உன்னைவிட ஒன்றும் பெரிய பணக்காரியில்லே. தெரியுமா?''

ரேணுகாவின் முகம் மலர்ந்தது. ''சரியா புரிஞ்சிக்காமல் பேசிட்டேன். காரில் ஏறு. வழியில் உங்க வீட்ல இறக்கிடச் சொல்றேன்.''

கலா காரில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

மாதத்தேர்வு முடிந்த பிறகு

மல்லிகா

விடைத் தாளை மாணவிகளிடம் கொடுப்ப தற்காக ஆசிரியர் மேசையின் மீது வைத்திருந்தார்.

மாணவிகளின் கண்கள் அந்த விடைத்தாளையே ஆர்வத்துடன் நோக்கிக் கொண்டிருந்தன.

ரேணுகாவோ, எப்போதும் போல் முதல் மதிப்பெண் நாம்தான் வாங்கப் போகிறோம் என்ற நம்பிக்கையுடன் கவிதாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்த மாதம் தேர்வில் யார் முதல் மதிப்பெண் வாங்கியிருப்பீங்கன்னு நினைக்கிறீங்க?'' - என்று கேட்டார் ஆசிரியர்.

ஆசிரியையின் கேள்விக்கு ரேணுகா பெருமையுடன எழுந்து நின்று,


''எப்போதும் போல நான்தாங்க மிஸ் வாங்கியிருப்பேன்,'' என்றாள்.

''அதுதான் இல்லை. இந்த முறை உன் இடத்தைக் கவிதா பிடித்து விட்டாள். நீ இரண்டாவது இடம்!''

அதிர்ச்சியுற்றவளாக கோபம், பொறாமை பொங்க அவமானத்துடன் ரேணு தலை குனிந்தாள். அழுவதற்கு முற்பட்டாள்.

கவிதாவின் முகம், ரேணுகாவின் அழுகையைக் கண்டதும் வாடியது.

அடுத்து வந்த சில நாட்களில் ரேணு, யாருடனும் பேசாமல் கோபத்துடனிருந்தாள். நட்பு முறையில் பேச வந்த கவிதாவை அலட்சியமாகப் பார்த்து விட்டு ஒதுங்கிக் கொண்டாள். கவிதா உள்ளம் வருந்தினாள்.



திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பா சமுத்திரத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஒரு ஊரின் பெயர் ''மாட்டு மந்தை''. விசித்திரமான ஊர் பெயர் இது.

- திருநெல்வேலி மாவட்டம்,
இ. ராதிகா அழகப்பன்.

ஆசிரியைகளும், பிற மாணவிகளும் கவிதாவைப் புகழ்ந்து பேசுவதைக் கேட்டு ரேணு பொறாமைப் பட்டாள். எந்தவகையிலாவது கவிதாவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற வன்மத்துடன் சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

கட்டுரைப் போட்டியில் மாணவிகள் கலந்துக் கொள்ளலாம் என ஆசிரியை அறிவித்ததும் கவிதாதான் முதலில் எழுந்து பெயர் கொடுத்தாள். ரேணுவும் போட்டியாகத் தன்னுடைய பெயரையும் கொடுத்தாள்.

கட்டுரைப் போட்டியை இருவருமே நன்றாக எழுதினார்கள். முதல் பரிசு கவிதாவுக்கும் இரண்டாவது பரிசு ரேணுவுக்கும் தான் கிடைத்திருந்தது.

தலைமை ஆசிரியை மைக்கில் பேசி முடித்துவிட்டு, இருவருக்கும் பரிசு வழங்கினார். ரேணுகா சோர்ந்த முகத்துடன் இரண்டாவது பரிசைப் பெற்றுக் கொண்டு தனிமையில் அமர்ந்து ஆத்திரம் தீர அழுது முடித்தாள்!


கட்டுரைப் போட்டியைத் தொடர்ந்து ஓட்டப்பந்தயமும் மற்ற விளையாட்டுப் பந்தயங்களும் நடக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அறிவிப்பு ரேணுவிற்கு சிறு தெம்பைக் கொடுத்தாலும், 'இதிலும் கவிதா முதல் பரிசைத் தட்டிச சென்று விட்டால் என்ன செய்வது?' என்று அவள் சிந்திக்கத் தொடங்கினாள்! சிந்தனையின் முடிவில் பழிவாங்கும் எண்ணம் மேலோங்கி, அதை நிறைவேற்றிக் கொள்ள ஒரு திட்டமும் தீட்டியது.

ரேணு தன்னுடைய முடிவைச் சொன்னதும் கலா திடுக்கிட்டு மறுத்தாள். ரேணு கேட்கவில்லை. ஒரே பிடிவாதமாக இருந்து ரேணு கலாவைத் தன் திட்டத்திற்குச் சம்மதிக்க வைத்தாள்.

அன்று மாலையில் பள்ளி விட்டதும் ரேணு, மிக வேகமாக முன்பே கிளம்பிவிட்டாள்.

கலா தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு, மிக அவசரமாகச் செல்வதைக் கண்டு அங்கிருந்தவர்கள் குழம்பினர். இருவரும் ஒன்றாக ரேணு



வின் காரில் செல்பவர்கள் ஆயிற்றே!

கவிதா தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்ததும், கலாவும் அவளைப் பின் தொடர்ந்தாள். கவிதா கலாவைப் பார்த்து நட்பு முறைச் சிரிப்பு ஒன்றைச் சிரித்தாள்.

''என்ன கலா இன்னைக்கு நடந்து வர்றே? ரேணுவோட கார் வரலியா?''

''இன்னைக்கு கார் ரிப்பேராம். அதனாலே சைக்கிள் எடுத்திட்டு வந்து, அதிலையே போயிட்டா.''

''உங்க வீடு ரொம்ப தூரமா?''

''கொஞ்ச தூரம் நடக்கணும். தனியா போகக் கஷ்டமாயிருக்கு சைக்கிளை தள்ளிக்கிட்டே நீயும் எங்க வீடு வரை வாயேன்? பிறகு உங்க வீட்டுக்கு அங்கிருந்து குறுக்கு வழியிலே சீக்கிரமா போயிடலாம்.''

இருவரும் பேசிக்கொண்டே நடந்தனர். கலாவின் இதயம் பயத்துடன் அடித்துக் கொண்டது. ஜனநடமாட்டம் அதிகமில்லாத ஒரு பகுதிக்கு வந்ததும் தன்னுடைய வீடு அங்கு இருப்பதாகப் பொய் கூறிவிட்டு, கவிதாவிற்கு நன்றி கூறி விடை பெற்றாள் கலா.

குறுக்கு வழியில் சைக்கிளில் விரைந்தாள் கவிதா.

சிறிது தூரம் சென்றதும் வைக்கோல் நிறைந்த பகுதியில் அவளது சைக்கிளின் சக்கிரம் பதியவே, தோண்டி வைத்திருந்த குழியில் 'சைக்கிளோடு 'வீல்' என்ற அலறலுடன் கவிதா குப்புற விழுந்தாள்.

அந்த வழியே சென்று கொண்டிருந்த ஒருவர் கவிதாவின் அலறலைக்கேட்டு விரைந்து வந்து மேலே தூக்கிவிட்டார். கவிதாவின் காலில் அடிபட்டிருப்பதைக் கவனித்து அவளை மெதுவாக சைக்கிளில் உட்காரவைத்து மருத்துவமனைக்கு ஓட்டிச் சென்றார்.

கவிதா, தொடர்ந்தாற் போல் அடுத்த இரண்டு நாட்களும் பள்ளிக்கு வராமல் போகவே, குற்ற உணர்வால் கலாவும் ரேணுவும் தவித்தார்கள்.

வேறொரு மாணவி வழிகாட்ட இருவரும் கவிதாவின் வீட்டுக்கு வந்தனர். வாசலின் வெளிக் கதவில் உள்ள காலிங் பெல்லைத் தயக்கத்துடன் அழுத்திவிட்டு பயத்துடன் இருவரும்



சிரிப்பு நோய்

உலகிலேயே நியூகனி தீவு பகுதியில் மட்டும் ஒரு வினோதமான வியாதி காணப்படுகின்றது. சிரிப்பு நோய் என்று பெயர். இந்த நோய் கண்டவர்கள் விடாமல் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். இதற்கு சிகிச்சையே கிடையாது. இந்த நோய் வந்து விட்டால் சிரித்துச் சிரித்துச் சாவதைத் தவிர வேறு வழியே இல்லையாம்.

- க. இரா. விஜயகுமார், செஞ்சி - 2.

வெளியே நின்று கொண்டிருந்தனர்.

கதவைத் திறந்த கவிதாவின் தாயார், இருவரையும் பார்த்துத் திகைத்தார். இருவரும் அணிந்திருந்த சீருடையைப் பார்த்ததும் புரிந்து கொண்டார்.

''வாங்கம்மா உள்ளே! கவிதாவை பார்க்கணுமா? உள்ளேதான் படுத்திருக்கா!''

அன்பு பொங்க வரவேற்ற அவரது முகத்தை நிமிர்ந்து பார்க்கத் துணிவில்லாது இருவரும் சென்றனர். தனி அறையில் கவிதா படுத்துக்கொண்டு பாடப்புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். இருவரையும் வரவேற்றாள்.

என்ன கேட்பது என்ன பேசுவது என்று தெரியாது இருவரும் குழம்பினர்.

''உன்னைப் பார்க்கத்தான் நானும் கலாவும் வந்தோம். கால் எப்படியிருக்கு? என்று ஒரு வழியாகக் கேட்டு வைத்தாள் ரேணு.

''பரவாயில்லே. இன்னும் இரண்டு நாள்லே நடக்கலாம்னு டாக்டர் சொல்லிட்டார்.''

''என்னையும், கலாவையும் மன்னிப்பியா....?'' என்று குரல் கம்ம வினவிய ரேணுவை கவிதா ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''நான் ஏன் உங்களை மன்னிப்பது?''

''நீ ஓட்டப்பந்தயத்திலே கலந்து கொண்டு என்னைத் தோற்கடிக்கக் கூடாதுன்னு நினைச்சேன். நீ விழுந்த குழியில் வைக்கோலைப் போட்டு முன்னதாகவே மூடி வைச்சிட்டேன். என் கட்டாயத்தின் பேரில் கலாவும் உன்னை ஏமாற்றி அந்த வழியில் கூட்டி வந்திருக்கிறாள். ஆனால், இந்த அளவிற்கு எல்லாம் விபரீதமாப் போகும்னு நாங்க நினைக்கவே இல்லை. நாங்க இரண்டுப் பேரும் திருந்திவிட்டோம். செய்த குற்றத்திற்கு தண்டனையா நாங்களும் எந்தப் பந்தயத்திலேயும் கலந்துக்கப் போறதில்லை. எங்களை மன்னிப்பியா கவிதா?'' என்று கெஞ்சிய ரேணுவைப் பார்த்து கவிதா புன்னகைத்தாள்.

''நீங்க இரண்டுபேரும் மனம் திருந்தி எங்கிட்டே பேச வந்திருக்கீங்க. அதுவே எனக்கு மகிழ்ச்சியா இருக்கு'' என்ற கவிதாவை கலா நம்பமுடியாமல் பார்த்தாள்.

''ஒரு உண்மை உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. என்னால் ஓட்டப் பந்தயம் எதிலும் கலந்து கொள்ள முடியாது. இதோ பாருங்க.''-

பரிதாபத்துடன் தன்னுடைய செயற்கைக் கால் பொருத்திய வலது காலைத் தூக்கிக் காட்டியதும் ரேணுவும் கலாவும் அதிர்ச்சியடைந்தனர்.

''ஒரு வருடத்துக்கு முன் ஒரு கார் விபத்தில் எனக்கு வலது கால் போய்விட்டது. செயற்கைக் காலோடு நான் இருப்பது பலருக்குத் தெரியாது.

''இனிமே கலாவும், நானும் உனக்கு நல்ல தோழிகளா இருப்போம். நமக்குள் இனிமே போட்டி பொறாமையே வராது.''

ரேணுவின் பேச்சு கவிதாவை மகிழ வைத்தது.

''படிப்பிலே கண்டிப்பாகப் போட்டியிருக்கணும், அப்போதுதான் நல்லா படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். போட்டி பொறாமையா மாறக்கூடாது. நம்மைப் போல் படிக்கிற மாணவிகளிடம் இந்த உயர்ந்த எண்ணம் இருக்க வேண்டும்'' என்று கவிதா பேசி முடித்து புன்னகைக்கவும், கவிதாவின் தாய் காப்பியுடன் சிரித்தவாறு அறையினுள் நுழையவும் சரியாக இருந்தது. கலாவும், ரேணுவும் மறுக்காமல், குற்ற உணர்வு நீங்கியவர்களாக காப்பியை ரசித்துக் குடித்தனர்.

நான ஏணி!

வாசலில் 'கிணிங்... கிணிங்...' என்ற சைக்கிள் மணியின் அழைப் பொலி. தொடர்ந்து, ''சார் பேப்பர்!'' என்ற மாணிக்கத்தின் அறைகூவல்.

பேப்பரை வாங்கிப் பிரித்தார் ஆசிரியர் வேலுமணி சார்.


''ஒரு சின்ன உதவி சார்...'' என்று தயக்கத்துடன் நின்றான் மாணிக்கம்.

''என்ன வேணும்ப்பா? தாராளமாக் கேளு!''

''உயர்நிலைப் பள்ளி மாணவர் களுக்கு நடத்தின பேச்சுப் போட்டியிலே மாவட்ட அளவில் நான் முதல் பரிசு வாங்கினது உங்களுக்குத் தெரியும். மாநில அளவிலான போட்டி நாளக்குத் திருச்சியிலே நடக்கப் போகுது. அதுக்கு அறிமுகக் கடிதம் ஒன்று தேவைப்படுது. தலைமையாசிரியர் விடுப்பில் வெளியூர் போயிட்டாராம்; வகுப்பாசிரியர் என் கிற முறையிலே நீங்க ஒரு கடிதம் கொடுத்தாலும் போதும் சார்!''

''அதுக்கென்ன? இப்பவே வாங்கிக் கொண்டு போயிடு,'' என்று கூறிக் கடி தத்தை எழுதிக் கொடுத்த வேலுமணி சார், ''நிச்சயம் முதல் பரிசு உனக்குத் தான்; சந்தேகமில்லே. ஆனா, இங்கி ருந்து திருச்சிக்குப் போயிட்டு வர இருபது ரூபாய் பிடிக்குமே? நீயோ கஷ்டப்பட்டு வேலை பாத்துப் பணம் தேடி, அதை வச்சுப் படிக்கிறவன்; இந்த மாதிரிச் செலவுகளையெல்லாம் எப்படி உன்னாலே சமாளிக்க முடியும்? உள்ளூ ரிலே நடக்கிற போட்டிகளானா பரவா யில்லே; தூரத்து ஊர்களுக்கெல்லாம் போயி... வந்து... இந்தப் போட்டி களிலே அப்படி என்ன பிரமாதப் பரிசு களைத் தரப் போறாங்க?'' என்று தன் அதிருப்தியை மறைமுகமாகக் கோடிட் டுக் காட்டினார்.

''பரிசாக் கிடைக்கிற பொருள்



குரு சீனிவாசன்

முக்கியமில்லே; நம்ம திறமையும், அதைப் பயன்படுத்துற முயற்சியும், அதுக்குக் கிடைக்கிற வெற்றியும்தான் முக்கியமுன்னு நீங்கதானே சொல்லு வீங்க சார்! ஒரு சின்னப் பேனா கிடைச் சாலும் அது நம்ம திறமையாலே பெற்ற துன்ன நினைச்சா, எவ்வளவு சந்தோ ஷமா இருக்கு! செலவு என்ன சார் பிரமாதம்? என் கை கால்கள் நல்லா இருந்தா எவ்வளவோ சம்பாதிப் பேன்?''

கோல்டன் கழுகு



'**கோ**ல்டன் கழுகு' வெவ்வேறு இடங்களில் இரண்டு கூடுகள் கட்டும். ஒரு கூட்டில் ஓர் ஆண்டும், இன் னொரு கூட்டில் இன்னோர் ஆண்டும் மாறி மாறி வசிக்கும்! தொடர்ந்து ஒரே கூட்டில் வசிக்காது!

- அகரம். ஆர். சத்தியன்.

அவன் பேச்சைக் கேட்கக் கேட்கப் பெருமிதத்தால் துள்ளியது அவர் மனம்.

ஆசிரியர் வேலுமணி சார் மாணிக்கத்தை நன்றாகவே அறிந்து வைத்திருந்தார். அவன் அவரிடம்தானே ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறான்?

குடும்பத்தைக் கவனிக்காமல் எங்கோ கண்ணுக்குக் காணாமல் போய் விட்ட குடிகாரத் தகப்பன், கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவும் ஏழைத் தாய். இந்தக் குடும்பத்தின் ஒரே பிள்ளைதான் மாணிக்கம்! கலைமகளின் கருணைப் பார்வை - மாணிக்கத்தின் ஆர்வமும் உழைப்பும்! இவற்றில் எது காரணமோ— படிப்பில் மட்டுமல்ல; பேச்சு, எழுத்து, ஆடல், பாடல் என்று அனைத்து அம்சங் களிலும் மாணிக்கத்தைப் பின்னுக்குத் தள்ள அந்தப் பள்ளியில் எந்த மாண வனும் இதுவரை இல்லை!

காலையில் பள்ளி செல்லுமுன் சைக்கிளில் போய் வீடுகளுக்குப் பேப்பர் போடுவான். மாலையில் பள்ளி முடிந்ததும் பேக்கரி ஒன்றிலிருந்து சில வாடிக்கை வீடுகளுக்கும் கடைகளுக் கும் பிஸ்கட், ரொட்டி போன்றவற்றை விநியோகம் செய்வான். இந்த வகையில் மாதம் நூறு, நூற்றைம்பது என்று கிடைப்பதால், அவன் தன் தாய்க்கு உதவியாக இருந்தானே தவிர, ஒரு போதும் சுமையாக இருந்ததில்லை!

இரண்டு நாட்கள் கழித்து அதி காலை நேரம்; பேப்பர் போட வந்த மாணிக்கம் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். பேச்சுப் போட்டி குறித்து வேலுமணி சார் விசாரிக்கு முன்பே அவன், ''முதல் பரிசு எனக்குத் தான் சார்!'' என்று தன் கால் சட்டைப் பையிலிருந்து ரிப்பனில் கோர்க்கப் பட்ட தங்கப் பதக்கம் ஒன்றை எடுத்துப் பணிவோடும் பக்தியோடும் அவரிடம் கொடுத்தான். வேலுமணி சாரின் விழிகளில் வியப்பும் மகிழ்ச்சியும் மேலோங்கி நின்றன.

''எல்லாம் உங்க ஆசியும் அன்பும் தந்ததுதான் சார்! எனக்கு அப்பா, ஆசிரியர், வழிகாட்டி எல்லாமும் நீங்க தான்'' - சொல்லும்போதே மாணிக்கத் தின் நாக்குத் தழுதழுத்தது.

''இல்லே மாணிக்கம், உன் ஆர்வ மும் கடின உழைப்பும்தான் இந்த வெற் றிக்கெல்லாம் காரணம்.''

''சார் நான் மத்த வீடுகளுக்குப் பேப்பர் போடப் போகணும். இந்தப் பதக்கம் உங்ககிட்டே பத்திரமா இருக் கட்டும். நான் வரேன்.''

''ஏம்ப்பா இங்கே கொடுத்துட்டுப் போறே? நீயே கொண்டு போ!'' — அவனிடம் நீட்டினார் வேலுமணி.

''எங்க குடிசையிலே வச்சுக்க, அங்கே பாதுகாப்பு ஒண்ணுமில்லே சார்!''

''அப்படின்னா இங்கே இருக் கட்டும்''. மாணிக்கம் சைக்கிள் ஏறிப் புறப்பட்டான்.

'பாவம் ; வாங்கிய பரிசை வைக்கக் கூடப் பாதுகாப்பான இருப்பிடம் இல்லாத ஏழ்மை! இப்படிப்பட்ட மணி யான பிள்ளையின் அருமை பெருமை களைப் பார்த்துச் சந்தோஷப்பட அந்தத் தகப்பனுக்குக் கொடுத்து வைக்கவில் லையே!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு பச்சாதாபப்

பட்டார் வேலுமணி.

கோடை விடுமுறைக்குப் பின் பள்ளி திறந்த முதல் நாள். தலைமையாசிரியர்தான் கூட்டிய ஆசிரியர் கூட்டத்தில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார்.

''நகரில் உள்ள நிதி நிறுவனம் ஒன்று தன் அறக்கட்டளை மூலமாக மிகவும் ஏழை மாணவன் ஒருவனைத் தேர்ந்தெடுத்து, அவனது கல்விச் செலவு முழுவதையும் வழங்க முன்வந்துள்ளது. ஆசிரியர்கள் தகுதியுள்ள மாணவர்களைச் சிபாரிசு செய்யலாம்!''

அறிவிப்பைக் கேட்டதுமே வேலுமணி சாரின் மனக்கண் முன்பு வந்து நின்றவன் மாணிக்கம்தான். அவர் சட்டென்று எழுந்து அந்தக் கூட்டத்திலேயே மாணிக்கத்தின் குடும்ப நிலை, ஏழ்மை, படிப்பில் அவனுக்குள்ள ஆர்வம், கடின உழைப்பு ஆகிய அனைத்து விவரங்களையும் எடுத்து






ஆப்பிரிக்க நெருப்புக் கோழி

ஒரே கால் உதையால் நெருப்புக் கோழியால் மனிதனைக் கொன்று விட முடியும்!


- அகரம். ஆர். சத்தியன்.



முதலைக் கறி என்ன விலை?

உலகிலேயே முதலைக் கறியை விரும்பிச் சாப்பிடும் மக்கள் பிரான்ஸ் நாட்டிலும், இங்கிலாந்திலும்தான் இருக்கிறார்கள். இங்கே முதலைக்கறி விற்பனைக் கடைகளும் அதிகம் உள்ளன. ஒரு கிலோ முதலைக் கறி 32 ரூபாய்தான்.

- அகரம். ஆர். சத்தியன்.



12 கால் சிலந்தி

அண்டார்ட்டிக் கடலில் ஒரு அபூர்வமான சிலந்திப் பூச்சி காணப்படுகிறது. இதற்கு மொத்தம் 12 கால்கள் உண்டு. தனித்தனியாக கண், காது, வாய் என்றும் ஏதுமில்லை எல்லாமே கால்கள்தான். இதற்கு மிகக் கடுமையான விஷத் தன்மையுள்ளது. பார்ப்பதற்கு சிவப்பு நிறமாக இருக்கும்.

- அகரம். ஆர். சத்தியன்.

விளக்க ஆரம்பித்தார். எந்தவொரு ஆசிரியரும் அவரது கருத்துக்கு எதிர்ப்புக் கூறவில்லை. ஏகோபித்து அவர் கருத்தை ஆதரித்தனர். மாணிக்கத்தை அறியாத ஆசிரியர்கள் அந்தப் பள்ளியில் யார் இருக்கிறார்கள்?

இறுதியில் அவன் பெயரே ஏற்றுக் கொள்ளப்பட்டது!

கூட்டம் முடிவுற்று வெளியே வந்ததுமே வேலுமணி சார், மாணிக்கத்தை அழைத்து வரச் சொல்லி, அந்த மகிழ்ச்சிச் செய்தியைக் கூறினார். அதைக் கேட்டு அவன் மிகவும் ஆனந்தப் படுவான் என்று எதிர்பார்த்தவருக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது! அவன் முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளம் மருந்துக்குக் கூட இல்லை!

''இந்த உதவியை என்ன காரணத்துக்காகக் கொடுக்கிறாங்க சார்?'' — அவன் கேள்வியில் ஓர் ஆவலும், அதே சமயம் நிதானமும் ஒருசேரத் தொனித்தன.

''மிகவும் ஏழைப் பையன் என்பதற்காகத்தான்.''

''அப்படியானால், இந்த உதவியே எனக்கு வேணாம் சார்!''

எதிர்பாராத அவனது இந்த மறுமொழியைக் கேட்டு அப்படியே அதிர்ந்து போய் விட்டார் வேலுமணி சார். ஆனாலும், பொறுமையை வரவழைத்துக் கொண்டு, ''மாணிக்கம், உன் புத்தி என்ன மழுங்கிப் போச்சா?'' என்று கேட்டார்.

''சார், நான் ஒண்ணும் ஏழையில்லையே? உடம்பிலே உறுதியும், மனசிலே ஆர்வமும், உங்களைப் போல் தெளிவான வழிகாட்டலும் இருக்கிறவரைக்கும் நான் எப்படி ஏழையாக முடியும்னுதான் கேட்கிறேன்?''

''ரொம்பப் பெரிய மனுஷன் போலப் பேசாதே! இவ்வளவு பெரிய உதவி தங்களுக்குக் கிடைக்காதா'ன்னு எத்தினி பேர் ஏங்கிக் கிடக்கிறாங்க தெரியுமா? உனக்கு இதை வாங்க நான் செய்த பிரயத்தனம் எனக்கில்லே தெரியும்? படிப்புக்காக எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கிறவன் நீ. தானா வருகிற இந்த உதவியை வச்சி, நல்லாப் படிச்சி முன்னேறலாம் இல்லையா?''

''மன்னிக்கணும் சார்; நான் என் படிப்புக்காகச் செலவழிக்கும் பணத்

திலே ஒவ்வொரு காசையும் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறேன் என் பதை நல்லா உணர்ந்ததினாலேதான் சிரத்தையோடு படிச்சு முன்னுக்கு வந்திட்டிருக்கேன். படிக்கிற புத்தகத் தின் ஒவ்வொரு எழுத்தும், எழுதும் பேனாவின் ஒவ்வொரு சொட்டு மையும் என் சொந்த உழைப்பால் சம்பாதிச் சவை'ன்னு நினைக்கும்போது எனக்குப் படிப்பில் ஏற்படுற ஆர்வமும் அக்கறை யும், உடம்பை வளைக்காமே மத்தவங்க ஏழைன்னு பரிதாபப்பட்டுத் தரும் உதவியிலே படிக்கிறப்போ நிச்சயம் ஏற்படாது.''

அவன் சொற்கள் உண்மையிலேயே உணர்ச்சிப் பிழம்புகளாக வெளிவந்தன.

''அப்படி நெனச்சா, பரிசுகளுக்கு ஆசைப்பட்டு ஊரு விட்டு ஊரு, நகர் விட்டு நகருன்னு போட்டிகளுக்காக ஓடுறியேப்பா; அது எதிலே சேர்த்தி?'' குத்தலாகக் கேட்டார் வேலுமணி சார்.


''உங்களுக்குத் தெரியாதது ஒண் ணும் இல்லே சார்! உதவி என்பது வேறு, பரிசு என்பது வேறு இல்லையா? நம்ம திறமைக்கும் உழைப்புக்கும் கிடைக்கிற சன்மானம்தான் பரிசு! ஒருத்தனுடைய ஏழ்மை, இயலாமை போன்ற நிலைமை களைப் பார்த்து இரக்கப்பட்டு ஒருத்தர் நமக்குக் காட்டும் பரிதாபம்தான் உதவி'ங்கிறது. நான் வாங்குற பரிசுகள் என்னை ஊக்கப்படுத்தி மேலும் உழைப் பதற்குத் தூண்டும். ஆனா, நீங்க இப்போ எனக்கு வாங்கித் தருகிற இலவசப் படிப்புதவி என்னைச் சோம்பேறியாத் தான் மாத்தும்.''

வேலுமணி சாரால் ஒன்றுமே பேச முடியவில்லை. 'இந்தச் சின்ன விஷயம் கூட இதுவரை நமக்குத் தெரியாமல் போய் விட்டதே?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு, விழிகள் வியப்பால் விரிய மாணிக்கத்தை நோக்கினார்.

''கடைசியா ஒரு வேண்டுகோள் சார்! ஏழை மாணவங்க எல்லாருக்கும் அறிவையும் திறமையையும் கண்டறிய ஒரு போட்டிப் பரீட்சை நடத்தட்டும். நான் அதுலே கலந்துக்கிட்டு அந்தப் படிப்புதவியை வாங்க முயற்சி செஞ்சி பாக்கிறேன். ஆனா, ஏழைன்னு பரி தாபப்பட்டு, அதுக்காகவே நீங்க சிபாரிசு பண்ணி வாங்கிய இந்தப் படிப் புதவியை ஏற்காமே மறுக்கிறதுக்காக என்னை மன்னிச்சுடுங்க! என் முன் னேற்றத்திலே நீங்க வச்சிருக்கிற அன்புக் கும் அக்கறைக்கும் என்னாலே கைமாறு செய்ய முடியாது. ரொம்ப நன்றி சார்!'' என்று பணிவுடன் கூறி விட்டுக் கை கூப்பி வணங்கினான் மாணிக்கம்.

வேலுமணி சாரால் அதற்கு மேலே என்ன பேச முடியும்?

அதிசயக் கட்டம்



நேர்வச படுக்கைவச வெள் ளைக் கோடுகள் சந்திக்குமிடத்திலே இலேசான கரும்புள்ளிகள் உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா? உண்மை யில் புள்ளிகள் எதுவும் அங்கே இல்லை!


- அகரம். ஆர். சத்தியன்.

எலி புராணம்!

ஒரு ஜோடி எலிகள் ஒரு ஆண்டில் 1270 குட்டிகள் போடும்! ஆறு எலிகள் ஒரு மனிதனுக்குத் தேவையான உணவைத் தின்று தீர்த்து விடும்!

- அகரம். ஆர். சத்தியன்.





வர வர மாமியார்...

ஒரு வயதான மாமியாருக்கும் மருமகளுக்கும் அடிக்கடி சண்டை வரும். மருமகள் சூழ்ச்சி செய்து எப்படியாவது தன் மாமியாரைக் காட்டுக்குள் விட்டுவிட்டு வந்துவிட வேண்டும் என முடிவு கட்டினாள். ஒரு நாள் ஒரு தூக்கில் பால் சாதமும், ஒரு தூக்கில் களிமண்ணும் கட்டி மூடக் கணவனிடம் கொடுத்து, களிமண் தூக்கை மாமியாரிடம் கொடுத்து விட்டு, மாமியாரைக் காட்டில் விட்டுவிட்டு வந்து விடும்படி கூறினாள். மூடக் கணவனும் தன் தாயைக் காட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு, தவறுதலாக மண் தூக்கை எடுத்து வந்து விட்டான்.

இச் சூழ்ச்சியை அறியாத தாய் மகன் தன்னை நிர்க்கதியாக விட்டு விட்டுச் சென்றதை அறிந்ததும் வருந்தி அழுதாள். இரவில் ஒரு தேவதை வந்தது. தாயின் கையில் இருந்த பால் சாதத்தை உண்டு, தாய்க்கு இளமையையும், செல்வத்தையும் தந்தது. தாய் வீடு திரும்பினாள். மருமகளின் பொறாமை அதிகரித்தது.

தன்னுடைய தாயையும் இதுபோல் இளமையாக்கிக் கொண்டு செல்வத்துடன் கூட்டி வர வேண்டும் என்று கணவனைத் தொந்திரவு செய்தாள். அவளுடைய பிடிவாதம் தாங்காது, கணவனும் தன் மாமியாரைக் கூட்டிச் சென்றான். இம்முறை தவறுதலாக களி மண் தூக்கைக் கொடுத்துவிட்டு பால் சாதத் தூக்கை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டான்.

இரவில் தேவதை வந்தது. மாமியார் தானே தேவதையை அழைத்து தூக்கைக் கொடுத்தாள். தேவதை தூக்கை வாங்கித் திறந்து பார்த்தது. அதில் களிமண் இருந்ததைக் கண்டு கோபம் கொண்டு மாமியாரை சிறிது சிறிதாகக் கழுதையாகப் போகுமாறு சாபமிட்டது.

தன் மாமியாரை அழைத்துப் போக வந்த மருமகன், மாமியார் வீட்டுக்கு அருகே வரும்போது சிறிது சிறிதாகக் கழுதையாக மாறுவதைக் கண்டான். வீட்டுக்கு வந்தவுடன் மனைவி ''ஐயோ! என்ன நடந்தது?'' என்றாள்.

உடனே கணவன், ''வரவர மாமியார் கழுதை போலானாளாம்'' என்றான்.


ஈ. இராமநாதன்.

சிப்பிக்குள் முத்து

ஆழி


வைரம், மரகதம், கோமேதகம், நீலம், வைடூரியம், புஷ்பராகம், பவளம், மாணிக்கம், முத்து ஆகியவை நவரத்தினங்கள். முத்துச் சிப்பியிலிருந்து முத்து கிடைக்கிறது!

சிப்பிகளில் 2½ செ.மீ. முதல் 1 மீட்டர் வரை வளரக் கூடிய சுமார் 100 வகைகள் இருக்கின்றன. சிப்பிகளின் ஓடு இரு பகுதிகளால் ஆனது. இரு பகுதிகளும் ஓரத்தில் ஓரிடத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. சிப்பிகள் நீரில் உள்ள ஆக்ஸிஜனைக் கிரகித்துக் கொள்ளுகின்றன.






சிப்பிகளில், ஆண், பெண் என்று தனித் தனியாக இல்லை. ஒரே சிப்பி, ஒரு பருவத்தில் ஆணாக இருக்கும்; மறு பருவத்தில் பெண்ணாக மாறிக் கொள்ளும்!



ஓர் ஆண்டில் ஒரு சிப்பி சுமார் 5 கோடி முட்டைகள் இடும்! முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுக்கு ஓடு இருக்காது. ஆனால், ஒரே நாளில் ஓடு உருவாகிவிடும்!




ஏதோ ஒரு சிறிய பொருள், முத்துச்சிப்பிக்குள் புகுந்துவிடும். அந்தப் பொருள் ஒரு சிறிய மணலாகவும் இருக்கலாம்; அல்லது ஒரு சிறிய புழுவாகவும் இருக்கலாம். உள்ளே புகுந்த 'அது' உறுத்திக் கொண்டே இருக்கும் போது, சிப்பி, அதைச் சுற்றி ஒரு சுவர் அமைக்கும். இப்படியே ஒவ்வோர் அடுக்காகப் படிந்து, உருண்டை வடிவம் பெற்று முத்தாகிறது! இது இயற்கை முத்து.

முத்தில் 95 சதவீதம் 'கால்சியம் கார்பனேட்' என்னும் சுண்ணாம்புச் சத்து தான் உள்ளது. ஒரு முத்தின் சாரம் ஒரு துண்டு சாக்கட்டியில் உள்ளது தான்!

... ஆனாலும், அந்த 'கால்சியம் கார்பனேட்'டைக் கொண்டு மனிதன் முத்தை உருவாக்க முடியாது!


தூத்துக்குடியில் முத்துக் குளிக்கிறார்கள். உலகில் அதிகமாக நல்ல முத்துக்கள் பாரசீக வளைகுடாவில்தான் கிடைக்கின்றன. ஒவ்வொரு கோடையிலும் ஆயிரக்கணக்கான முத்துக் குளிப்பவர்கள் முத்தெடுக்கிறார்கள். ஒரு பருவத்தில் 50 லட்சம் முத்துக்கள் எடுக்கப்படுகின்றன. 3000 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி முத்து எடுத்தார்களோ அதே முறையில் தான் இன்றும் எடுக்கிறார்கள்!




படகில் இருப்பவருடன் கனமான உருளை கட்டப்பட்ட ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண் ஓர் இலேசான கூடையுடனும் கூரிய கத்தியுடனும் முத்துக் குளிப்பவர் நீரில் மூழ்குவார். 50 அல்லது 60 அடி ஆழம்வரை மூழ்குவார். தன்னால் முடிந்த அளவு சிப்பிகளைக் கூடையில் சேகரித்துக் கொள்ளுவார். மேலே படகில் இருப்பவர் அவரை மேலே இழுப்பார். ஒரு கூடைச் சிப்பிகளில் ஒரு முத்து இருந்தாலே அதிர்ஷ்டம்தான்! முத்து சேகரித்தவரை கடலின் அடியிலிருந்து ஒரேயடியாக மேலே தூக்கிவிடக் கூடாது. ரத்த அழுத்தம் பாதிக்கப்படும். எனவே 30 அடிக்கு ஒரு தடவை நிறுத்தி நிறுத்தி மேலே தூக்குவார்கள்.

முத்துக் குளிப்பவர்கள் சுமார் 270 அடி வரையில்தான் மூழ்க முடியும். அதற்கு மேல் நீரின் அழுத்தம் அதிகமாக இருக்கும்.


முத்துக்கள் உருண்டை வடிவத்தைத் தவிர இப்படியும் உருவாவதுண்டு.






முத்துக்கள் வெண்மையைத் தவிர பச்சை, நீலம், இளஞ்சிவப்பு, பழுப்பு, கறுப்பு நிறங்களிலும் இருக்கின்றன! கறுப்பு முத்துக்கள் அமெரிக்காவில் கிடைக்கின்றன. கறுப்பு முத்துக்களை அரிய பொக்கிஷமாகவே கருதிப் பாதுகாக்கிறார்கள். அவை அரிதாகவே உள்ளன.

ஒரு சமயம், பிலிப்பைன்ஸ் தீவுகளின் கடலோரத்தில் சங்கு குளிக்கச் சென்ற மீனவர் தலைவனின் மகனைக் காணாததால் கடலுக்குள் மூழ்கி அவனைத் தேடினார்கள். கடலின் அடியில் ஒரு பெரிய சிப்பியின் வாய்க்குள் கைகள் சிக்கிக் கொண்டிருக்க, அவன் இறந்து கிடந்தான். அவனையும் சிப்பியையும் கரைக்குக் கொண்டுவந்தார்கள். அந்தச் சிப்பியின் வயிற்றில் மிகப் பெரிய முத்து இருந்தது. நீளம் 24 செ.மீ., குறுக்களவு 14 செ.மீ. எடை 14 பவுண்டு 1 அவுன்ஸ். சிப்பியின் வயது 350 ஆண்டுகள். அந்த முத்திற்கு 'அல்லாவின் முத்து' என்று பெயரிட்டனர். உலகிலேயே பெரிய முத்தான அது, இப்போது அமெரிக்காவில், ஒரு பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது!





'ஆசியாவின் முத்து' என்ற பிரசித்திப்பெற்ற பெரிய முத்து ஒன்று இருந்தது. நீளம் 7½ செ.மீ. குறுக்களவு 5 செ.மீ. 1628-இல் கிடைத்தது. மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹான், தன் மனைவி மும்தாஜுக்காக அதை வாங்கினார். பிறகு அது சீனாவில் இருந்த மஞ்சு சக்கரவர்த்தியான 'ச்யென் லங்' இடம் போய்ச் சேர்ந்தது. 1779-இல், அவர் இறந்தபோது, அவருடன் அந்த முத்துவும் சேர்த்துப் புதைக்கப்பட்டது! 1900-இல் புதை குழிக் கொள்ளைக்காரர்களால் அது திருடப்பட்டுவிட்டது. எப்படியோ அது 1918-இல் ரூ. 2 லட்சத்திற்கு விற்கப்பட்டது. ஆனால், இப்போது அது யாரிடம் இருக்கிறது என்பது தெரியவில்லை.




முத்துக்களின் மேல் உள்ள ஆசையால், சண்டை சச்சரவுகள் வருகின்றன என்று சீஸர் சக்கரவர்த்தி 45-வயதுக்குட்பட்ட விதவைகளும், மகப்பேறில்லாத பெண்களும் முத்து நகைகளை அணியக் கூடாதென்று சட்டம் போட்டிருந்தார்!


செயற்கையான 'வளர்ப்பு முத்து' உற்பத்தியில் ஜப்பான்தான் முதல் இடம். அங்கே, ஆண்டுக்கு 700 கோடி ரூபாய் மதிப்புள்ள 'வளர்ப்பு முத்துக்கள்' உற்பத்தி செய்யப்படுகின்றன.

செயற்கை முத்துக்கள் எப்படி உருவாக்கப்படுகின்றன?

உருண்டையான மணிகளைச் சிப்பிக்குள் வைத்துக் கடலில் விட்டு விடுகிறார்கள். அந்த மணியின் உறுத்தலில் 3 முதல் 5 ஆண்டுகளுக்குப் பிறகு சிப்பிக்குள் முத்து உருவாகிறது!




இயற்கை முத்து எது, செயற்கையாக உருவாக்கப்பட்ட முத்து எது என்பதை மிகச் சிறந்த நிபுணர்தான் கண்டுபிடிக்க முடியும். சில சமயம் எக்ஸ்-ரே எடுத்துத்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்!



இயற்கை முத்து — உருவாக்கப்பட்ட செயற்கை முத்து.

இயற்கை முத்தைவிட, உருவாக்கப்பட்ட முத்தின் மேல் சில அடுக்குகள் குறைவாக இருக்கும்.

செயற்கை முத்து ஒன்று — 2½ செ.மீ. குறுக்களவு — சில ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 23,500 க்கு விலை போயிற்று!



இப்போது, விஞ்ஞானிகள், வெள்ளிபோல் பளபளப்பாக மின்னும் மீனின் செதில்களிலிருந்து திரவத்தைப் பிரித்து எடுத்து, அதைக் கண்ணாடி மணிகளின் மேல் பூசி, செயற்கை முத்துக்களைத் தயாரிக்கிறார்கள்!

கேளுங்கள் சொல்லப்படும்!

சேரநம்பி

★ பூ. செல்வநாயகி, ஈரஹுார், சேலம் வட்டம்.

பூமி எனும் கோள் சூரியனின் குடும்பத்தைச் சேர்ந்த கோள்களில் ஒன்று என்கிறார்கள். அப்படியானால், பூமி எந்தக் கோள்களுக்கு இடையே வருகிறது?

அருமையான கேள்வி. சூரியனிலிருந்து எண்ணினால், சூரியனை அடுத்து புதன், அதை அடுத்து சுக்கிரன், அதை அடுத்து பூமி, பூமியை அடுத்து செவ்வாய் இடம் பெறுகிறது. ஆக, பூமி, சூரியனிலிருந்து 3-வது இடத்தில் வெள்ளிக்கும் செவ்வாய்க்கும் நடுவே வருகிறது.

★ பூ. வள்ளி நாயகம், ஆம்பூர்.

அன்னை தெரசாவின் அருந் தொண்டுக்கு இணையானவராக யாரைக் குறிப்பிடலாம்?

ஏன், வேலூர் மிஷின் மருத்துவமனையைத் தொடங்கிய டாக்டர். ஐடா ஸ்கடர் இருந்திருக்கிறாரே. வசதி ஏதுமில்லாத காலத்தில், இந்தியப் பெண்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற தீராத தாகத்தோடு தானே டாக்டர் படிப்புப் படித்து, அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து, எ வ் வ ள வோ எதிர்ப்புகளுக்கிடையே வேலூரில் மருத்துவமனையைத் தொடங்கிய அந்த மூதாட்டியாரின் விளம்பரமற்ற தியாக வாழ்வை அறிந்தால், எவரும் கண்கலங்காது இருக்க மாட்டார். ஐடா ஸ்கடர் பற்றிய கட்டுரை ஒன்று விரைவில் கோகுலத்தில் வெளிவர உள்ளது.

அன்னை தெரசா அனாதைகளின் புகலிடம். டாக்டர் ஸ்கடர், நோயாளிகளின் புகலிடம்.



✱ டாக்டர் ஐடா ஸ்கடர்



✱ அன்னை தெரஸா

★ உ. மைக்கேல் ராஜ், மேட்டூர் அணை.

காயம் போட்டவர்களுக்குக் கட்டுப் போட உதவும் பேண்ட் எய்ட் (BAND AID) யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

பசை தடவிய ஒட்டிக் கொள்ளும் பிளாஸ்திரியை முதலில் தயாரித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஏர்ல் டிக்சன். இவர் ஜான்சன் அண்டு ஜான்சன் கம்பெனியில் ஒரு பணியாளர். இதில் வேடிக்கை என்ன தெரியுமா? இந்த ஒட்டும் பிளாஸ்திரியை இவர் தனது மனைவிக்காகத் தயாரித்தார்! கம்பெனிக்குத் தெரிந்து அவர்கள் வந்து பார்த்து அதன் தயாரிப்பை 1921-ல் ஏற்றுக் கொண்டனர். கம்பெனி இட்ட பெயர்தான் ''பேண்ட் எய்டு.''

★ வ. பஞ்சலிங்கம், திருவானைக்கா.

வசுஷேணன் என்பது யாருடைய பெயர்? இந்தப் பெயர் கொண்ட பாத்திரம் எதில் வருகிறது?

மகாபாரதக் கர்ணனுடைய இயற்பெயர்தான் வசுஷேணன். கர்ணன் என்பது காரணப் பெயர். காதில் (கர்ணம்) குண்டலம் அணிந்தவன் என்பதால் கர்ணன் ஆனான்.

★ மா. பவளக் கொடி, செய்யார்.

இராமாயணத்தில் கட்சி மாறிய விபீஷணனைப் போல் மகாபாரதத்தில் யாராவது வருகிறார்களா?

இந்தக் கேள்வியை நீயாகவே கேட்கவில்லை பவளக் கொடி. யாரோ பெரியவர்கள் கேட்டு நீ எழுதியிருக்கிறாய்! கேட்டது யாராக இருந்தாலும், கேள்வி சுவையானது. இதோ பதில். பாரதப் போர் தொடங்கியதும் துரியோதனன் பக்கத்திலிருந்து கட்சி மாறி, பாண்டவர் பக்கம் வந்து விடும் ஒரு பாத்திரம் யுயுஸ்து. போர் முடிந்ததும் யுயுஸ்து தருமர் கையால் பரிசளிக்கப்படும் பெருமை பெறுகிறான். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, விபீஷணனைப் போல் யுயுஸ்து பிரபலமாகவில்லை!

★ க. மங்கையர்க்கரசி, சிவகங்கை.

சூப்பர் நோவா - ஷெல்டான் 1987 ஏ

என்கிறார்களே, இது என்ன?

சூரியனைப் போல் பல மடங்கு பெரியவை நட்சத்திரங்கள். அவை தேய்வின் காரணமாகவோ வேறு எதனாலோ வெடித்துச் சிதறித் தம் முடிவை அடையும். இப்படி வெடித்துத் தன் முடிவைத் தேடிக் கொள்ளும் நட்சத்திரமே சூப்பர் நோவா. இத்தகைய ஒரு சூப்பர் நோவாதான் ஷெல்டான் 1987 ஏ இதுவெடிக்க ஆரம்பித்தது 1,60,000 ஆண்டுகளுக்கு முன்! இருந்தும் இதன் ஒளி இப்பொழுதுதான் (1987 இறுதியில்) நம்மை வந்தடைந்தது.

★ வ. ரகுநாதன், வ. சிவநாதன் சகோதரர்கள், காரைக்குடி.

'சன்னிடேஸ்' என்ற கிரிக்கெட் பற்றிய புத்தகத்தை எழுதியவர் கபில்தேவ்தானே?



இல்லை. இதை எழுதியவர் கவாஸ்கர்.

★ க. சபரிவாசன், பழனி.

'ஸ்போர்ட்ஸ் வீக்' பத்திரிகைக்கு முன்னாலேயே, கவாஸ்கர் ஏதோ பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தாராமே? அது என்ன பத்திரிகை?

'இந்தியன் கிரிக்கெட்டர்' என்ற பத்திரிகை. இதுவும் முழுக்க முழுக்க கிரிக்கெட் பத்திரிகைதான்.

★ கு. பாரதி மோகன், தூத்துக்குடி.

இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் எடுக்கப்பட்ட சிறுவர் திரைப்படம் ஏதாவது இருக்கிறதா?

இல்லை. ஆனால், 'அலிபாபாவும் 40 திருடர்களும்' கதை இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் மட்டுமல்ல, உலக மொழிகள் எல்லாவற்றிலும் திரைப்படமாக்கப் பட்டுள்ளது. இது குழந்தைகளுக்கான கதை தானே?

★ அ. முகைதீன் ஜாப்பர், வேலூர் - 3.

நமக்கெல்லாம் தேசிய கீதம் இருப்பது போல் வாட்டிகன் இராஜ்ஜியத்தில் தேசிய கீதம் உள்ளதா?

தனிப் படை, தனி விமான தளம், தனிக் கொடி, தனி 'கரென்சி' இருப்பது



✤ போப்பாண்டவர்

போல் போப்பாண்டவரின் வாட்டிகன் சிட்டி என்ற மினி இராஜ்ஜியத்திற்குத் தனியான தேசிய கீதமும் உள்ளது. இது ''மேரிகா போன்டிஃபிகேல்'' (Marica Pontificale) எனப்படுகிறது. போப்பாண்டவர் ஒன்பதாவது பயஸ்ஸுக்காக 1846-ல் இதை 'Charles Gounwod' என்பவர் இயற்றினார். முறைப்படி இதுவே 1949 முதல் தேசிய கீதமாயிற்று.

★ வு. முரளி, கலசபாக்கம்.

நிம்மதி, அக்கறை என்ற இரு சொற்களும் கன்னடத்திலிருந்து தமிழுக்கு வந்தவை என்று கன்னடம் பேசும் எனது நண்பன் கூறுகிறான். உண்மைதானா?

'அக்கறை'யைப் பற்றி நண்பன் கூறுவது சரியே. ஆனால், 'நிம்மதி' தெலுங்குச் சொல்! இப்படிப் பல மொழிச் சொற்கள் பல, இனம் கண்டுகொள்ள முடியாதபடி தமிழால் ஏற்கப்பட்டு விட்டன!

★ சு. உமாபதி, வி. நவநீதம், திண்டுக்கல்.

குழந்தைகளுக்கான அச்சிடப்பட்ட முதல் புத்தகம், பத்திரிகை எந்த ஆண்டு வெளியானது? அவற்றின் பெயர் என்ன?

அச்சிடப்பட்ட என்று கேட்டிருப்பதால், காகிதத்தில் அச்சிடப்பட்ட என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும் இல்லையா? அச்சிடப்பட்ட முதல் புத்தகம், பத்திரிகை இரண்டுமே ஆங்கிலத்தில்தான் வெளிவந்தன. புத்தகத்தின் பெயர் A BOOK IN ENGLYSSH METRE OF THE GREAT MERCHANT MAN CALLED DIVES PRGMATICUT. இது குழந்தைகளுக்கான பாடல்களின் தொகுப்பு. பதிப்பித்தவர் அலெக்சாண்டர் லேசி. வெளியான ஆண்டு - 1563.

பத்திரிகையின் பெயர் ''THE LILLIPUTIAN'' பதிப்பித்தவர் ஜான் நியூ பெர்ரி. ஆண்டு - 1751.

இரண்டுமே இங்கிலாந்தில் வெளியாயின.



கொட்டு மழையே



கொட்டு கொட்டு கொட்டுயென்று
கொட்டு மழையே!
கூட்டுமுகில் படைநடத்தக்
கொட்டு மழையே!
வெட்டுமின்னல் கொடிபறக்கக்
கொட்டு மழையே!
வேட்டுடிகள் பறைமுழக்கக்
கொட்டு மழையே!

எட்டுத்திக்கும் இருளடைக்கக்
கொட்டு மழையே!
இதயமெங்கும் குளிரடிக்கக்
கொட்டு மழையே!
நெட்டை மலை, மரம் குளிக்கக்
கொட்டு மழையே!
நெளிந்து மயில் நடம்பிடிக்கக்
கொட்டு மழையே!

குட்டை, குளம், நதிநிறைக்கக்
கொட்டு மழையே!
குதித்துமீன்கள் மனம் களிக்கக்
கொட்டு மழையே!
தட்டுமலர் தலையசைக்கக்
கொட்டு மழையே!
தவளைகூடி இசையமைக்கக்
கொட்டு மழையே!

பொட்டலிலும் செடிமுளைக்கக்
கொட்டு மழையே!
பூமித் தாயின் முகம் சிரிக்கக்
கொட்டு மழையே!
நட்டபயிர் நலம் செழிக்கக்
கொட்டு மழையே!
நாடனைத்தும் வளம் கொழிக்கக்
கொட்டு மழையே!


— தளவை. இளங்குமரன்.





இங்கிலாந்து மரபுக் கதை

ஒரு காசுப் பூனை!



இங்கிலாந்தில் ஒரு கிராமம் அது. கிராமத்துப் பெரியவர்கள் கூடிப் பேசும்போதெல்லாம் லண்டன் நகரத்துப் பெருமையைப் பற்றி மிகச் சிறப்பாகப் பேசுவார்கள். 'லண்டன் நகரைப் போல எங்கேயும் இல்லை. தெருவெல்லாம் செல்வம் கொழிக்கும் நகரம் அது. எப்படியாவது அங்கே போய் விட்டால் அப்புறம் கவலையே இல்லை!' என்றெல்லாம் சொல்லுவார்கள்.

ஓர் அநாதைச் சிறுவன், பெயர் டிக், கிராமத்துப் பெரியவர்களின் லண்டனைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதையெல்லாம் அவன் வாயைப் பிளந்து கொண்டு கேட்டபடி இருப்பான். ஏழையாக, அனாதையாக இருந்தாலும் அவன் எப்போதும் உற்சாகமாக இருந்தான். அப்பாவோ அம்மாவோ வேறு உறவினரோ இல்லாத சிறுவன் டிக். லண்டனின் பிரதாபங்களைக் கேட்டதும், நாமும் லண்டனுக்குப் போக மாட்டோமா என்று ஏங்கத் தொடங்கினான். எப்போதும் 'லண்டன், லண்டன்' என்று ஜபிக்கத் தொடங்கினான். எப்படியாவது லண்டன் நகரத்துக்குப் போக வேண்டும். அங்கே போய் பணம் சம்பாதித்துப் பெரியவனாகி வசதியாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், லண்டனுக்கு எப்படிச் செல்வது? அவனோ சிறுவன். வழி தெரியாது. யார் அவனை அழைத்துக் கொண்டு போவார்கள்?

ஒரு நாள் சரக்கு வண்டி ஒன்று அந்தக் கிராமத்திலிருந்து லண்டன் சென்றது. அதை ஓட்டிச் சென்ற வண்டிக்காரன் சிறுவன் டிக்கைப் பார்த்து, 'வண்டி லண்டன் போகிறது. நீயும் வருவதானால் வா. ஆனால், நடந்துதான் வர வேண்டும். வண்டியில் இடம் இல்லை. அதோடு, உன் சாப்பாட்டுக்கு நீயேதான் வழி பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று நிபந்தனை அழைப்புக் கொடுத்தான்.

சிறுவனுக்கு ஒரே சந்தோஷம். தனது கனவு நனவாகப் போகிறது. பொன் விளையும் நகரத்துக்குப் போய் வசதியாக இருக்கப் போகிறோம் என்று உற்சாகமாக நம்பினான்.

சரக்கு வண்டியோடு தானும் புறப்பட்டான். தோளிலே ஒரு நீண்ட தடி, அதன் நுனியிலே ஒரு சோற்று மூட்டையைக் கட்டி, அதைப் பிடித்துக் கொண்டு உற்சாகமாக நடந்தான். வண்டிக் குதிரைக்கு இணையாக ஓட்டமும் நடையுமாக விரைந்தான். குதிரைக்கு இணையாக ஓடுவதென்றால் சும்மா எளிதா? கால், வலியான வலி வலித்தது. வலியைப் பாராட்டாமல் சரக்கு வண்டியுடன் கூடவே எப்படியோ லண்டன் வந்து சேர்ந்து விட்டான்.


என்ன ஏமாற்றம்! எங்கும் தங்கம் கொட்டிக்கிடக்கும் என்று அவனுடைய கிராமத்துப் பெரியவர்கள் கொடுத்த விவரங்கள் எத்தனை அப்பட்டமான பொய் என்பதை அவன் நேரில் அறிந்து சோர்ந்து போனான். அவன் கனவு கண்ட லண்டன் முற்றிலும் வேறாக இருந்தது. நடந்து வந்ததால் கால்கள் ரணவலி

தமிழில்: தம்பி சீனிவாசன்



''போரில் வெற்றி வாகை சூடிய இளவரசரைக்கான ராணியார் அலறிப் புடைத்துக் கொண்டு இப்படி ஓடுவானேன்...?''

'' 'களம் சென்ற இளவரசே வருக!' என்று கூறுவதற்குப் பதில், 'காலம் சென்ற இளவரசரே வருக' என்று கட்டியக்காரர் தவறுதலாகக் கூறி விட்டாராம்...



''ஆயிரத்தையும் நூறையும் கூட்டினா எவ்வளவுன்னா, பையிலே என்னமோ தேடுறியே! அதுல என்னடா இருக்கு?''

''என் ''கால்குலேட்டர்'' சார்!''



''யாரது...! பொழுது விடியற நேரத்துல சத்தம் போட்டு என் தூக்கத்தைக் கெடுத்தது...?''

- ச. காணிக்கைராஜ்.

வலித்தன. உடலெல்லாம் சோர்வு. வயிறு பசித்தது.

பிச்சை எடுத்துச் சாப்பிட வேண்டிய நிலை. எங்காவது சோறு கிடைக்குமா என்று வீடு வீடாக அலைந்தான்.

ஒரு பணக்கார வியாபாரி, வாரன் என்பவர். தெருவிலே அலையும் அனாதைச் சிறுவன் டிக்கை அவர் பார்த்தார். அவருக்கு அவனைப் பிடித்து விட்டது. அருகே அழைத்தார். ''என் வீட்டுக்கு வா. சாப்பாடு போடுகிறேன். அங்கேயே இரு. என் சமையல்காரிக்கு உதவியாக இருக்கும் ஏதாவது வேலை தருகிறேன்'' என்று அழைத்தார். உடனே ஒப்புக் கொண்டு 'டிக்' அவரோடு போனான்.

ஆனால், ஏனோ சமையற்காரிக்கு சிறுவன் டிக்கைப் பிடிக்கவில்லை. வீட்டு எஜமானர் எவ்வளவு சொல்லியும் அவனுக்கு வயிறு நிரம்பச் சோறு தர மறுத்தாள் அவள். ஆனால், அவனிடம் வேலையை மட்டும் நிறைய வாங்கினாள். அந்தச் சமையற்காரி உயரமும் பருமனுமாய் பார்க்க பயங்கரமாக இருந்தாள்.

எஜமானரின் சிறு பெண் ஆலிஸ் சிறுவன் 'டிக்'கிடம் அன்பாக இருந்தாள். 'பாவம் அம்மா இல்லை. அப்பா இல்லை. இவனுக்கு நல்ல சோறு போடு' என்று சமையற்காரியிடம் அவளும் அவனுக்காக சிபாரிசு செய்வாள்.

சமையற்காரிக்கு இது பிடிக்கவில்லை. டிக்கை அவள் விரட்டி விரட்டி நன்றாக வேலை வாங்கினாள். பளுவான மூட்டைகளை அடிக்கடி சுமக்க வைத்தாள். பெரிய பெரிய அண்டாக்களில் தண்ணீர் சுமக்க வைத்தாள். பொழுது விடிவதற்கு முன்பே தொடங்கும் டிக்கின் வேலைகள், இரவு வெகுநேரம் ஆகியும் முடியாது தொடரும். சமையலறை, அறைகளின் தரையெல்லாம் ஒரே ஈரமாக இருக்கும். எனவே, டிக்கைப் பரண் மீது படுக்கச் சொல்வாள் சமையற்காரி. பரணிலே வேண்டாத குப்பைகள். அழுக்கு, புழுதி, ஒட்டடை என்று அருவருப்பாக இருக்கும். அதோடு சுண்டெலிகள் ஆடு மாடுகள் மாதிரி மந்தை மந்தையாக ஓடித் திரியும். அதிலே எப்படித் தூங்குவது?

ஒரு நாள் காலையில் சிறுவன் டிக் சாலையில் நடந்து போன போது

''வேண்டுமா ஒரு காசுக்குப் பூனை?'' என்று யாரோ நடை பாதைக் கடைக்காரன் ஒருவன் கூவினான். அவன் கையில் அழகான பூனைக் குட்டி! டிக் பார்த்தான். அவனுக்கு அந்தப் பூனையைப் பிடித்துப் போய் விட்டது. அவனிடம் வெகுநாளாக ஒரு காசு நாணயம் ஒன்று இருந்தது. அவனிடம் காசு என்று இருந்தது அந்த நாணயம் ஒன்றுதான்.

''என்னிடம் ஒரு காசு இருக்கிறது. அந்தப் பூனையைத் தாருங்கள்'' என்று கேட்டான்.

''உன் வீட்டில் எலி இருக்கிறதா?'' என்று கேட்டான் விற்பனைக்கு வந்தவன்.


''இருக்கிறதே. நூற்றுக்கணக்கில் எலி இருக்கிறது!'' என்றான் டிக்.

''அப்படியானால் இந்தா பூனை!'' என்று கொடுத்துச் சென்றான் கடைக்காரன்.

சிறுவன் டிக் பூனையை வீட்டுக்கு எடுத்துப் போனான். தனக்குச் சமையற்காரி தரும் சோற்றில் ஒரு பகுதியைப் பூனைக்குப் போட்டான். பூனை அவனிடம் ஆசையாக இருந்தது. குறுக்கும் நெடுக்குமாக ஓடும் எலிகளையெல்லாம் பிடித்துத் தின்றது. சில நாளில் அந்தப் பரணைச் சுத்தப்படுத்தி விட்டது!

ஒரு நாள் வீட்டு எஜமானரான வணிகர் சந்தோஷமாக இருந்தார். சிறுவன் டிக் அப்போது அவர் கண்ணில் பட்டான். அவனை அருகே அழைத்து, ''பையா, என் கப்பல் வெளி தேசம் போகப் போகிறது. உன்னிடம் ஏதாவது அபூர்வப் பொருள் இருந்தால் கொடு. நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்து உனக்குப் பணம் தரச் சொல்லுகிறேன்'' என்றார்.

டிக் யோசித்தான். அவனிடம் என்ன இருக்கிறது? திடீரென்று பூனையின் நினைவு வந்தது. ''பாவம் எலி எதுவும் இப்போது கிடைக்கவில்லை. அதைக் கப்பலில் அனுப்பினால் அதற்கு நல்ல உணவாவது கிடைக்கும்'' என்று நினைத்தான். பூனையை எடுத்து வந்து எஜமானரிடம் கொடுத்தான். ''இதுதான் எனக்குச் சொந்தமானது. இதைக் கப்பலில் அனுப்புங்கள்'' என்றான். எஜமான



ரும் சிரித்தபடி பூனையை வாங்கி, கப்பல் தலைவனிடம் கொடுத்து, ''இது நமது சிறுவன் டிக் தந்தது. ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நல்ல விலை கிடைத்தால் விற்றுத் தா'' என்றார்.

சில நாட்களில் கப்பல் புறப்பட்டது.

இப்படிச் சில நாள் ஆயிற்று. வழக்கம் போல டிக் விடிவதற்கு முன் விழித்துக் கொள்வதும் விடாமல் வேலை செய்வதுமாகப் பொழுது கழிந்தது. எவ்வளவு நிறைய வேலை செய்தாலும் எவ்வளவு நேரம் உழைத்தாலும் அந்தப் பொல்லாத சமையற்காரி சிடுசிடுத்தாள். ஏசினாள். எஜமானனும் அவர் பெண் அலிசும் இல்லாத வேளைகளில் அவள் இவனை மிகவும் துன்புறுத்தினாள்.

டிக் மிகவும் மனம் நொந்து போனான். அவனுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று. இந்த ஊரும் வேண்டாம், இந்த வேலையும் வேண்டாம், இந்த வீடும் வேண்டாம் என்று சலித்து விட்டான்.

ஒரு நாள் இரவு ஒரு துணி மூட்டையுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். சின்னத் தெரு, பெரிய தெரு, கடைத் தெரு, கோட்டைத் தெரு என்று எல்லாம் கடந்து போய் நதிப் பாலத்துக்கு வந்தான். மிகவும் வருத்தத்துடன் திரும்பிப் பார்த்து, ஒரு சாலை மைல் கல்லின் மேல் அமர்ந்தான். அப்போது திடீரென்று மாதா கோவில் மணிகள் ஒலிக்கும் ஓசை கேட்டது இவனுக்கு. இவன் காதிலே அந்த ஒலி,

"திரும்பி விடு திரும்பி விடு
துயரம் எல்லாம் ஓடுது!
பெருமை மிக்க மேயராய்
பொலியும் காலம் வருகுது!''

என்று பாடி, மீண்டும் திரும்பச் சொல்வது போலத் தோன்றியது! தன்னைத் தான் மேயர் என்றும் குறிப்பிடுவதாக அவன் மனதுக்குள் ஏதோ தோன்றியது.

தனக்கு ஏதோ நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் டிக் உடனே வீடு திரும்பினான். அவன் ஓடிப் போனதோ, திரும்பி வந்ததோ தெரியாமல் மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் வியாபாரத்திற்காகச் சென்றிருந்த எஜமானரின் கப்பல் திரும்பி வந்தது. கப்பல் தலைவன் நிறைய வியாபாரம் செய்து பொருள் கொண்டு வந்திருந்தான். எஜமானரைப் பார்த்து, ''ஐயா சிறுவன் டிக் கொடுத்த பூனையால்தான் நாங்களெல்லாம் உயிர்த் தப்பினோம். அதோடு ஏராளமாகச் செல்வமும் பெற்றோம்'' என்று விவரமாகச் சொன்னான்.

என்ன ஆயிற்று தெரியுமா?

அவர்கள் சென்ற கப்பல் கடலிலே ஒரு சுழற் காற்றில் மாட்டிக் கொண்டது. திசை தடுமாறியது. ஒரு தீவிலே ஒதுங்கியது. அந்தத் தீவு மக்கள் மனிதரைத் தின்னும் நரமாமிச் பழங்குடிகள். 'கப்பலைப் பிடி! அதில் உள்ள ஆட்களைப் பிடி!' என்று கூவியபடி அவர்கள் கப்பலை நெருங்கி அதில் இருந்த எல்லாரையும் கைது செய்து கயிற்றிலே கட்டி இழுத்துப் போனார்கள்.

தீவுக்குள்ளே போனதும் அங்கே எலித் தொல்லை அதிகம் இருந்ததைப் பார்த்தான் கப்பல் தலைவன். நமது ஊரில் சாரிசாரியாக எறும்பு ஊர்வது போல் அங்கே சாரி சாரியாக எலிகள் நடமாட்டம் இருந்தது.

அந்தத் தீவு வாசிகள் தாங்கள் தின்பதற்கு எதையாவது சமைத்து வைத்தால், எலிகள் உடனே மொய்த்துக் கொண்டு அதைத் தின்று விடும். யாரும்

எக்ஸ்-ரே எப்படி வந்தது?

உள் உறுப்புக்களைப் படம்பிடிக்க உதவும் என்னவென்று புரியாத கதிரைக் கண்டுபிடித்த ராண்ட்ஜன் என்பவர், அதற்கு; 'எக்ஸ்' (X) என்று பெயரிட்டா. அதுவே நாளடைவில் 'X-ரே' என்று நிலைத்து விட்டது.

— நாகை. கே. ரவி.



ஒன்றில் பதினைந்து!

ஆப்பிளில் பல வகைகள் இருக்கின்றன. உங்களுக்கும் தெரியும். ஆனால், செக்கோஸ்லாவாகியாவில் ஒருவர் ஆராய்ச்சி செய்து, ஒரே ஆப்பிள் மரத்தில் 15 வகையான ஆப்பிள் பழங்களை விளையச் செய்திருக்கிறார்! தோற்றமும் வேறு வேறு; ருசியும் வேறு வேறு!

- மயிலாடுதுறை, ஆறுபாதி புகழேந்தி.

எதுவும் தின்ன முடியாமல் அவதிப் பட்டனர்.

கப்பல் தலைவன் எலிக் கூட்டத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டான். தீவுத் தலைவனைப் பார்த்து, ''எலிகள் இப்படிக் கும்மாளம் போடுகிறதே! இவைகளைத் துரத்தக் கூடாதா?'' என்றான்.

''எங்களால் முடியவில்லையே'' என்றான் தீவுத் தலைவன்.

கப்பல் தலைவனுக்குக் கப்பலில் உள்ள டிக்கின் பூனையைப் பற்றிய நினைவு வந்தது.

''என் கப்பலிலே ஒரு பிராணி இருக்கிறது. அது இந்த எலிகளைத் துரத்தி விடும்'' என்றான்.

தீவுத் தலைவன் மகிழ்ச்சியுடன் துள்ளினான். ''செய்! செய்! எப்படியாவது இந்த எலித் தொல்லையைத் தீர்த்தால் உன்னைத் தின்ன மாட்டேன். நீ பிழைத்துப் போ'' என்றான்.

''நான் இந்த எலித் தொல்லையைத தீர்க்கிறேன். எலிகள் ஒழிந்து விட்டால் உங்கள் தீவில் இனி உணவுப் பற்றாக் குறையே இருக்காது. எனவே, நீங்கள் யாரும் இனி கப்பலில் வரும் மனிதர்களைக் கொன்று தின்னத் தேவை இருக்காது. எங்கள் எல்லாரையும் விடுதலை செய்து விடுங்கள். எங்கள் நாட்டுக்கு அனுப்பி வையுங்கள்'' என்றான் கப்பல் தலைவன்.

''முதலில் எலிகளை விரட்டு'' என்றான் தீவுத் தலைவன்.

கப்பல் தலைவன் கப்பலுக்குச் சென்று டிக் அளித்த பூனையை எடுத்து வந்தான். ஏற்கெனவே கப்பலில் இருந்த எலிகளையெல்லாம் தின்று தின்று - அது கொழுத்திருந்தது. இப்போது கப்பலில் ஒரு எலி கூட இல்லை. அதனால் அதற்கு எலி தேவையாக இருந்தது.

தீவுக்கு வந்ததும் அந்தப் பூனை எலிப் படைகளைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தது. இப்படியும் அப்படியும் தாவித் தாவி எலிகளைப் பிடித்தது. ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து என்று எலிகள் செத்து ஒழிந்தன.

தீவுத் தலைவன் எலிகள் பூனையால் வேட்டையாடப்படுவதைப் பார்த்துப் பரவசமானான். அந்தத் தீவில் மனிதர்களுக்கான உணவுப் பொருட்களையெல்லாம் போட்டி போட்டுத் தின்று அழித்த எலிகள் ஒழிந்தன. ஒரே வாரத்தில் அங்கே எலி வாடையே தெரியவில்லை.

''நீ பிழைத்துப் போ. உன் கப்பலில் வந்த எல்லாரும் பிழைத்துப் போங்கள். கப்பலையும் விடுவிக்கிறேன். அதோடு, இந்தப் பிராணியை எனக்குத் தந்தால் நிறைய செல்வத்தைக் கொடுப்பேன்'' என்றான் தீவுத் தலைவன்.

கப்பல் தலைவன் இத்தனை கதையையும் எஜமானரிடம் சொல்லி விட்டு, ''இப்படிப் பெற்றதுதான் இந்தச் செல்வம் . நாங்கள் உயிர் தப்பவும் நமக்கு செல்வம் கிடைக்கவும் இந்தத் தம்பி டிக் கொடுத்த பூனையே காரணம்'' என்றான்.

எஜமான் சந்தோஷப்பட்டார். ''டிக் சுறுசுறுப்பான பையன். கடினமாக உழைக்கிறான். பூனையை நேசித்தான். அதனால் கிடைத்த செல்வம் அவனுக்கே சேரட்டும்'' என்று சொல்லி விட்டார்.

அவரே முன்னின்று டிக் பெயரில் தனியே வியாபாரம் தொடங்கினார். அவனைப் படிக்க வைத்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார்.

படிப்பால், உழைப்பால், நேசிப்பால், பண்பால் டிக் நாளுக்கு நாள் சிறப்படைந்தான். நகரின் பெரிய மனிதர்களுள் ஒருவனாக மதிக்கப்பட்டான். திருமணம் புரிந்து கொண்டான்.

அப்புறம் என்ன ஆயிற்று, தெரியுமா? ஒரு நாள் அவனுக்கு லண்டன் நகர மேயர் பதவியே கிடைத்தது! ஓடிப் போன அன்று காதிலே கேட்ட மணி ஓசைப் பாட்டு பொய்யாகவில்லை!



அமெரிக்காவிலே வாங்கினது!

''ஜெயராஜா! நான் போட்டிருக்கிற சட்டையைப் பார்த்தியா! எப்படி இருக்கு?''

''நல்லா இருக்கு சதீஷ்.''

''இதை எங்கே வாங்கினேன்னு கேட்கலையே நீ?''

''கேட்டா என்ன பதில் சொல்வே? இந்தச் சட்டை அமெரிக்காவிலே வாங்கினது. எங்கப்பாவோட ஃபிரண்டு வாங்கிக் கொண்டு வந்தார்னு வழக்கமா சொல்ற பதிலைத்தான் சொல்லுவே.''

மகிழ்ச்சியோடு பெருமை பொங்கச் சிரித்த சதீஷ், ''கரெக்டா சொல்லிட்டியே ஜெயராஜா'' என்று அவனைப் பாராட்டினான். பிறகு,

''அடுத்த வாரம் உனக்கு பர்த்டே வருகிறதே? அதுக்கு உங்கப்பா என்ன டிரஸ் வாங்கித் தரப் போறாரு?'' என்று கேட்டான்.

''ஸ்கூல் யூனிபாரம்.''

ஏதோ பெரிய நகைச்சுவையைக் கேட்டவன் போலச் சிரித்து விட்டு சதீஷ் கேட்டான்:

''ஏண்டா ஜெயராஜா! வேற ட்ரஸ்ஸே உங்கப்பாவுக்குக் கிடைக்கலையா?''

''என் ஸ்கூல் யூனிபாரம் கிழியற நிலையிலே இருக்கு. அதனால், நானே தான் ஸ்கூல் யூனிபாரத்தை வாங்கித் தரச் சொன்னேன்.''

அதற்குள் சதீஷின் அம்மா தான் வாங்கிய செய்தித்தாளுக்கான பணத்தை ஜெயராஜாவிடம் கொடுக்கவே அதைப் பெற்றுக் கொண்டு கிளம்பினான் அவன்.

சதீஷும் ஜெயராஜாவும் எட்டாம் வகுப்பு மாணவர்கள். சதீஷின் தந்தை வியாபாரி. நல்ல வசதியான வாழ்க்கை. தான் பணக்காரன் என்ற கர்வம் கொஞ்சம் அவனுக்கு உண்டு. அமெரிக்கா என்றால் அவனுக்கு அவ்வளவு மோகம். அயல்நாட்டு மோகம் அளவுக்கு அதிகமாகவே அவனிடம் இருந்தது. காலையில் எழுந்தால் அவனுடைய பல் தேய்க்கும் பிரஷ்ஷிலிருந்து, பவுடரிலிருந்து, பேனாவிலிருந்து, சாக்லெட், மிட்டாய் வகைகளிலிருந்து டீ.வி., த்ரீ-இன் ஒன்னிலிருந்து தலையணை வரை எல்லாம் வெளிநாட்டுத் தயாரிப்புத்தான்! அமெரிக்காவில் வாங்கியது, ஜப்பானில் வாங்கியது. ரஷ்யாவில் வாங்கியது என்று சொல்லிக் கொள்வதில் அப்படி ஒரு பெருமை அவனுக்கு.

ஜெயராஜாவின் தந்தை ஹோட்டலில் சர்வராக வேலை பார்க்கிறார். அவனுக்குக் கீழே ஒரு தம்பியும், தங்கையும். வருமானத்திற்குள் செலவு செய்ய முடியாத நிலை. குடும்பத்தின் நிலைமையை உணர்ந்த ஜெயராஜா தினமும் செய்தித்தாள் போடும் பையனாக வேலை செய்ய ஆரம்பித்தான். விடியற்காலையில் ஏஜெண்டின் வீட்டிற்குச் சென்று பேப்பர்களை சைக்கிளின் பின் சீட்டில் அடுக்கி வைத்துக் கொண்டு வாடிக்கையாளர்கள் வீட்டிற்குப் போட்டு விட்டு வரும் பொழுது

டி. ஜானகி

மணி ஏழரை ஆகி விடும். அதற்குப் பிறகு வீட்டிற்கு வந்து தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டு சரியான நேரத்திற்குப் பள்ளிக்கு வந்து விடுவான். படிப்பில் முதல் ஐந்து ரேங்கிற்குள் இருப்பான். அவனுக்கு சில சமயங்களில் சதீஷின் செய்கை மனத்திற்கு வருத்தம் அளிக்கும். இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாது அன்புடன் பழகி வந்தான். பெரிய இடத்துப் பிள்ளை அப்படித்தான் நடந்து கொள்வான். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவன் திருந்தி விடுவான் என்று மனப்பூர்வமாக அவன் நம்பினான்.



காலம் யாருக்காகவும், எதற்காகவும் காத்திருப்பதில்லை. எதையும் எதிர்பாராது அது தன் கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. இதோ காலம் என்ற வானத்தில் வருடம் என்ற இரண்டு மின்னல்கள் மின்னி மறைந்து விட்டன.

அடேயப்பா! இந்த இரண்டு வருடத்தில்தான் வாழ்வில் எத்தனை மாற்றங்கள்!

ஜெயராஜா, சதீஷ் இருவரும் பத்தாம் வகுப்பிற்கு வந்து விட்டனர்.

ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது சதீஷின் தந்தைக்கு வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது. தன்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் விற்றுக் கடனை அடைத்தார். கடல் போன்ற மாளிகையை விற்று விட்டதால் ஒரு வீட்டின் அவுட் ஹவுசில் குடியேறினார். உடலும் உள்ளமும் சோர்ந்து போன அவர் ஒரு கடையில் கணக்கு எழுதும் வேலையைப் பார்க்கலானார். வந்த வருமானம் வாய்க்கும் வயிற்றுக்குமே பற்றாத நிலை.

ஜெயராஜா வழக்கம் போல பேப்பர் போட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய நேர்மையையும் உண்மையையும் கண்ட அவனுடைய ஏஜெண்ட் அவனுக்கு பத்து ரூபாய் கூட ஏற்றி தொண்ணூறு ரூபாயாகக் கொடுக்கலானார். அவன் கேட்காமலே அவராகவே பள்ளி திறந்ததும் இருநூறு

ரூபாய் கொடுத்து 'புத்தகம், நோட்ஸ், ஸ்பெஷல் ஃபீசுக்கு வைத்துக் கொள்' என்று அன்பு காட்டினார்.

இதோ! பத்தாம் வகுப்பு தொடங்கி ஒரு வாரமாகி விட்டது. ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அனைவரும் பத்தாம் வகுப்பில் சேர்ந்து விட்டனர். சதீஷைத் தவிர!

சதீஷ் ஏன் பள்ளிக்கு வரவில்லை? உடல்நலம் சரியில்லையா? என்னைப் போல அவனும் முதல் ஐந்து ரேங் கிற்குள் வருபவனாயிற்றே! - என்ன காரணம்?

கேள்வி ஜெயராஜாவின் உள்ளத்தில் அம்பு போல துளைக்க ஆரம்பித்தது.



அன்று மாலையே பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டிற்குச் சென்று புத்தகப் பையை வைத்து விட்டுக் கிளம்பினான்.

கஷ்டப்பட்டு எப்படியோ சதீஷ் குடியிருந்த அவுட் ஹவுசைக் கண்டு பிடித்தான். இவனைப் பார்த்ததும் சதீஷின் கண்கள் வியப்பால் விரிந்தன. நண்பனை வரவேற்கக் கூடத் தோன் றாது சில வினாடிகள் நின்று விட்டு, பிறகு மெதுவாகச் சொன்னான்.

''வா... ஜெயராஜா! உட்காரு.''

கீழே பாயில் உட்கார்ந்து கொண்ட ஜெயராஜா ''சதீஷ்! பள்ளிக்கூடம் திறந்து ஒரு வாரமாச்சு. இந்த வருடம் நாம, பள்ளி எக்சாம் எழுதப் போற வருடம். நீ ஏன் பள்ளிக்கூடமே வரலை?'' என்று கேட்டான்.

தன் ஏழ்மை நிலையைச் சொல்லிக் கொள்ள சதீஷ் ஒரு வினாடி தயங்கி னான். தன்னுடன் பழகி, தான் வாங்கிக் கொடுத்ததைத் தின்ற ரவீந்திரன், மதி, அருள் போன்றவர்கள் தன்னைக் கண்டாலே ஒதுங்கி ஒதுங்கிச் செல்ல, தான் அடிக்கடி கிண்டல் செய்திருந் தாலும் அதை எல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாமல் தன் நலனில் அக்கறை கொண்டு தன்னைப் பார்க்க வந்துள்ள ஜெயராஜாவைப் பார்த்ததும் சதீஷின் கண்கள் கலங்கின.

''ஜெயராஜா! நான் எத்தனையோ தடவை உன்னைக் காயப்படுத்தியிருக் கேன். என்னை மன்னிச்சுடு. உங்க கிட்டே பொய் சொல்ல விரும்பலே. எப்படி நாங்க இருந்தோம். இன்னிக்கு நாங்க எப்படி இருக்கோம்னு நீ கண்ணாலே பார்க்கறே. ஸ்கூல் ஃபீஸ் கட்டி, புத்தகம், நோட்டு, நோட்ஸ் எல்லாம் வாங்கி, யூனிபாரம் இன் னொரு செட் வாங்கிப் படிக்கப் பண வசதி இல்லே. நாங்க ஏழையாப் போன தாலே எங்க சொந்தக்காரங்க அப்பா வோட நண்பர்கள் யாருமே எங்களை வந்து பார்க்கறதில்லே. தப்பித் தவறி எங்களைப் பார்த்தாக்கூடப் பேசாம விலகிப் போயிடறாங்க.''

ஒரு வினாடி இருவருமே பேச வில்லை. பிறகு தன் பையிலிருந்து அம்மா கொடுத்த பலகாரப் பொட்ட லத்தைக் கொடுத்தான் ஜெயராஜா. அதை வாங்கி பிரித்துப் பார்த்த சதீஷ் அதை அப்படியே அருகில் இருந்த ஸ்டூலின் மீது வைத்தான்.

''என்ன சதீஷ்! இந்தப் பலகாரங்கள் எல்லாம் அமெரிக்காவில் செய்தது மாதிரி இல்லையா? எங்கம்மா அன்போட உனக்கு கொடுத்திருக் காங்க.''

''நான் பழைய சுரேஷ் இல்லே. இந்தப் பலகாரம் எல்லாம் எங்கப்பா வுக்கும், என் தங்கை சரண்யாவுக்கும் ரொம்பவும் பிடிக்கும். அவங்க வெளியே போயிருக்காங்க. வந்ததும் சேர்ந்து சாப்பிடலாம்னுதான் வைத் தேன்.''

சதீஷைப் பார்க்க ஜெயராஜாவின் உள்ளம் உருகியது.

''சதீஷ்! நான் ஏதாவது கூறினால் தப்பா நினைக்க மாட்டியே?''

''உன்னையா? நானா... ஒருக்

காலும் அப்படி நினைக்க மாட்டேன். தாராளமா சொல்லு ஜெயராஜா.''

''நல்ல விஷயங்களை மட்டும் நாம் அமெரிக்காவிலிருந்தோ, ஜப்பானி லிருந்தோ, ரஷ்யாவிலிருந்தோ பின் பற்றுவது தவறே இல்லை. அவங்க உழைப்பையும், தொழிலையும் மதிக்க றாங்க. உழைக்கறதைப் பெருமையா நினைக்கறாங்க. பணக்கார நாடான அமெரிக்காவிலே நம்மைப் போல பையன்கள் படித்துக் கொண்டே சம்பாதிக்கறாங்க. ஏன் வசதி உள்ளவங்க வீட்டுப் பையன்கள் கூட பாக்கெட் மணிக்காக பெற்றோரை எதிர்பார்ப்ப தில்லே. மற்றவங்க வீட்டிலே ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம்னு வேலை செய்யறாங்க. கணவன், மனைவி சினிமாவுக்குப் போனா குழந்தையை பார்த்துக்கறது, தோட்டத்தை சுத்தம் செய்யறது, வீட்டு வேலை, காரைத் துடைக்கறது என்று எத்தனையோ வேலை செய்யறாங்க. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பான் நாடு உழைப்பாலேதான் முன்னேறி யிருக்கு. ரஷ்யாவிலே தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க றாங்க. நம்ப நாட்டிலே பணக்கார வீட்டுப் பையன் உழைக்கறதுக்கு கௌரவம் பார்க்கறான். நீ சொன்ன பிரஷ், சாக்லேட், வாட்சு எல்லாம் இப்ப நம் நாட்டிலேயே கூடச் சிறந்த முறை யிலே தயாரிக்கறாங்க. அதை எல்லாம் நாம்ப இந்தியாவிலேயே வாங்கிக்க லாம். ஆனா, படித்துக் கொண்டே சம்பா திக்கும் வழக்கம் நம் நாட்டில் பரவலே. அயல் நாட்டிலிருந்து நாம் கற்றுக் கொண்டால் தவறே இல்லை. நம்ப தமிழ் ஐயா சொல்வாரே, பாலையும், நீரையும் கலந்து வைத்தால் அன்னபட்சி பாலை மட்டும் பிரித்து அருந்துமாம். அது போல, நாம் நல்லதை மட்டும் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.''

''எனக்குப் புத்தி வந்தது. உழைக்கற உன்னை மட்டமா நினைச்சேன். உழைப் போட சிறப்பை இப்பத்தான் புரிந்து கொண்டேன்.''


''வெரிகுட். எனக்குத் தெரிந்த பேப்பர் ஏஜெண்ட் ஒருத்தர் இருக்கார். அவ ரிடம் நாளைக்கே உனக்கு வேலை வாங்கித் தரேன். என்னைப் போல நீயும் வேலை செய். ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும். போகப் போக சரியாகி விடும். படிப்பை விட்டு விடாதே. எங்க ஏஜெண்ட், பள்ளி ஸ்பெஷல் ஃபீஸ், புத்தகம் நோட்டு வாங்க உதவியா இருக் கட்டும்னு எனக்கு இருநூறு ரூபாய் கொடுத்தார். நான் மே மாச லீவிலேயே கொஞ்சம் அதிகப்படியா வேலை செய்து பணம் சேர்த்திருந்தேன். அத னால் அவர் கொடுத்த பணத்தைத் தொடவே இல்லை. அதை உன் படிப் புக்கு வைத்துக் கொள். என்ன சொல்றே?''

சதீஷ் வாய் திறந்து பதில் கூற வில்லை. ஆனால், அவன் கண்களில் பெருகிய கண்ணீர் மௌனமாகப் பதி லளித்தது!

வேலைக்கு ஆள் வேணும்னு சொல் றீங்களே. எந்த வேலைக்கு?

எல். கே. ஜி. படிக்கும் நம் பையனின் பலகை, புத்தகங்களை பள்ளிக்கு எடுத்துப் போய், எடுத்து வரத்தான்!

- நல்லாலம் காசி





''இதுவரை என் கதை ஒன்று கூடத் திரும்பி வந்தது இல்லை.''

''எல்லாக் கதைகளையும் பப்ளிஷ் பண்ணிடுவாங்களா?''

''உள்ளே திரும்பி வருவதற்கான தபால் தலையை வைக்க மாட்டேன்.''

- கே. பாஸ்கரன், வந்தவாசி.



வால் இறங்கினால் சரணடை!


காட்டில் வசித்து வந்த மிருகங்கள் பறவைகளிடையே ஒருமுறை பெரிய பிரச்சனை எழுந்தது. அமைதியான முறையில் பிரச்சனையைத் தீர்க்க முடியாது போகவே இறுதியில் சண்டையிட்டுத் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தன.

மிருகங்கள் சிரித்துக் கொண்டே ''எங்களோடு ஒப்பிடுகையில் உருவத்தில் நீங்கள் மிகச் சிறயவைகள். உங்களால் எங்களை வெல்ல முடியுமா? நாங்கள் மிகச் சுலபமாக உங்களை வென்று விடுவோம்'' என்று அகந்தையோடு சண்டையிடத் தயாராயின. ''அதையும் பார்த்து விடலாமே'' என்று பறவைகளும் சவால் விட்டன.

மிருகங்களின் தலைவனான சிங்கம் தன் சக மிருகங்களைக் கூட்டி பெரும் படை ஒன்றை அமைத்தது. பறவைகளின் அரசனான கழுகு, தன் உதவியாளர் குருவியை அழைத்து பறவையினங்களை ஒன்றுகூட்டிப் பெரும் படை அமைத்தது. இப் படையில் பெரிய பறவைகள் மட்டுமின்றி குளவிகள், தேனீக்கள் ஈக்கள் போன்ற சிறிய பறவைகளும் இருந்தன. கழுகின் உதவியாளர் குருவி, குளவியை அழைத்து ''நீ சென்று மிருகங்களின் படைத் தலைவன் யார்ரென்பதை மறைந்து நின்று அறிந்து வா'' என்று ஏவிற்று.

குளவி பறந்து சென்றது. ஒரு செடியின் மறைவில் இருந்து மிருகங்களின் கூட்டத்தைக் கண்காணித்தது. மிருகங்களின் தலைவன் சிங்கம் நரியைக் கூப்பிட்டு 'நீதான் மிருக இனத்தில் மிகவும் புத்திசாலி. ஆகவே, நீயே படைத் தலைவனாக இரு' என்று கட்டளையிட்டது. நரியும் மிகவும் சந்தோஷப் பட்டுக் கொண்டு, 'என்னைப் படைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தது குறித்து மிக்க சந்தோஷம். எனக்கு நீளமான மற்றும் அடர்த்தியான வாலிருக்கிறது. அதை வெகு தூரத்தில் இருந்தபடி கூட நீங்கள் அடையாளம் காணலாம். என் வால் நிமிர்ந்து இருந்தால் சண்டை வெற்றிகரமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். அப்படியில்லாமல் வால் கீழ் நோக்கியிருந்தால் உங்கள் உயிர்களுக்கு ஆபத்து என்றும் எதிரியின் பலம் அதிகமாயிருக்கிறது என்பதையும் உணர்ந்து நீங்கள் ஓடிச் சென்று உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம், அல்லது சரணடையலாம்' என்று சண்டையின் போது ஜாக்கிரதையாக இருக்க யோசனை கூறியது.

மறைந்து கொண்டிருந்த குளவி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பறவைத் தலைவனான குருவியிடம் ஒன்று விடாமல் கூறியது. அடுத்த நாள் பறவைகளுக்கும் மிருகங்களுக்குமிடையே போர் நிகழ்ந்தது. சண்டை



நடந்து கொண்டிருக்கும் போது பறவைகளின் தலைவன் கழுகின் உதவியாளன் குருவி, தேனீயை அழைத்தது. 'நீ விரைந்து சென்று நரியின் வாலைக் கொட்டு' என்று கூறியது. தேனீயும் விரைந்து சென்று நரியின் நிமிர்ந்த வாலை ஒருமுறை கொட்டியது.

நரிக்கு வலி தாங்க முடியவில்லை! வாலைக் குறித்துத் தான் மிருகங்களிடம் கூறி விட்டு வந்ததை எண்ணி வலியைப் பொறுத்துக் கொண்டு மேல் நோக்கிய வாலைக் கீழே இறக்கவில்லை! இரண்டாவது தேனீ இப்பொழுது வரிந்து கட்டிக் கொண்டு விரைந்து சென்று நரியின் வாலில் கொட்டியது! ஒரு கணம் வலியால் துடித்த நரி வாலைக் கீழே இறக்கியது. ஆனாலும் வலியைப் பொறுத்தக் கொண்டு வாலை நிமிர்த்திக் கொண்டது!

ஆனால் மூன்றாவது தேனீ பறந்து சென்று கொட்டிய போது நரி வலி தாங்காது ஊளையிட்டுக் கொண்டு தனது வாலை இறக்கிக் கொண்டு ஓடத் தொடங்கியது!

மிருகங்கள் தங்கள் படைத் தலைவனான நரி ஓடுவதைப் பார்த்து எதிரிகள் பலம் மிகவும் கடுமையாக இருப்பதாக முடிவு செய்து கொண்டு அவைகளும் பக்கத்திற்கு ஒன்றாக ஓடி விட்டன. பறவைகள் தங்கள் திறமையால் மகிழ்ச்சிக் கூத்தாடின!

– ஜி. இந்திரா, திருச்சி – 14.



கோழிக்கும் கான்டாக்ட் லென்ஸ்..!

★ மனிதர்கள் கான்டாக்ட் லென்ஸ் உபயோகிப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் சீனாவில் கோழிகளுக்கு ரோஸ் கலர் கான்டாக்ட் லென்ஸ் (contact lens) போடப்பட்டு ஆராய்ச்சி செய்ததில் அவைகள் வழக்கத்தை விட 6 சதவிகித முட்டைகள் அதிகமாக இடுவதாக அறியப்பட்டிருக்கிறது. கவோ ஜின்யுவான் என்ற கோழிப் பண்ணை உரிமையாளர் இதை 140 கோழிகளுக்கு உபயோகித்து தன் அனுபவத்தைக் கூறியிருக்கிறார்.

- இந்திரா கோபாலன்.

குரங்குக்கும் பள்ளிக்கூடம்



★ தாய்லாந்து (தெ. கி. ஆசியாவில்) நாட்டில் குரங்குகளுக்கென ஒரு சிறப்புப் பள்ளிக்கூடம் உள்ளது. இங்கு, தேங்காய்களை மரத்திலிருந்து எப்படிப் பறிப்பது என குரங்குகளுக்கு சொல்லித் தரப்படுகின்றது.' நன்கு பயிற்சி பெற்ற குரங்கு 30 வினாடிகளில் ஒன்பது தேங்காய்களைப் பறிக்கிறது!

- க. இரா. விஜயகுமார்.

பிச்சை கேட்ட அரசன்!

கதை: ஆனந்தி
சித்திரம்: உமாபதி




விஜயராகவன் தன்னைப் புகழாமல் இருந்தது நரசிம்மராயருக்குப் பிடிக்கவில்லை. மந்திரிகள் தொடர்ந்து முகஸ்துதி செய்தனர்..
மாதம் மும்மாரி பெய்வதே மன்னர் நல்லாட்சி நடத்துவதால் தான்!
மலையும் மழையும் நிலமும் பயிரும் ஆண்டவன் போட்ட பிச்சை!
என்ன ஆணவம் இவனுக்கு!
ரங்கப்பா என்னை மதிக்கவில்லை! இவனை நாடு கடத்துங்கள்! மலையில் மழையில் திரியட்டும்!
நாட்கள் சென்றன...
எனக்கு இந்த சுகபோக வாழ்வு அலுத்து விட்டது! நாளை நான் வேட்டையாடப் போகிறேன்!


காட்டில் ஒரு மானைத் துரத்திக் கொண்டு சென்றார் நரசிம்ம ராயர்...
மான் தப்பி விட்டது; குதிரை களைத்து விட்டது; வழியும் தவறி விட்டது;
என்னுடன் வந்தவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் இருட்டி விடும்... மழை வேறு... பசி வேறு... அதோ...
மலைக் கிராமத்தை அடைந்த மன்னர்...
இந்த வீட்டில் யார் வசிக்கிறார்கள், பார்ப்போம்!
மன்னர் கதவைத் தட்ட...
உள்ளே வாங்க... மழையில் சொட்ட நனைஞ்சிட்டீங்களே... மாற்று உடை தரேன்...



இரவு இங்கே படுத் திருந்து காலை யில் போய் விடு கிறேன்...
உங்க வீடா நினைச்சுக் குங்க. சோறு சூடா இருக்கு சாப்பிட வாங்க!
வெங்கப்பாவின் உபசரிப்பில் நரசிம்ம நாயர் மகிழ்ந்தார்..
நீ ஏன் தனியா இருக்கே?
பெண்டாட்டி பிறந்த வீட்டுக்குப் போயி ருக்கா!..
ஓ! குழந்தை பிறக்கப் போறதா? சௌக்கியமா ஆண் பிள்ளை யோட வருவா. நான் சாமுண்டேஸ்வரியைப் பிரார்த்திக்கிறேன்..
நீங்க படுங்க. நான் உங்க குதிரைக்குத் தீனி வைச்சுட்டு வரேன்!
மறு நாள் காலை...
வெங்கப்பா, நான் போய் வரேன். நீ நல்லவன். உனக்குத் தர இப்ப என் கிட்ட பொற்காசு எதுவுமில்லை. இந்தா, இதை வைச்சுக்க...


மோதிரமா, எனக்கு எதுக்கு?
பத்திரமா வைச்சுக்க. எப்பவாவது உதவி தேவைப் பட்டா மைசூர்ப் பட்டணத்துக்கு வா...
மோதிரத்தைக் காட்டினா எங்கிட்ட உன்னை அழைச்சுக்கிட்டு வருவாங்க.. போய் வரேன்...
ம்.. பெரிய மனுஷங்க போல இருக்கு.. நானாவது, மைசூர் போகவாவது..?
சில ஆண்டுகள் சென்று...
மழை இல்லை.. பயிர் பச்சையெல்லாம் தீஞ்சுப் போச்சு...
நான் எதைச் சமைக்கிறது? வீட்டில் ஒண்ணும் இல்லே...
குடிக்கத் தண்ணி கூட இல்லே... கிணறும் வத்திப் போச்சு...




ஆமா, அந்த ஆளு மோதிரம் கொடுத்தாருன்னியே... அந்த எடுத்துக்கிட்டுப் போய்க் கொஞ்சம் துட்டு கேளேன்!...
மங்கா சொன்னபடி தெங்கப்பா மைசூருக்குப் புறப்பட்டான்.
குழந்தையை ஜாக்கிரதையா பார்த்துக்க. துட்டு கிடைச்சதும் பட்டணத்திலேயே அரிசி பருப்பு எல்லாம் வாங்கி வரேன்..
மைசூரில்..
அடேயப்பா... அரண்மனைங்க.. மாளிகைங்க... தலை சுத்துதே!
ஊர்க் காவலன் எதிர்ப்பட்டு..
யாரப்பா நீ? ஊருக்குப் புதுசா?
ஆமாங்க, இந்த ஒரு ஆளைப் பார்க்கணும்..
யாரு? என்ன பேரு?
அதெல்லாம் தெரியாது! இதைக் கொடுத்தாரு. ஒரு சமயம் போதுமன்னா வந்து பாருன்னாரு!


ஆ! முத்திரை மோதிரம்!
சரி, என்னோட வா.
நகரக் காவல் தலைவன் விஷயமறிந்து.
இவனுக்கு உடுக்க நல்ல துணிமணி கொடு குளிச்சு சாப்பிடட்டும்.
வெங்கப்பா பயணக் களைப்பு நீங்க..
அடேயப்பா! அங்கே பஞ்சம்! இங்கே பஞ்சாமிர்தம்..
வெங்கப்பாவை அரண்மனைக் கோயிலுக்கு அழைத்துப் போனா-ர்கள்.
மகாராஜா சாமி கும்பிடறார். பூஜை முடிந்ததும் உன்னைப் பார்ப்பார். நீயும் சாமி கும்பிட்டுக்க!
சந்நிதி வாசலில் நின்ற வெங்கப்பா காதில் அரசரின் பிரார்த்தனை விழுந்தது...
சாமுண்டேஸ்வரி! நீ நிறைய தந்திருக்கே. இன்னும் சகல மங்களங்களும் அஷ்ட ஐஸ்வர்யங்களும் நவரத்னங்கள், நவதானியங்கள் தா!


ரங்கப்பா ஏமாற்றமடைந்து வெளியேறினான்..
பூ! இவரிடம் போய் உதவி கேட்க வந்தேனே...
நடந்ததை அறிந்த மகாராஜா ரங்கப்பாவைத் தேடி அழைத்து வரச் செய்தார்..
ஏன் என்னிடம் எதும் கேட்காமல் திரும்பினாய்?
நீங்களே கடவுளிடம் என்னென்னமோ பிச்சை கேட்டுக் கிட்டிருந்தீங்க.. உங்க கிட்ட நான் என்னத்தைக் கேட்கிறது?
மகாராஜா வெட்கப்பட்டு..
இதைத் தானே விதூஷகன் ரங்கப்பாவும் வேறு விதமாகச் சொன்னான்!
இந்தா பணமுடிப்பு! வேண்டியதை வாங்கிக் கொள்!
மகாராஜா விதூஷகனைத் திரும்ப அழைத்து வரச் சொன்னார்...
ரங்கப்பா! ஒரு ஏழைக் குடியானவன் என் கண்களைத் திறந்தான். என் கர்வம் அடங்கியது.

WHY DOES THE WILY FOX INVITE THE CRANE TO LUNCH ?



FIND OUT IN THE OCTOBER ISSUE OF



GOKULAM

THE MAGAZINE FOR CHILDREN

* A Colourful game on the center-spread !
* Festival - Special, easy to make, recipes !

BUY YOURSELF A COPY TODAY !

96 PAGES FOR JUST Rs. 3/-

GOKULAM, GUINDY, MADRAS - 600 032.

முரட்டு அப்பா!



மோகனுடைய மனம் பரபரத்தது. அவனுடைய இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

அன்று அவனுடைய கண்ணில் போடப்பட்டிருந்த கட்டை அவிழ்க்கப் போகிறார்கள். அவனுக்குக் கண் தெரிந்து விடுமா! பார்வை மீண்டும் வருமா!

அந்தச் சிறுவன் நெட்டுயிர்த்தான். அந்த நேரத்திலும் அவனுக்கு ஒரு குறை.

அறுவை செய்யப்பட்டு மருத்துவ விடுதியில் அவன் கழித்து விட்ட அந்த இருபத்தெட்டு நாட்களில்...

அவன் தாயார் மட்டுந்தான் அவனைப் பார்ப்பதற்கு தினமும் வந்திருந்தார்கள். அவன் தந்தை ஒரு நாள் கூட வந்ததே இல்லை! அந்த நினைப்பே அவனை வேதனைப் படுத்தியது. 'என்ன செய்வது! அவர் எதற்கும் அசையாத முரட்டுப் பிறவி' என அவன் மனதில் நினைத்துக் கொண்டான்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு விளையாட்டுத்தனமாக ஏதோ ஒரு மருந்தை அவன் கண்களில் விட்டுக் கொண்டு பார்வையிழந்து துடித்த போது, அந்த நேரத்திலும் கூட அவர் அவனை ஓங்கி இரண்டு அறைதான் வைத்தார்! அவ்வளவு முரடர்.

இருந்தாலும், இந்த நேரத்தில் கூடவா அவர் அவனை ஒரே ஒரு முறையாவது வந்து பார்க்கக் கூடாது!

என்ன செய்வது, அவர் அவ்வளவுதான்! அவன் மட்டுமன்று, அவ

னுடைய தாயார் கூட அவரைப் பற்றிப் பேசக் கூடப் பயப்படுவாள். இந்த இருபத்தெட்டு நாட்களில் அவர் எங்கே என்று அவன் கேட்டதோ, அவளும் ஏதும் கூறியதோ கிடையாது.

காலடிச் சத்தம் கேட்டு மோகன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனைச் சுற்றி நான்கைந்து பேர் வந்து நிற்பதை அவனால் உணர முடிந்தது.

''டாக்டர்! பார்த்துக் கட்டை அவிழுங்க,'' — தழுதழுக்க வேண்டிக் கொண்டது அவனுடைய தாயார்தான்.

''எனக்குத் தெரியாதா அம்மா,'' என்ற டாக்டரின் குரல் நர்சுகளுக்குச் சில ஆணைகளைப் பிறப்பித்தது.

கட்டு மெல்ல மெல்லப் பிரிந்தது. மோகன் கண்களை, இல்லை, வலது கண்ணை மலங்க விழித்தான். மூடி மூடித் திறந்தான். மங்கலாகத் தெரிந்த பார்வை தெளிந்து தெளிந்து 'பளீ'ரெனக் காண பல நிமிடங்கள் ஆயின. ஆமாம். அவனுக்கு வலது கண் பார்வை மீண்டு விட்டது!

கண்ணீர் பெருக நின்ற அன்னை, முறுவலித்து நின்ற டாக்டர், அவர்கள் இருவருக்கும் நடுவே அது யார்? அவன் அப்பாவேதான்! எதற்கும் அசையாத முரட்டு ஜன்மம் என்று எல்லோராலும் கௌரவிக்கப்படும் அவனுடைய தந்தையேதான்! 'பரவாயில்லையே! அவர் கூட வந்திருக்கிறாரே!' என்று மனதிற்குள் வியந்து கொண்டான் மோகன். ஆமாம்! அவருக்கு என்ன? அவருடைய வலது கண்ணில் ஏன் கட்டுப் போடப்பட்டிருக்கிறது!

தன்னையறியாமலேயே மோகன் 'அப்பா' என்றான்.

''என்னடா!'' — குரலில் அ தே முரட்டுத்தனம்.

''உங்கள் வலது கண்ணுக்கு என்ன வாச்சு?''

''ஒன்றும் ஆகலே. உன்னிடம் வந்து, உன் வலது கண்ணா இப்போ இருக்கு. அவ்வளவுதான்!

மோகன் கண்கலங்கினான். அப்பா வந்து பார்க்காத காரணம் புரிந்து விட்டது!

''அசடு, இப்போ அழக் கூடாது. பார்வை பாதிக்கும்'' — டாக்டர் கண்டித்தார்.


''டேய் பைத்தியம்! என் பிள்ளைக்கு என் கருவிழிப் படலம் ஒண்ணை நான் தரலேன்னா வேறு யாருடா தருவா! அழுதே, கொன்னுடுவேன். எதுக்குடா இப்ப அழுகை?''

அப்பாவின் முரட்டுக் குரலின் பின்னே ஒளிந்திருந்த கனிவான அன்பின் ஆழத்தை மோகன் இப்பொழுது புரிந்து கொண்டான்.

ஓடிப் போய் அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

– கைலாஸ், திருநெல்வேலி - 11.

முதல் கார் வாங்கியவர்



★ புதுக் கோட்டை மன்னருக்கு தமிழகத்தில் ஒரு சிறப்பு உண்டு. அவர்தான் தமிழ்நாட்டில் முதல் முதலாக 1901 - ஆம் வருடம் கார் வாங்கியவர்.


- சி. பன்னீர் செல்வன், செங்கல்பட்டு.

வாழைப்பழ ஸ்டாம்பு



★ சதுர செவ்வக மற்றும் வட்ட வடிவத் தபால் தலைகளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். 1974 -ம் ஆண்டில் டோங்கா நாடு ஒரு புது வடிவ ஸ்டாம்பை வெளியிட்டது. அது வாழைப்பழ வடிவிலானது!

- க. இரா. விஜயகுமார், செஞ்சி - 2.



யானைப் பாகன் ஏன் சோகமா இருக்கார்?
வசூல் கணக்கை யானை கேட்குதாம்!
நாகை கே.ரவி
சிரிப்...
நாய், என்னை மட்டும் கடிக்க வருதே, ஏன் அங்கிள்?
அதோட பிஸ்கட்டை நீ தின்னும் போது பார்த்திருக்கும்!
சீர்காழி வி.ரேவதி
"அமெரிக்கா"வுக்கு எதிர்ப்பதம் என்ன?
அமெரிப்பழம்
சி.எஸ்.மணிமாறன்
என் பேரு கங்கா... அக்கா பேரு யமுனா... தங்கச்சி பேரு காவேரி, மிஸ்
உங்க அப்பா என்ன வேலை பார்க்கிறாங்க?
பால்காரரா இருக்காங்க
சீர்காழி வி.ரேவதி
ஐந்தில் மூன்று போனால் மீதி என்ன? விரல் விட்டு எண்ணிச் சொல்லு.
மூன்று ஸார்!
எப்படி?
என் கையில் ஆறுவிரல் இருக்கே!
கபிஸ்தலம் ஏ.கே.சிவசக்திப்ரியா

அனுமதி பெறாமல்...

சிற்பி சோமு

அலுவலக வேலை முடிந்து வீட்டுக்கு வந்த கோபாலன் சோர்வுடன், சோபாவில் போய் சாய்ந்தார். அவர் மனைவி கற்பகம் சுடச் சுடக் காப்பியைக் கொண்டுவந்தாள்.

காப்பியை வாங்கி குடித்தவாறே தன் பார்வையை நாலாபுறமும் ஓட விட்ட கோபாலன், ''வேணுவை எங்கே காணோம்!.... பள்ளிக்கூடம் விட்டு இன்னும் வரலை?'' என்று கேட்டார்.

''இல்லீங்க! எப்போதும் உங்களுக்கு முன்னமேயே வந்து விடுவான்... இன்னிக்கு இன்னும் வரலே. இன்றைக்கு சினிமாவுக்கு வேறு அழைத்துப் போவதாகச் சொல்லி சீக்கிரம் வரச் சொல்லியிருந்தீங்களே! ஏன் 'லேட்'டுன்னு தெரியலயே?'' என்ற கற்பகத்தின் குரலில் கவலை இழைந்திருந்தது.

''நான் வேண்டுமானால் போய்ப் பார்த்து வர்றேன்....'' என்று எழுந்த கோபாலனிடம், ''வேண்டாங்க! நீங்க ஏற்கனவே சோர்வாக வந்திருக்கீங்க... மேலும் அலைச்சல். நானே போய் அவன் கிளாஸ் பையன் ராமுவிடம் கேட்டுட்டு வர்றேன்....'' என்று கூறியவாறே புறப்பட்டாள் கற்பகம்.

''ராமு வீடு எங்கே....?'' என்றார் கோபாலன்.

''அடுத்த தெருவிலேதான். இதோ ஒரு நொடியிலே கேட்டுட்டு வந்திடுறேன். நீங்க கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுங்க,'' என்றவாறே கற்பகம் புறப்பட்டுச் சென்றாள்.


சற்று நேரத்திற்குள்ளாகவே பதறிக் கொண்டே திரும்பிவிட்ட கற்பகம், ''என்னங்க.... என்னங்க... நம்ம வேணு பள்ளிக்கூடம் விட்டு நாலரை மணிக்கெல்லாம் கிளம்பிட்டானாம். இன்னும் வரலையே? ஏங்க..... அவன் எங்கே போயிருப்பான்.... இப்போ எங்கே போய்த் தேடறது?'' என்று கவலையோடு கேட்டாள்.

கோபாலின் முகத்தில் பீதி படர்ந்தது. ''மணி ஏழாகப் போவுது....! ஒரு நாளும் இப்படி அவன் தாமதமாக வந்ததே இல்லையே!'' என்று மனைவியின் துயரத்தில் பங்கு கொண்டார் கோபாலன்.

அந்த நேரத்தில் - ஆம்புலன்ஸ் வேன் ஒன்று அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து வேணுவும், அவனது பள்ளி ஆசிரியரும் இறங்கி வந்தனர். வேன் வந்தது கண்டு 'என்னமோ... ஏதோ' என்று கோபாலனும், கற்பகமும் வெளியே ஓடிவந்தனர்.


பெற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்ட வேணுவின் ஆசிரியர், அவர்கள் கேட்கும் முன்னரே சொல்லத் தொடங்கினார். ''மிஸ்டர் கோபாலன், பள்ளியின் ஆண்டு விழா நடைபெற இருப்பதை ஒட்டி விழா மேடை அமைக்கும் பொறுப்பு ஏற்றுள்ள நானும், எனக்கு உதவியாக வேணு, மற்றும் ஐந்தாறு மாணவர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தோம். அப்போது எதிர்பாராத விதத்தில் தோரணம் கட்டிக் கொண்டிருந்த செந்தில் என்ற மாணவன் கால் தடுக்கி மதில் சுவரிலிருந்து கீழே விழுந்துட்டான்.''

''என்ன கீழே விழுந்துட்டானா?'' படபடப்புடன் கோபாலனும், கற்பகமும் ஒரே கேள்வியைக் கேட்டனர்.



''ஆமா, தலையிலே பலமான அடி. அதுனால அதிக அளவு ரத்தம் சேத மாகிவிட்டது. அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு ஓடி னோம்.... அந்தப் பையன் பிழைக்க வேண்டுமானால் உடனே அவனுக்கு இரத்தம் செலுத்தியாக வேண்டிய நிலை.... அவனுக்குத் தேவையான குரூப் இரத்தம் 'பிளட் பேங்க்'கில் இல்லை... அந்தப் பரபரப்பில் எங்களில் சிலர் இரத்த தானம் செய்ய முன் வந் தனர் அதில் வேணுவும் ஒருத்தன். எல் லோருடைய இரத்தத்தையும் சோதித் துப் பார்த்ததில் ஒன்று கூட சேர வில்லை. வேணுவின் 'ஓ' குரூப் இரத் தம் மட்டுமே சேர்ந்தது; செந்திலுக்கு செலுத்த தகுதியுடையதாக இருந்தது. இதற்காக உங்க அனுமதியைப் பெற, நீங்க வேலை பார்க்கிற அலுவல கத்திற்குப் போன் செய்து பார்த்தோம். நீங்கள் வேலை முடிந்து போய் விட்டதாகத் தகவல் கிடைத்தது. ஆபத் துக்கு உதவும் பொருட்டு உங்கள் அனு மதி இல்லாமலேயே வேணுவைப் பயன்படுத்திக் கொண்டு, பிறகு உங்க ளிடம் சொல்லிக் கொள்ளலாம் நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்ற தைரியத்தில் நான் அனுமதி வழங்க, டாக்டர்கள் வேணுவின் இரத்தத்தை எடுத்து, செந்தி லுக்குச் செலுத்தினார்கள். இப்போது அவன் பிழைத்துக் கொண்டான். உங்க அனுமதி பெறாமல் நான் செய்த காரி யத்திற்கு என்னை நீங்க மன்னிக்கணும்'' என்றார் வேணுவின் ஆசிரியர். அவரது குரலில் ஒரு தாயின் பரிவு ததும்பி வழிந்தது.

''என்ன ஸார்.... பெரிய வார்த்தை யெல்லாம் சொல்றீங்க! நீங்க தவறான காரியம் ஒன்றும் செய்துவிடவில் லையே? ஆபத்துக்கு உதவுவது எவ் வளவு மகத்தான சேவை. அந்தக் காரியம் செய்ய என் செல்வன் வேணு முன் வந்து உதவினான் என்பதைக் கேட்கவே எங்களுக்கு உள்ளம் பூரிக் கிறது. கருணை உள்ளத்துடன் நீங்க செய்ததை நாங்க போற்றக் கடமைப் பட்டுள்ளோம்,'' என்றார் கோபாலன். மகிழ்ச்சிப் பெருக்கில் வேணுவைத் தட்டிக் கொடுத்து அவனது கன்னத்தில் முத்தமிட்டார். கற்பகமும் வேணுவின் கன்னத்தில் முத்தமிட்டு, நெஞ்சோடு வேணுவை அணைத்துக் கொண்டாள்.



வந்து விடுவேன் நரியண்ணா!

அந்த அடர்ந்த காட்டிலே மான்கள் தினமும் கூட்டமாகச் சென்று மேய்ந்து விட்டு வரும். மான்கள் கூட்டத்தில் இரண்டு குட்டி மான்க ள் இருந்தன. அதில் ஒரு மான் மிகவும் புத்திசாலியாக இருந்தது. அதனால், அந்த மானை மற்ற மான்கள் புகழும். ஆனால், மற்றொரு குட்டி மானுக்கு இது பிடிக்கவில்லை. நம்மை யாரும் புகழவில்லையே என்று தனக்குள் ளேயே புழுங்கிக் கொண்டது. இதுவே நாளடைவில் அதனிடம் பொறாமை யாக உருவெடுத்தது. அதனால் அது, புத்திசாலி மான் இறந்து விட்டால் நம்மை அனைவரும் புகழ்வார்கள் என எண்ணியது.

அன்று மான்கள் மேய்வதற்குச் சென்றன. அப்போது பொறாமை மான், குட்டி மானிடம் ''நண்பா! நாம் எத்தனை காலம்தான் இந்த மலை அடி வாரத்திலேயே புல் உண்டு வாழ்வதோ? இந்த மலையின் உச்சியில் பசுமையான புற்களும், நல்ல குளங்களும் இருக்கிற தென்று எனது தாத்தா கூறினார். ஆனால், நம்மில் யாருக்கும் அங்கு சென்று புல் மேயத் தைரியம் இல்லை சோம்பேறித்தனத்தாலேயே நம் இனம் சிரமப்படுகிறது'' என்று பொறாமை மான் கூறியது. புத்திசாலி மான், ''சரி வா, நாம் இருவரும் மேலே சென்று மேய்ந்து விட்டு வருவோம்'' என்றது. அதற்கு, பொறாமை மான், ''நமது இனத்தில் நீதான் புத்திசாலி என்கி றார்களே! உனக்குக் கூடவா துணை தேவை?'' என்று ஏளனமாகக் கேட்டது.

மனம் குமுறிய புத்திசாலிமான் ''நானே தனியாக, தைரியமாக, மேலே சென்று மேய்ந்து விட்டு வருவேன்'' என்று மலையில் ஏறத் தொடங்கியது.

சிறிது தூரம் ஏறி இருக்கும். எதிரே ஒரு நரி வந்தது. ''ஆகா! இன்றைய உணவுக்குப் பஞ்சமில்லை எவ்வளவு அழகான மான்!'' என்று அது கூறிக் கொண்டே மானைக் கொல்ல வந்தது.

ஆர். தண்டபாணி



அப்போதுதான் பொறாமை மானின் வஞ்சகம், புத்திசாலி மானிற்குத் தெரிந்தது. தப்பிக்க நினைத்தால் நரி எப்படியும் தன்னை தின்று விடுமென்பதை அது உணர்ந்து கொண்டது. உடனே நரியார் காலில் விழுந்து, ''அண்ணா! நான் மலை உச்சியிலே உள்ள பசும் புற்களை உண்ணவே வந்தேன். ஆனால், தாங்கள் என்னை உண்ண விரும்புகிறீர்கள். இருப்பினும், நான் ஆசையுடன் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பவம் உங்களுக்கே உணவாகிறேன்'' என்று புத்திசாலி மான் கூறியது. நரி யோசித்தது. மலையில் செழிப்பான புற்களைத் தின்று வந்தால் இன்னும் கொழுகொழுவென இருக்குமென எண்ணியது. ஆனால், மான் தப்பித்து விட்டால்.... ''சரி நீ சென்று மேய்ந்து விட்டு மாலைக்குள் திரும்ப வேண்டும். தப்பிக்க மட்டும் நினைத்து விடாதே! அது முடியாது. இம் மலை உச்சிக்குச் சென்று திரும்ப இந்த ஒரே ஒரு வழி மட்டும் இருப்பதாலேயே உன்னை அனுப்பி வைக்கிறேன்'' என்று எச்சரித்து அனுப்பியது நரி.

மான் மேலும் சிறிது தூரம் சென்றிருக்கும். அங்கு புலியிடம் சிக்கிக் கொண்டது. நரியிடம் பாடிய அதே பாட்டைப் பாடியது. புலி, ''சரி நீ சென்று மேய்ந்து விட்டு மாலைக்குள் வந்து விடு, ஏமாற்ற நினைக்காதே. நீ வரும் வரை நான் இங்கேயே காத்திருப்பேன்'' என்று எச்சரித்து அனுப்பியது.

அப் புத்திசாலி மான் மேலும் சிறிது தூரம் சென்றது. சிங்கத்திடம் சிக்கிக் கொண்டது. நரியிடம் பாடிய அதே பாட்டை ஆட்டுக் குட்டி சிங்கத்திடம் பாடியது. கூடவே சிங்கத்தின் கால்களில் விழுந்து கும்பிட்டு ''விலங்கின அரசரே! உன்னிடமில்லாமல் வேறு யாரிடம் எனது குறையைச் சொல்வேன் தலைவனே! நான் இங்கு புல் மேய வந்தேன். தாங்கள் எனக்குக் கருணை காட்டி எனது ஆசையைத் தீர்க்க உதவ வேண்டும். மானிடர் களில் கூட ஒருவனுக்கு கொலை தண்டனை வழங்கும் போது, அவனது கடைசி ஆசையைக் கேட்டு நிறை வேற்றி விட்ட பிறகே கொல்கி றார்கள். அவர்களுக்கே கருணை இருக் கும் போது, எங்களது

அரசராகிய உங்களுக்குக் கருணை இல்லையா?'' என்றது. அதன் புகழ்ச்சியில் மகிழ்ந்த சிங்கம், ''சரி, நீ மாலைக்குள் வந்து விடு, அதுவரை நான் காத்திருப் பேன்.'' என்று அதை அனுப்பி வைத்தது.

புத்திசாலி மான் மலை உச்சியை அடைந்தது. தன்னிலையை எண்ணிய போதே அதற்கு அழுகை அழுகையாக வந்தது. பொறாமை மான் வஞ்சகம் செய்தாலும், அங்கே உண்மையாகவே பசும் புற்களும், சுனைகளும் இருந்தன. ஆனால் புத்திசாலி மான் அவற்றைத் தொடக்கூட இல்லை. கண்ணீர் விட்டது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த பறவைகளில் சில மானை விசாரித்தன. விஷயத்தை அறிந்து கொண்டன.

பறவைகள் தங்கள் அரசன் கழுகிடம் சென்று மானின் நிலையைக் கூறின. எப்பாடுபட்டாவது மானுக்கு உதவ வேண்டும் என வேண்டின.

கழுகு, மானைப் பார்த்து, ''அன்பு நண்பரே! தாங்கள் இங்கேயே எவ்வளவு நாள் வேண்டுமானாலும் தங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறியது. மான், ''கழுகரசரே நான் குறித்த நேரத்திற்குள் திரும்பா விட்டால் அந்தக் கொலைகாரப் பாதகர்கள் என்னைத் தேடி இங்கேயே வருவார்கள். அதனால் உங்களுக்கும் கூட ஆபத்து ஏற்படும். எனவே எனக்கு உடனே தப்பிக்க ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கேட்டுக் கொண்டது.

கழுகு வானத்தில் பறந்து கொண்டே அம் மலைப் பாதையை நோட்டமிட்டது. அங்கு சிங்கம், புலி, நரி ஆகியவை மானின் வரவு நோக்கி, கண்ணயராமல் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தது. பிறகு தன்னிருப்பிடம் திரும்பி தனது மந்திரி மரங்கொத்தியிடமும், மற்ற பறவைகளிடத்திலும் தான் கண்டதைக் கூறி வருந்தியது.

புத்திசாலி மான், ''கழுகரசே உங்கள் மந்திரியார் மனம் வைத்தால் எனக்கு உதவ முடியும். உங்கள் மந்திரி ஒரு பெரிய மரத்தைக் குடைந்து தந்தால் நான் அதில் ஒளிந்து கொண்டு உருண்டு





''பாடத்தைப் படிடான்னு சொன்ன துக்கு உன் பையன், தலைக்கு மேலே வேலை இருக்குன்னு சொல்லிட்டு எங்கே போறான்?''

''சலூனுக்குப் போய் 'கட்டிங்' பண் ணிக்கப் போறானாம்!''

- சீர்காழி. வி. ரேவதி.

உருண்டு போய் மலை அடிவாரத்தை அடைந்து விடுவேன்'' என்றது.

மரங்கொத்தி உடனே வேலையில் இறங்கியது.

உடனே, ஒரு பெரிய மரத்துண்டு, மான் கேட்டது போல், உள்ளே குடையப்பட்டுக் கொண்டு வரப்பட்டது. அதில் புத்திசாலி மான், உடலைக் குறுக்கிக் கொண்டு உட்கார்ந்து மூடிக் கொண்டது. அதனை பறவைகளெல்லாம் சேர்ந்து மலை அடிவாரத்தை நோக்கித் தள்ளி விட்டன. மேலும் பறவைகள் தாங்கள் அதைக் கண்டு பயந்து நடுங்குவன போல் கத்தின. அது மலை முழுவதும் எதிரொலித்தது.

பறவைகளின் பயந்த சத்தம் கேட்ட சிங்கம் உஷார் ஆனது. வெகு வேகமாக தன்னை நோக்கி வரும் மரத்துண்டைப் பார்த்த சிங்கம், அது ஏதோ ஒரு பயங்கரமிருகமென எண்ணி அவ்விடத்தை விட்டுத் தலைத்தெறிக்க ஓடியது. மரத்துண்டு இன்னும் கீழே வர வரப் புலியும் அதைப் பயங்கர மிருகமென எண்ணி, தலைகால் தெரியாமல் ஓடியது. நரி முதலில் அது ஒரு பயங்கர மிருகமென அஞ்சியது. எனினும் அதைச் சோதிக்க ஒரு சிறிய பாறையை பாதையின் நடுவே தள்ளி விட்டு விட்டு, மற்றொரு பாறையின் ஓரத்தில் ஒளிந்து கொண்டது.

வெகு வேகமாக வந்த மரத்துண்டு பாறையில் பட்டு மூடி தெறிக்க இரண்டாக உடைந்தது. புத்திசாலி மான், வெளியே வந்து விழுந்தது. பறவைகள் சத்தம் போடுவதை நிறுத்தி விட்டு நிலைமையை எண்ணி வருந்தின. வெளியே விழுந்த ஆட்டை பார்த்த நரி, ''அடே! நீ என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்! உன்னைத் திங்காது விட மாட்டேன்'' என மானின் அருகில் வேகமாக ஓடி வந்தது.

உடனே நிலைமையை சமாளித்துக் கொண்ட புத்திசாலி மான் ''அண்ணா! நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து'' என்றது.

''என்னது! எனக்கா! அட மடையா! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்!'' என்று நரி கூறியது.

அதற்கு மான், ''அண்ணா! உங்களுக்கு இறையாவதாக வாக்குக் கொடுத்து விட்டு மலையேறினேன் அங்கே புலியும், சிங்கமும் என்னைத் தின்ன வந்தன. எப்படியோ அவைகளை ஏமாற்றி விட்டு மேலே சென்றேன். மேலே போனவுடன் நாம் முதலில் வாக்குக் கொடுத்தபடி நரி அண்ணாவிற்கே இரையாக வேண்டுமென நினைத்தேன். அதன்படி இப்படி ஒரு ஏற்பாட்டை நான் செய்து கொண்டு சிங்கம், புலி இரண்டையும் ஏமாற்றி விட்டு உங்களை அடைய எண்ணினேன். ஆனால், அவை நான் இதில் ஒளிந்து வருவதைக் கண்டு கொண்டன. முதலில் துரத்தி வந்த சிங்கம், புலியும் துரத்துவதைப் பார்த்து, ''மான் எனக்குத் தான்'' என்றது. அதற்குப் புலி, ''இல்லை எனக்குத்தான்'' என்றது. இரண்டும் சண்டை போட்டுக் கொண்டே என்னைத் துரத்த உங்கள் நினைவாகவே இருந்த நான், ''நரி அண்ணா!'' என்று உடனே கத்தி விட்டேன். சிங்கமும், புலியும் ''ஓ நரி வேறு காத்திருக்கிறானா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டுக் கொண்டே என்னைத் துரத்தி வருகிறார்கள். அதனால், உங்களுக்கு உடனடியாக ஆபத்து. அதோ அந்த குகைக்குள் சென்று ஒளிந்து கொள்ளுங்கள். நான் குகையை மூடி விட்டு, எனது இருப்பிடம் செல்கிறேன்.

நாளை வந்து உங்களுக்கு இரை யாகிறேன்'' என்றது.

அதே சமயத்தில் ஓடிய சிங்கம் புதரிலும், புலி சகதியிலும் சிக்கிக் கொண்டு கத்தின. அது மலை முழுவதும் எதிரொலித்தது. அது கேட்டு நரி நடுங்கிய படி, ''நீ சொல்வது உண்மைதான்! ஆனால், நீ இன்று தப்பிச் சென்று விட்டால் நாளை கண்டிப்பாக வர மாட்டாய். ஆகவே, நீயும் என்னுடனே குகையிலேயே வந்து ஒளிந்து கொள்'' என்று விடாமல் அழைத்தது. அதற்கு புத்திசாலி மான், ''விலங்கினத்திலேயே உங்களுக்குத்தான் அறிவு அதிகம் என்பார்கள் அது மங்கி விட்டதா? அண்ணா! நான் மரத் துண்டில் ஒளிந்து வருவது சிங்கத்திற்கும், புலிக்கும் எப்படித் தெரிந்தது? அவை மோப்ப சக்தியால் என்னைக் கண்டு கொண்டன. ஆகையால், நான் உங்களுடன் இக் குகையில் தங்கினால், அவை மோப்ப சக்தியால் நான் உங்களுடன ஒளிந்திருப்பதைக் கண்டு, உங்களையும், என்னையும் தின்று விடுமே?'' என்றது.

இனியும் பேசிக் கொண்டிருந்தால் ஆபத்தென உணர்ந்த நரி, ''சரி, நான் உள்ளே செல்கிறேன். நீ அந்தப் பாறையைத் தள்ளி குகையை அடைத்து விடு'' என்று கூறிக் கொண்டே குகைக்குள் எட்டித் தாவியது. புத்திசாலி மான் பாறையைத் தள்ளி விட அது குகையை நன்றாக அடைத்துக் கொண்டது. உள்ளே இருந்த நரி, ''நீ எப்போ வருவே?'' என்று கேட்டது.

''அமாவாசையன்று சரியாக முழுச் சந்திரன் உதயமாகும் போது நான் வந்து விடுகிறேன் நரியண்ணா'' என்று உறுதியளித்து விட்டுத் தன் கூட்டத்தினரோடு சேர்ந்து கொண்டது மான்!



அதிசயப் போட்டி!

★ ஓட்டப் போட்டி, கால்பந்து போட்டி, கிரிக்கெட் போட்டி... என்று உலகில் பலவிதமமான போட்டிகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால், ஆண்டுதோறும் உலகிலேயே மிக அதிசயமான ஒரு போட்டி கலிபோர்னியாவில் 'ஏஞ்சல் கேம்ப்' என்ற இடத்தில் கடந்த பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் போட்டியை ரசிக்கிறார்கள். அது என்ன போட்டி, தவளைகள் தாவும் போட்டி. பணக்காரர்கள் இப் போட்டிக்கென்றே தவளைகளை ஏராளமாகச் செலவு செய்து வளர்க்கிறார்கள். அவர்கள் வளர்க்கும் தவளைகளுக்குள்தான் இந்த தாவும் போட்டி!

- சிவரஞ்சன், ஆற்காடு.



நீயாகவே எண்ணுவேன்!


★ ஜாமி என்ற பாரசீக மகா கவிஞர் ஒருமுறை சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அவர் ஆண்டவனை நோக்கிச் சொல்லும் பாவனையில், ''இறைவா! என் எண்ணங்களிலும், நினைவுகளிலும் நீயே நிறைந்திருக்கிறாய்! அதனால் என் பார்வையில் தென்படுவனவெல்லாம் நீயாகவே எனக்குத் தோன்றுகிறாய்!'' என்றார்.

இதைக் கேட்டுக் கூட்டத்திலிருந்த ஒருவன், ''அவரை மட்டம் தட்டும் நோக்கத்தோடு, கவிஞர் அவர்களே! உங்கள் முன் கழுதை ஒன்று வந்தால் அதை நீங்கள் எப்படி எண்ணுவீர்கள்?'' என்று கேட்டான்.

உடனே ஜாமி, ''அதையும் கூட நீயாகவே எண்ணுவேன்'' என்று பதில் சொன்னார். கேள்வி கேட்டவனின் முகம் இருண்டு போனது.

- போ. கோபாலகிருஷ்ணன்,
சிந்தாமணி.

உத்தமர்



இந்தி யாவின் தந்தையார்
என்றே புகழப் படுபவர்
இந்தி யாவின் உரிமைக்கே
என்றும் பாடு பட்டவர்.


ஏழை எளியோர் யாவரும்
இன்ப முற்று வாழவே
வாழ்நாள் முழுதும் உழைத்தவர்
வையம் போற்ற உயர்ந்தவர்

உண்மை, அன்பு, அகிம்சையை
உயரிய பண்பாய்க் கொண்டவர்
மண்ணில் சிறக்க வாழ்ந்தவர்
மகாத்மா வாகத் திகழ்ந்தவர்

நல்ல உள்ளம் வாய்ந்தவர்.
நாட்டுப் பற்று மிக்கவர்
அல்லல் வந்தே தாக்கினும்
அஞ்சாது வாழ்ந்த உத்தமர்.

— க. கோகிலவாணி.

முள்



நெறிஞ்சிக் காட்டின் உள்ளே
நிறைந்திருக்கும் முள்ளே!
அறிஞர் மூளை போல
அதிகக் கூர்மை பெற்றாய்!

தொடுக்கும் அம்பு போல
குத்து கின்ற முள்ளே!
உடுத்தும் ஆடை யானாய்
இனிய பலாப் பழத்தில்!

அழகு வண்ண ரோஜா
அமரும் மேடை யானாய்
கழனி யாவும் காக்கும்
காவல் வேலி யானாய்!

காலில் தைத்து விட்டால்
காய முற்ற நேரம்
காலில் முள்ளை எடுக்கும்
கருவி கூட நீதான்!

முள்ளம் பன்றி உடலை
மூடிக் காக்கும் முள்ளே!
ஒல்லி யாக இருக்கும்
உனக்குக் காவல் நீதான்!

—சி. விநாயகமூர்த்தி.

எறும்பு



எறும்பே எறும்பே சிற்றெறும்பே
எங்கே விரைவாய் செல்கிறாய்?
சுறுசு றுப்பாய் யிருக்கிறாய்ச்
சோம்ப லறியாச் சிற்றெரும்பே!

உழைப்பே பிழைப்பாய்க் கொண்டாய்
உலகோர் போற்றும் சிற்றெரும்பே!
மழைக்காலத் திரையைக் கோடையிலே
மலைபோல் சேர்த்தே வைக்கின்றாய்

நாளை நாளை என்றெதற்கும்
நாளை கடத்த லில்லாமல்
வேலை தனயே உடனுக்குடன்
விருப்ப முடனே முடிக்கின்றாய்!

உன்னைப் போன்றே மனிதரும்
உலகில் வாழக் கற்றிட்டால்
என்றும் எதிலும் சிறப்படைவர்
எல்லா நன்மையும் பெறுவாரே!





— க. கோகிலவாணி

உனக்கு மட்டும் என்னாச்சு?

''அப்பா, அப்பா'', என்று மணி செல்லமாக அழைத்தான். அப்பா தலையை நிமிர்த்திப் பார்த்து முறைத்ததும் அவன் தடுமாறி விட்டான். அவர் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார். அப்போது கடவுளே குறுக்கிட்டாலும் அவரால் பொறுக்க முடியாது!

''எதுக்குடா காலை வேளையில வந்து உயிரை வாங்கறே?'' என்று உறுமினார் அவர், மணி வாயடைத்துப் போனான். அப்பா தொடர்ந்து கர்ஜித்தார். ''பேப்பர் படிக்கச்சே தொந்தரவு செய்யாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? தொந்தரவும் செஞ்சிட்டு இப்போ ஊமை மாதிரி நின்னா என்ன அர்த்தம்?''

''ஒரு கட்டுரை எழுதணும்பா. ஆசிரியர் ஹோம் ஒர்க் குடுத்திருக்காரு. அதுக்குக் கொஞ்சம் பாயின்ட்ஸ் வேணும்.''

''அதுக்கு நான்தான் கிடைச்சேனா, ராஸ்கல்? பாயின்ட்சும் நீயே தேடி, கட்டுரையும் நீயே எழுதணும்னா வாத்தியார் சம்பளம் எதுக்கு வாங்கறார்னு அவரையே கேட்கிறதுதானே?'' - அப்பாவின் வார்த்தைகளில் உஷ்ணம் ஏறியது.

''நாங்களே யோசிச்சு சொந்தமா எழுதறதுதான் நல்ல பயிற்சின்னு அவர் சொன்னாருப்பா.''

''சரி போ, யோசி. பின்னே என் கிட்ட வந்து ஏன் கேக்கறே? தினசரி ஒழுங்கா படிக்காம இருந்திட்டு இப்ப பாயின்ட்ஸ் தேடினா கிடைக்குமா?'' என்று அப்பா கத்தினார்.

மணி தலையைச் சொறிந்தபடியே சொன்னான், ''இது பொதுக் கட்டுரைப்பா. புத்தகத்தில பாயின்ட்ஸ் கிடைக்காது. கோபத்தை வெல்வது எப்படின்னு ஒரு கட்டுரை''

''ஓ அப்படியா! இதைப் பற்றி எனக்கென்ன தெரியும்? எனக்குத்தான் கோபமே வராதே. போய் உங்கம்மாவைக் கேள். அவளுக்குத்தான் எடுத்ததுக்கெல்லாம் பயங்கரமாக் கோபம் வருதே'' என அப்பா விரட்டினார்.

அம்மா பரபரப்பாகச் சமையல் செய்து கொண்டிருந்தாள். எட்டரை மணிக்குள் சாப்பாடு தயாரானால்தான் சாப்பிட்டு விட்டுக் கணவர் அலுவலகத்திற்கும் குழந்தைகள் படிக்கவும் செல்ல வசதியாக இருக்கும். ஆகவே மணி தயக்கத்துடன் ''அம்மா'' என்றழைத்தான்.

குரல் கேட்டுத் திரும்பிய அம்மாவின் பார்வையில் நெருப்புப் பொறி பறந்தது. ''அதுக்குள்ள கொட்டிக்க வந்திட்டியா? சாதம் மட்டும்தான் ஆயிருக்கு. யாரும் கொஞ்சம் கூட ஒத்தாசை செய்யறதில்லை. வயிற்றில் கடிகாரம் இருக்கிற மாதிரி டயப்படிச் சாப்பிட மட்டும் ஆஜராயிடறீங்க'' என்று சீறினாள்.

''சாப்பிடறதுக்கு வரலைம்மா. ஒரு கட்டுரைக்குப் பாயின்ட்ஸ் கேட்க வந்தேன்.''

''எனக்கென்ன பாயின்ட்ஸ் தெரியும்? நான் எட்டாவது வரைதானே படிச்சிருக்கேன்? நீதான் பத்தாவது படிக்கிறியே...''

''படிப்புக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லைம்மா, கோபத்தை வெல்வது எப்படின்னு ஒரு கட்டுரைக்கு விஷயம் வேணும். அவ்வளவுதான்.''

''எனக்கு வேற வேலை கிடை

டாக்டர் என். ஸ்ரீதரன்

யாதா? சும்மாவா உட்கார்நதிருக்கேன்? கோபமே வராத என்கிட்ட கோபத்தைப் பற்றிக் கேக்கிறியே! உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா? உன் அண்ணன்கிட்ட கேளு. அவன்தான் முரடன், முன்கோபி. அவனுக்குத்தான் கோபத்தைப் பற்றி நல்லாத் தெரிஞ்சிருக்கும்'' என்று அம்மா விரட்டி விட்டாள்.

''அண்ணா'' என்று அழைத்தபடி மணி அண்ணனது அறைக்குள் நுழைந்தான். ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்த அண்ணன், படிப்பது தடைப்பட்டதால் கோபத்துடன் தலைநிமிர்ந்து பார்த்தான். மணி நடுங்கினான்.

அண்ணன் கத்தினான், ''ஏண்டா, நீதான் காலையில படிக்கிறது கிடையாதுன்னா, ஏன் மத்தவங்க படிக்கிறதையும் கெடுக்கறே?''

மணி அண்ணன் கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தான். அது ஒரு கிரைம் நாவல்! மணி மெதுவான குரலில் சொன்னான், ''பாடம் சம்பந்தமாகத் தான் உன்னைப் பார்க்க வந்தேன் அண்ணா.''

''ஏண்டா, உனக்கு எவ்வளவு கொழுப்பு! எம்.ஏ. படிக்கிற என் கிட்டே வந்தா பத்தாம் கிளாஸ் பாடச் சந்தேகம் கேட்கறே? உன் கிளாஸ்மேட் எவனையாவது கேளு, போ'' என்று அண்ணன் சீறினான்.

''ஒருத்தனும் சொல்ல மாட்டேங்கிறான் அண்ணா. அதனாலதான் உன் கிட்ட வந்தேன். கோபத்தைப் பற்றி ரெண்டு - மூணு பாயின்ட்ஸ் கொடு, போதும்.''

''டேய், கிண்டலா செய்யறே? பல்லை உடைச்சிடுவேன். எப்பவாவது எனக்குக் கோபம் வந்து பார்த்திருக்கியா!'' என்று அண்ணன் மிரட்டினான். மணி பயத்துடன் ''இல்லை'' என்று தலையசைத்தான்.

''அப்புறம் நான் எப்படிப் பாயின்ட்ஸ் தர முடியும்? போய் அக்கா கிட்ட கேளு. அவதான் காளியோட அவதாரமாச்சே'' என்று அண்ணன் விரட்டி விட்டான்.

அக்கா மாடியில் படித்துக் கொண்டிருந்தாள். ''அக்கா'' என்று மணி தீனமாகக் கூப்பிட்டான். திரும்பிப் பார்த்த அவள் முகம் காளி போல் கோபத்துடன் சிவந்தது. அவள் சண்டைக்கே வந்து விட்டாள்: ''ஏண்டா மணி, படிக்கச்சே தொந்தரவு செஞ்சா எனக்குக் கோபம் வரும்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். மூளையில ஏறலையா அல்லது மூளையே கிடையாதா?''

மணி கெஞ்சினான் : ''நீ படிப்பில கெட்டிக்காரியாச்சே. கோபத்தைப் பற்றிப் பொதுக் கட்டுரை எழுதணும். கொஞ்சம் பாயின்ட்ஸ் கொடு அக்கா.''

''டேய், என்னைக் கோபக்காரின்னு கேலியா செய்யறே? உதை வேணுமா? கோபமே வராத என்கிட்டேயே கோபத்தைப் பற்றிப் பாயின்ட்ஸ் கேட்கற அளவுக்குத் திமிரா?'' என்று அக்கா அதட்டினாள்.

மணி தலைகுனிந்தபடியே கீழே வந்து விட்டான். பேசாமல் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போய் விட்டான்.

வகுப்பு துவங்கியது. ஆசிரியர் கட்டுரை ஏடுகளை அவரது மேசை மேல் வைக்குமாறு கட்டளையிட்டார். அனைவரும் கொண்டு வந்து வைத்தனர் : மணியைத் தவிர.

ஆசிரியர் கோபத்துடன் கேட்டார், ''இவ்வளவு பேரும் கட்டுரை எழுதிட்டாங்க. உனக்கு மட்டும் என்னவாச்சு?''


''ஒரு பாயின்ட்டும் கிடைக்கலை சார்'' என்றான் மணி பணிவுடன்.

ஆசிரியரின் கோபம் அதிகரித்தது. ''ஏன் பொய் சொல்றே? மத்தவங்

சைக்கிள்ல பெல் இல்லாம வரியே...?
உன் பேர் என்ன?
'மணி' சார்!
- கபிஸ்தலம். ஏ. கே. ஆனந்தப்ரியா







வயதான பூ ஒன்று சொல்லு?
ம'கிழம்' பூ!
- எம். ஆனந்தன், வந்தவாசி.

களுக்கெல்லாம் மட்டும் ஐடியா எப்படிக் கிடைச்சிது? ஆகாசத்திலேந்து கொட்டிச்சா? நல்லா யோசனை செஞ்சாத்தானே எழுத விஷயம் கிடைக்கும்? அதுக்கெல்லாம் உனக்கு எங்கே நேரம்? நீதான் சரியான தூங்குமூஞ்சிப் பயலாச்சே. கிளாசை விட்டு வெளில போ. கெட் அவுட்'' என்று கத்தினார்.

மணிக்கு மிகவும் அவமானமாகி விட்டது. அவன் இதுவரை எந்தத் தண்டனையும் பெற்றதில்லை. தனக்கு இந்த நிலை ஏற்படக் காரணமான அப்பா, அம்மா, அண்ணன், அக்கா மற்றும் ஆசிரியர் மீது கடுங்கோபம் பொங்கியது.

சலிப்புடனும் வேதனையுடனும் தீராத வெறுப்புடனும் மணி வீடு திரும்பினான். பையை அப்படியே கூடத்தில் எறிந்து விட்டு ஒரு மூலையில் போய்ச் சுருண்டு படுத்தான்.

சப்தம் கேட்டு அம்மா வந்தாள். மணியைத் தழுவிக் கொண்டு, ''ரொம்பப் பசியா, மணி? அல்வா செஞ்சிருக்கேன் வா'' என்று கூறியபடியே சமையலறைக்கு அழைத்துச் சென்றாள். அவனை வகுப்பை விட்டு வெளியேற்றியது அறிந்து ஆறுதல் சொன்னாள் :

''என் தப்புதான். எனக்கு தெரிஞ்ச மட்டுமாவது எதாவது பாயின்ட் சொல்லியிருக்கலாம். கோபத்தை எப்படி ஜெயிக்கிறதுன்னு கேட்டேல்ல. கோபமே வராதபடித் தடுத்திட்டா அதை ஜெயிச்ச மாதிரிதான். அதுக்கு நாம மற்றவங்களுக்குக் கோபமூட்டாம இருக்கணும். உதாரணமா, காலையில சமையல் நேரம் தவிர வேற சமயத்தில நீ ஏதாவது கேட்டிருந்தா எனக்குக் கோபமே வந்திருக்காது. மற்றவங்க சௌகரியத்துக்கு ஏற்றபடி நடந்துக்கிட்டா கோபமூட்டாம இருக்கலாம்.''

அக்கா பள்ளியிலிருந்து திரும்பினாள். அம்மா மூலம் விஷயம் தெரிந்து அவள் மணியைத் தட்டிக் கொடுத்துப் பரிவுடன் சொன்னாள் : ''என் தப்புதான், நான் அஞ்சு நிமிஷத்தில அஞ்சு பாயின்ட் சொல்லியிருக்க முடியும். ஆனா, கிளாஸ் டெஸ்ட்டுக்குப் படிக்கச்சே நீ குறுக்கிட்டதால கோபம் வந்திடுச்சு.''

''கோபம் எல்லாருக்கும் வரும். ஒரு எறும்பைத் தடுத்தாலும் அது தலையைத் தூக்கிக் கடிக்கும். கோபம் வந்தப்புறம் அடக்க முடியாது. அதை முன்னாடியே தடுத்திடணும். மற்றவங்களோட நிலையைப் புரிஞ்சிக்கிட்டு கோபம் மூட்டாம இருந்தா கோபத்தை ஜெயிச்சிட்ட மாதிரிதான்.''

அண்ணன் கல்லூரியிலிருந்து திரும்பியதும் தங்கை மூலம் நடந்ததை அறிந்து மணியிடம் கனிவாகச் சொன்னான்: ''சாரிடா மணி, நேற்று ராத்திரியே கேட்டிருந்தா நிறைய ஐடியா குடுத்திருப்பேன். காலையிலே சுவாரசியமாப் படிக்கும் போது நீ குறுக்கிட்டுக் கோபம் மூட்டிட்டே. அதனால, கோபம் ஏற்படுத்தாம இருக்கிறதுதான் கோபத்தை வெல்லும் வழின்னு தெரியுது.''

இந்தப் பேச்சைக் கேட்டவாறே சரியாக அப்பொழுதுதான் ஆபீசிலி ருந்து அப்பா திரும்பினார். அவரும் ஆமோதித்தார் : ''ஆமாம் மணி, மூட்டினாத்தான் தீ பிடிக்கும். தூண்டி விட்டாத்தான் கோபம் வரும். நீ படிக்கச்சே எதுக்காவது கடைக்குப் போகச் சொன்னா கோபம் வருதில்ல? அதே மாதிரி, நான் பேப்பர் பார்க்கச்சே யாராவது தலையிட்டா எனக்குக் கோபம் வருது. ஒரு பொருளை இல்லாமல் ஆக்குவதைத்தான் அதை ஜெயிப்பதுன்னு சொல்றோம். ஒருத்தருக்கொருத்தர் கோபம் உண்டாக்காம இருந்தா கோபம் அடியோட அழிஞ்சு

போகும்.''

மணி தீவிரமாக யோசித்தான். அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, ஆசிரியர் ஆகிய ஐவருக்கும் அன்று கோபம் வந்ததற்குக் காரணம் அவன் அவர்களுக்குக் கோபமூட்டியதுதான். இதனால், பிறகு அவர்களும் அவனுக்குக் கோபம் ஏற்படுத்தி விட்டனர். இப்படிப் பரஸ்பரம் கோபமூட்டுவதால்தான் குடும்பத் தகராறிலிருந்து உலகப் போர் வரை நடைபெறுகிறது. மற்றவர்களின் உடல்நிலை., மனநிலை, சூழ்நிலையைக் கவனித்துப் பழகினால் யாருக்கும் கோபம் ஏற்பட நியாயமில்லை. கோபத்தை வெல்வதென்பது இதுதான். இந்த விஷயங்களையெல்லாம் வைத்து மணி கட்டுரை தயாரித்தான்.

ஆசிரியர் அதைப் படித்து வியப்படைந்தார். வகுப்பில் உரக்கப் படித்துப் பாராட்டினார். ''நீதான் சுயமா யோசிச்சுப் புதுவிதமா எழுதியிருக்கே. நீ எழுதியிருக்கிறது சரிதான். விதைன்னு ஒண்ணு இருந்தா அப்புறம் செடி முளைக்கத்தானே செய்யும்? அது மாதிரி, எரிச்சலூட்டினாத்தான் கோபம் வரும். நீ நேற்று கட்டுரை கொண்டு வராததால எனக்குக் கோபமூட்டினே. உன்னை வெளியில போகச் சொல்லி நான் உனக்குக் கோபமூட்டிட்டேன்'' என்றார். பிறகு அவர் புன்முறுவலுடன், ''உனக்கு என் மேல இருந்த கோபம் போயிடுச்சா?'' என்று கேட்டார்.

''சார், எனக்கு உங்க மேல முதலில் கோபம் வந்தது உண்மைதான். ஆனாலும், முதல்ல கோபமூட்டினது நான்தானே! ஆகவே, தப்பு என்னுடையதுதான். உங்க கோபம் வாழ்த்தா அமைஞ்சிடுச்சு. அதனாலதான் நானே சொந்தமா யோசிச்சுக் கட்டுரை எழுத முடிஞ்சு உங்க பாராட்டும் கிடைச்சது'' என்றான்.

''யாராக இருந்தாலும் கோபப்படறது தப்புதான். கோபத்தை அடக்கிக் கொள்வது என்பது தற்காலிக வெற்றிதான். கோபமே தோன்றாத படித் தடுத்திடணும். அதுதான் அதை நிரந்தரமா ஜெயிக்கிற வழி. கோபம் ஒரு பெரிய மரம்னா, கோபமூட்டுவதுதான் அதன் விதை மாதிரி, அந்த விதையை விதைக்காம இருந்திடணும். அதாவது, ஒருத்தருக்கொருத்தர் கோபமூட்டிடாம, சூழ்நிலையைக் கவனிச்சு எச்சரிக்கையோட பழகணும். அப்புறம் யாருக்குக் கோபம் வரும்? எப்படிக் கோபம் வரும்? மணி எழுதியிருக்கிற இந்தக் கருத்து மணியான கருத்து'' என்று ஆசிரியர் கூறி முடித்தார்.

அதை ஆமோதிப்பது போல் பள்ளிக்கூட மணியும் ஒலித்தது!

இப்பழயும் தண்டனை!



★ தவறு செய்தால், பெற்றோர் கண்டிப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால் நியூயார்க்கைச் சேர்ந்த 42 வயது ஜோசப் என்பவர் தனது மகன் தாமதமாக வந்ததற்காக அவனது கழுத்தை நாய்ச் சங்கிலியால் பிணைத்து இரவு முழுவதும் நாய் போலக் குரைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தண்டனை கொடுத்து விட்டார். பக்கத்து வீட்டார் சொல்லியும் கேட்கவில்லை. இப்பொழுது ஜோசப் மீது வழக்குத் தொடரப்பட்டு அவர் சிறையில் உள்ளார்!


- செஞ்சி - 2, க. இரா. விஜயகுமார்.



திராட்சை புராணம்

★ நிறைய திராட்சைப் பழம் சாப்பிடுங்கள்! வாய்ப்புண், வயிற்று புண் நீங்க, ஜீரண சக்தி பெருக, இதய வீக்கம் வலி குணமாக, மலச்சிக்கல் தீர, இரத்தம் சுத்தமடைய, நரம்புகள் வலுப்பெற, உள்ளுறுப்புகள் உறுதியடைய, ஜீவசக்தி பெருக, சுறுசுறுப்புப் பெற இயற்கை அருளிய அரிய மருந்துப் பொருள் 'திராட்சை' ஆகும்.

- எஸ். மனோகரன், சங்கமங்கலம்.





நீயேவா எழுதினே!

''அண்ணா...?''

கதைப் புத்தகத்தில் மூழ்கியிருந்த நான், குரல் கேட்டு நிமிர்ந்தேன். ஏதோ எழுதிய வெள்ளைத் தாளைக் கையில் வைத்திருந்தபடி தம்பி குமரன் நின்று கொண்டிருந்தான்!

''என்ன குமரா...?''

''பாலர் மஞ்சரி'யிலே வெளியான பாடல் போட்டிக்குப் பாடல் எழுதச் சொன்னீங்கள்ல. அதான் எழுதிட்டேன். பாருங்க...!'' நீட்டினான்.

விடுமுறையென்று வெட்டித்தன மாய்ப் பொழுதுபோக்காமல் என் தம்பி உருப்படியாகப் பொழுதைச் செலவிடு வதில் மகிழ்ந்த நான், 'சபாஷ்' என்று சொல்லி அதை வாங்கினேன்.

''பள்ளி விடுமுறையின் போது என்னவெல்லாம் செய்யப் போகிறீர் களோ... அதையெல்லாம் குழந்தை களுக்கான பாடலாக இருபது வரி களுக்குள் எழுதியனுப்புங்கள். பிரசு ரிப்பவற்றிற்குப் பரிசுகள் வழங்கப் படும்...!'' என்று அறிவித்திருந்த அந்தப் போட்டியில் கலந்து கொள்ளுவதற் காகத் தம்பி குமரன் எழுதிய பாடலைப் படித்தேன்....!

மிக அற்புதமாக இருந்தது. ஆறாம் வகுப்புப் படிக்கும் அவனது அறிவுக்கு அனுபவத்திற்கு மிஞ்சியதாகக்கூட அது விளங்கியது!

வயதுக்கும் திறமைக்கும் என்ன இருக்கிறது? திறமையிருக்கிற ஒரு வன்... தொடர்ந்து முயற்சி எடுக்கிற போது சிறப்பும் தகுதியும் அடைகிற தில்லையா... வயதை விட முயற்சி தானே முக்கியம்!

தம்பி குமரனுக்கு அந்தத் திறமை யிருக்கிறது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் நூலகத்தில் போய்ப் படிக்கிறான். போதாக்குறைக்கு வீட்டில் வாங்குகிற சிறுவர் புத்தகங்களையும் படிக்கிறான். அவ்வப்போது எழுதியும் முயற்சி செய்கிறான்! எனவே, இந்த

திருங்கை சேதுபதி

வயதில் இப்படி எழுத முடியாதா என்ன?

ஆயினும் சந்தேகம் என்னை விட வில்லை.

''குமாரா இந்தப் பாடலை நீயேவா எழுதினே?''- இந்தக் கேள்வி குமர னைச் சற்றுத் திடுக்கிடத்தான் செய் தது...! ஆயினும் சமாளித்துக் கொண்டு ''நான்.. நானேதான் எழுதினது!'' என்று முதலில் சற்றுத் தயங்கி, பிறகு உறுதி யாகக் கூறியது திருவிளையாடலில் தருமியாக நடித்த நாகேஷை நினை வூட்டியது...!

''அப்படின்னா பாட்டைச் சொல்லு பார்ப்போம்...!''

ஆரம்பத்திலிருந்து எழுத்து கூடப் பிசகாமல் இறுதிவரை ஒப்பித்து விட்டான்...! இடையிடையே விளக்க மும் கேட்டேன் விபரமாகவே கூறி விட் டான்...!

ஆயினும் முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்போது அவன் காட்டிய நடுக்கம் என்னைச் சந்தேகிக்கத் தூண்டி யது...!

''சரி... இதை எந்தப் பேனாவிலே எழுதினே...?''

''ஏன்...? என்னோட பேனாவி னாலேதான்...! இதோ எடுத்து வரேன்!'' என்று சொல்லிக் கொண்டே ஓடிப் போய் எடுத்துக் கொண்டு வந்தான் அழ கான நீலப் பேனா.

ஏற்கெனவே, நானும் அப்படி ஒரு பேனா வைத்திருந்தேன்...!

''டேய்.. உனக்கு ஏதுடா இந்தப்



பேனா...?''

''இந்த வருஷம் எங்க ஸ்கூல்லே குடுத்தாங்க. கிளாஸ்லே ஃபர்ஸ்ட் வந்ததாலே...!''

''இல்லே.. இது என்னோட பேனா. நீ திருட்டுத்தனமா எடுத்துக்கிட்டே...?''

குமரனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது! அடக்கிக் கொண்டு சொன்னான்...!

''இல்லேண்ணா இது என் பேனா தான்...!''

''திருடினதுமில்லாம பொய்யா சொல்றே ராஸ்கல்...!''


''நான் எப்போ திருடினேன்? நீங்க தான் பொய் சொல்றீங்க...?''

''எதிர்த்தா பேசற கழுதே...!'' - குரலில் கோபத்தைக் காட்டினேன்.

நல்ல நிலத்திலும், சின்னப் பிள்ளைகளிடமும் என்ன விதைத்தோமோ அது தானே விளையும்...!

''நீதான் கழுதே...!'' என்று பதிலுக்குச் சொல்லி விட்டு, ஓட முயன்ற அவனை ஆத்திரத்தோடு பிடித்துத் தலையில் 'நறுக்'கென்று குட்டினேன்...!

''குமரன் போட்ட அலறலில் அடுக்களையில் சமைத்துக் கொண்டிருந்த அம்மா, ''சேச்சேச்சே... லீவு விட்டதும் போதும்... இதுங்க.. கலாட்டாப் பண்றதும் போதும்... கடவுளே.. கடவுளே...!'' என்று அலுத்துக் கொண்டே, ''என்னாங்கடா சண்டே..?'' என்று விசா





பாடும் தொப்பி!

ஜெர்மனியைச் சேர்ந்த எர்வின் கிராசர் என்ற தொப்பி வியாபாரி பாடும் தொப்பியை தயாரித்திருக்கிறார். மிகச்சிறிய டிரான்சிஸ்டர் ரேடியோ ஒன்றைத் தொப்பிக்குள் வைத்துப் பொருத்தியிருக்கிறார். இந்தச் சிறிய டிரான்சிஸ்டரைப் பாட வைத்துத் தொப்பியைத் தலையில் வைத்துக் கொண்டால் போதும்; பாட்டைக் கேட்டுக் கொண்டே போகலாம். கையை வீசிக் கொண்டு நடக்கலாம்.

- மயிலாடுதுறை, ஆறுபாதி புகழேந்தி.

ரித்துக் கொண்டே வந்தாள்!

குமரன் முறையிட்டான். பதிலுக்கு நானும் வாதிட, "சரி சரி சாயந்திரம்... அப்பா வந்ததும் பேசிக்கலாம்..! முதல்ல சாப்பிட வாங்க...!" என, 'வழக்கை' ஒத்தி போட்டு விட்டு அம்மா செல்ல, அழுகையைக் கொஞ்சங் கொஞ்சமாய் அடக்கிக் கொண்டு அம்மாவின் பின்னாலேயே சென்றான் தம்பி குமரன்...!

மாலையில் அப்பா வந்ததும் முதலில் தம்பிதான் அவரிடம் வழக்கை முன் வைத்தான்...! நானும் பதிலுக்கு என் பக்கத்தைச் சொன்னேன்...! சாட்சியாக வந்த அம்மா, "சத்தங் கேட்டதுக்கப்புறந்தான் நான் வந்தேன்... முன்னால என்ன நடந்ததுன்னே எனக்குத் தெரியாதுங்க" என்று புத்திசாலித்தனமாக உண்மையைச் சொல்லி விலகிக் கொண்டாள்...!

விசாரணையை அப்பா எங்களிடம் தொடர்ந்தார்...!

"குமாரா இது உன் பேனாங்கறதுக்கு என்ன ஆதாரம்...?"

"நான்தான்.. ஸ்கூல்லேயிருந்து பரிசு வாங்கிட்டு வந்தவுடனேயே உங்ககிட்டே காட்டினேன்ல... அப்பா..!" - சொல்லிக் கொண்டிருக்கையிலேயே குமரனின் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது!

அப்பா என் பக்கம் திரும்பினார்...

"அவன்தான் சின்னப் பிள்ளே.. நீயுமா சின்னப் பிள்ளே? அவனை விட அஞ்சு வயசு மூத்தவன் வேறே...! நீ வேறு ஒரு பேனாதான் வாங்கிக்கிட்டா என்ன...?"

"பேனா வாங்கறது ஒண்ணும் பெரிசில்லேப்பா... ஆனால், இவன் இந்த வயசிலேயே பொய் பேச ஆரம்பிச்சுட்டான்ங்கறதைத்தான் என்னால தாங்கிக்க முடியலே!" - பெரிய மனுஷன் மாதிரி பேசி விட்டேன்.

"என்னடா குமரா.,. நீ சொல்றதெல்லாம் பொய்யின்னு அண்ணன் சொல்றான்...?"

"சத்தியமா இது என் பேனா தாம்பா.. அண்ணன்தான் வேணுமின்னே பொய் சொல்றாங்க...!" - சொல்லிக் கொண்டிருக்கும்போதே குமரனுக்கு விசும்பலும் வெளிவந்தது.

"பொய்ச் சத்தியம் பண்றான் ராஸ்கல்.. இவன் பொய் சொல்றதோட இல்லாம திருடவும் ஆரம்பிச்சுட்டான்...!"

"அப்படி என்னதாண்டா பொய் சொல்லிட்டான், திருடிட்டான்...?" - அப்பாவின் வார்த்தைகளில் கோபத்தோடு கூடிய சலிப்புத் தெரிந்தது...!

"என்னவா...! இன்னிக்குக் காலையிலே, 'பாலர் மஞ்சரி' - பாடல் போட்டிக்கு அனுப்பறதுக்காகப் பாடல் எழுதிட்டு வந்தான். நானும் அது நல்லா இருந்ததனால என் ஃபிரெண்ட்கிட்டே சொல்லிப் பெருமைப்பட்டுக்கிட்டேன். அவன், 'இது எங்கேயோ படிச்ச மாதிரி இருக்கேன்னு' சொன்னான்! ரெண்டு பேரும், பழைய புத்தகங்களைப் புரட்டினோம்.. அது ஏற்கெனவே ஒரு புத்தகத்திலே வெளியானதுன்னு தெரிஞ்சவுடனே.. எனக்கு எவ்வளவு அவமானமா இருந்துச்சு தெரியுமா..?" - நான் சொல்லி முடித்ததும் அப்பா தம்பியின் முகத்தைப் பார்த்தார்.

தம்பி குமரனின் தலை தரை நோக்கித் தாழ்ந்திருந்தது.

"என்னடா.. அண்ணன் சொல்றது

நெஜமாடா..?''

வார்த்தை ஏதும் வரவில்லை. குமரனின் தலை மட்டும் 'ஆம்' என்பதைப் போல ஆடியது. எனது சந்தேகம் உறுதியானது.

''டேய்... குமரா திருடறதுங்கறது மோசமான செயல். திருட்டுன்னா... பொருளைத் திருடினதா மட்டும் அர்த்தமில்லே. பிறரோட கருத்தைத் திருடறது. பாடலை, கதையைத் திருடுறதும் கூடத்தான்! திருடறதை விடத் திருடலேன்னு பொய் சொல்றது ரொம்பத் தப்புடா... அப்படிப்பட்ட காரியத்தை நீ செய்யலாமா? நீ அனுப்பறதைத் தேர்ந்தெடுத்து உன் பெயரிலேயே அதை வெளியிடறாங்கன்னு வச்சுக்கோ.. அதை முதல்லேயே எழுதினவன் கண்டுபிடிச்சு ஆதாரத்தோட நிரூபிச்சுட்டான்னா உன்னை யாரு நம்புவா? அவனே அசந்தாலும், வாசகர்களை ஏமாற்றி விட முடியுமா? அப்புறம் நீயா.. சுயமாவே எழுதி அனுப்பினாக் கூட நீதான் எழுதினேன்னு யாரும் நம்ப மாட்டாங்க... அப்ப உன்னோட நாணயம் என்னாகும்...?''

குனிந்த தலையை நிமிர்த்தி அப்பாவைப் பார்த்தான் குமரன். விழியோரம் நீர் தேங்கியிருந்தது. கண்களில் நிறைந்திருந்த பிரகாசமான ஒளி, அவன் எடுத்துக் கொண்டு விட்ட மனவுறுதியை வெளிக்காட்டியது!

''நீங்க... சொல்றது சரிப்பா... இனிமேல் நானா,., சுயமா... எழுதிட்டு வர்றேன். ஆனா... அந்தப் பேனா...?''

இப்போ நான் குறுக்கிட்டேன்.

''உன்னோடதுதான் குமரா.. இது எனக்கு நல்லாத் தெரியும். உன்னோட பேனாவை என்னோடதுன்னு நான் சொல்றப்போ உனக்கு எவ்வளவு ஆத்திரம் வந்தது? இன்னொருத்தரோட பாடலை உன்னோடதுன்னா, அதை எழுதினவனுக்கு எப்படி இருக்கும்? அவனுக்கு எவ்வளவு ஆத்திரம் வரும்? அதை நீ உணரணும்கிறதுக்காகத்தான் பேனா என்னுதுன்னேன். உன்னால் அது மாதிரி.. ஏன்.. அதை விடச் சிறப்பா எழுத முடியாதுன்னு ஏன் நெனைக்கிறே...? உன்னால கண்டிப்பா எழுத முடியும். அந்தத் திறமை உனக்கு இருக்கு. முறையா.. முயற்சி செய். நெறையப் படி. எழுதிப் பழகு. பயிற்சி எடு. ஒவ்வொரு வார்த்தையும் கருத்தும் உன்னோட அனுபவப்பட்ட - சம்பந்தப்பட்ட சொந்தமானதா இருக்கணும்... என்ன? இந்தா உன்னோட பேனா...''

சந்தோஷத்தோடு பேனாவை வாங்கிக் கொண்டு போன குமரன் சுயமாக.. அவனது இயல்பான வார்த்தைகளோடு மிக அற்புதமாக ஒரு பாடலை மறுநாளே எழுதிக் கொண்டு வந்தான்!


ஒன்றிரண்டு எழுத்துப் பிழைகளை மட்டும் திருத்தி அவனுக்கும் அதை விளங்க வைத்து மெருகூட்டிக் கொடுத்தேன். போட்டிக்குரிய தேதிக்கு இரு தினங்கள் முன்பாக அனுப்பி விட்டோம்!


இரண்டு வாரங் கழித்து, தம்பி குமரனுக்குக் கடிதமொன்று வந்திருந்தது...!


''அன்புள்ள இளங்கவி குமரனுக்கு...'' என்று தொடங்கியிருந்த கடிதம் அவனது பாடல் முதற்பரிசு பெற்றிருப்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட்டிருந்தது. அந்தப் பாடல் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டுமா..?

''அடுத்த மாத 'பாலர் மஞ்சரி'யிலே என் தம்பி போட்டோவோட வரும் பார்த்துக்குங்களேன்...!''


''நீங்க ஏன் ரெண்டு நாளா ஸ்கூல் வரலை?''
''பாட்டி இறந்துட்டாங்க சார்!''
- சீர்காழி. வி. ரேவதி.







எனக்கு என்ன இருக்கு?
கருத்து: பி.சம்பத் குமார்.
அமைப்பு: 'ரே'
ஓவியம்:
ஒரு வேலையும் செய்ய மாட்டான். எப்பொழுதும் தூங்குவான்.
கொர்..... கொர்...
சோம்பேறித் தனத்துக்குப் பேர் போனவன் சபாபதி.
யாராவது வந்து—
சபாபதி! வேலை வெட்டி ஏதாவது செய்யக் கூடாதா?
என்று கேட்டால்..
என்னிடம் என்ன இருக்கு? சொத்தா? நிலமா? எதை வைச்சு உழைக்கிறது?
1


ஒரு நாள் பெரியவர் ஒருவர்-
சபாபதி! ஏதாவது உழைக்கக் கூடாதா?
வழக்கப்படி சபாபதி-
எனக்கு என்ன இருக்கு? சொத்தா? நிலமா?
உன்னிடம் எதுவுமேவா இல்லை?
இல்லையே!
அப்போ உனக்கு லட்சம் ரூபாய் தரேன். உன் கண்கள் கைகளைத் தந்து விடேன்!
?


பெரியவர் சொன்னதைக் கேட்ட சபாபதி யோசித்தான்.
என்ன தயக்கம்! இப்ப உன்னிடம் என்ன இருக்குன்னு புரிந்ததா?
புரிந்தது மட்டுமில்லை அதன் மதிப்பும் புரிந்தது.
ஆண்டவன் கொடுத்த கை கால்கள் இருக்கும் போது உழைக்க வேறு என்ன வேணும்?
புத்திசாலி! உன்னை அறிந்து கொண்டாய்!



முட்டாள்களின் அழுகை!

ஒரு கிராமத்தில் ஒரு வயதான பெண்மணி வசித்து வந்தாள். அவளுடைய ஒரே மகன் வெகு தூரத்திலுள்ள ஒரு நகரத்தில் வேலை செய்து வந்தான்.

தன் சுகத்தைப் பற்றியும், தன் தாயின் சுகத்தைப் பற்றியும் மகன் ஒரு கடிதம் தன் தாய்க்கு எழுதினான்.

தாய்க்குக் கடிதம் கிடைத்தது. அது மகனின் கடிதம் என்பதையும் அவள் உணர்ந்து கொண்டாள். ஆனால், அவளுக்குப் படிப்பறிவில்லை. ஆதலால் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டு யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அவ் வழியே முண்டாசு கட்டிய ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டுத் தன் மகனின் கடிதத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னாள் தாய்.

ஆனால் அக் கடிதத்தைக் கையில் வாங்கிய மனிதன் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தான்!

மகனைப் பற்றிய ஏதோ கெட்ட செய்தி அக்கடிதத்திலுள்ளது என்று நினைத்து அவளும் பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

வியாபாரி வந்தான். தானும் அவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து அழ ஆரம்பித்தான்.

தபால்காரர் திரும்பி வந்து கொண்டிருந்த போது வீட்டு வாசலில் மூன்று பேரும் உட்கார்ந்து அழுது கொண்டிருப்பதைப் பார்த்தார்.

''எதற்காக அழுகிறீர்கள்? என்ன காரணம்?'' என்று கேட்டார் தபால்காரர்.

''ஐயா! இன்று மண்பாண்டங்களை விற்க எடுத்து வரும் பொழுது எல்லாப் பாண்டங்களும் கீழே விழுந்து உடைந்து விட்டன. அதனால் எனக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டதை நினைத்து வருத்தத்தோடு வந்து கொண்டிருக்கும் போது இவர்கள் அழுது கொண்டிருந்ததைப் பார்த்தேன். எனக்கும் அழுகை வந்தது. அதனால் அழுதேன்'' என்றான் வியாபாரி.

''ஐயா, நான் அழுததற்குக் காரணம், எனக்குப் படிக்கத் தெரியாது. இத் தாய் தனக்கு வந்த கடிதத்தை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னதும், கடிதத்தைப் படித்துச் சொல்ல நமக்குப் படிப்பறிவில்லையே என்று என் அறியாமை நினைத்து அழுகை வந்தது. அழுதேன்'' என்றான் முண்டாசு.

தபால்காரர் தாயிடமிருந்து கடிதத்தை வாங்கிப் படித்து, மகன் சுகமாக இருக்கிறான் என்னும் செய்தியைச் சொன்னார்.

படிப்பறிவில்லாத இருவரும், தாங்களும் அழுது, தாயையும் அழ வைத்ததை நினைத்து வருந்தினார்கள்.

(ஜப்பானியக் கதையில் தழுவல்)

- லக்ஷ்மி விஸ்வநாதன், புதுதில்லி.



பட்டினியால் அழியுமா மூட்டைப் பூச்சி?

கூட்டிலைப் பிடித்து முற்றத்தில் கொண்டு வந்து போட்டார் வீட்டுக்காரர்.

கட்டிலின் சட்டங்களுக்கு இடையே இருந்த இடுக்குகளில் எவ்வளவோ தலைமுறைகளாக இனப்பெருக்கம் செய்து, வசதியாக வாழ்ந்து கொண்டிருந்தது மூட்டைப் பூச்சிக் குடும்பம் ஒன்று.

''எதுக்குக் கட்டிலை இங்கே கொண்டு வந்து போட்டிருக்காங்க?'' என்று வியப்போடு கேட்டது ஒரு குட்டி மூட்டை.

''இங்கே நல்லா வெயிலடிக்கும். இந்த வெயில் சூடு தாங்காது நாம் கட்டிலிலிருந்து அழிந்து விடுவோம் என்று வீட்டுக்காரர் நினைக்கிறார். இப்படித்தான் மூன்று மாசத்திற்கு ஒரு முறை, நம்ம கடி தாங்காது கட்டிலைக் கொண்டு வந்து வெயிலில் போடுவார்கள். நம்மை அழிக்க இவர்களால் ஆகுமா என்ன?'' என்று பெருமைப் பட்டுக் கொண்டது அம்மா மூட்டை.

''அம்மா, வெயில் சுரீர்னு படுதே! சூடா இருக்கே!'' என்று கேட்டது ஒரு குட்டி மூட்டை.

''பயப்படாதே. ஏன் சட்டத்துக்கு மேலே வரே? சட்டத்துக்குக் கீழே, வெயில் படாத இடத்துல மறைஞ்சுக்கோ. அப்படியும் கஷ்டமா இருந்தா, சட்டங்களின் இண்டு இடுக்கில் புகுந்துக்கோ,'' என்றது அம்மா மூட்டை.

''நான் நினைக்கிறது சரியா இருந்தா இன்னும் பத்துப் பதினைந்து நாள் வரை இந்தக் கட்டிலை இங்கிருந்து நகர்த்த மாட்டாங்க. யாரும் இதில் வந்து உட்காரவும் மாட்டாங்க. நாம எல்லோரும் பட்டினிதான்'' என்றது அப்பா மூட்டை.

''ஆறு மாசம் கூட நாம பட்டினியாக் கிடக்கலாங்க. நாம சாக மாட்டோம். ஆனால், இந்தப் புதுப் பெண்ணுக்கு இது தோலுரிக்கிற நாளாச்சே. அதுக்கு அவள் இரத்தம் குடிக்கணுமே?'' என்று கவலைப்பட்டது அம்மா.

''ஆண்டவன் ஏதாவது வழிகாட்டாமலா போவான்?'' என்று தத்துவம் பேசிய அப்பா, பெரிய பொண்ணு ஐந்தாவது தடவை தோலுரிச்சிடுத்தா?'' என்று கேட்டார்.

''நல்லவேளை, ஊர்லேருந்து வந்திருந்த அந்த தடித்த ஆசாமி கட்டில்ல வந்து படுத்தார். அந்தப் பொண்ணுக்கும் இரத்தம் கிடைச்சது. ஐந்தாவது தோலை உரிச்சிட்டது. நமக்கும் நல்ல ஆகாரம்

ரேவதி

கிடைச்சது. சின்னப் பொண்ணைக் கூடக் கூப்பிட்டேன், 'வாடி வந்து இரத்தத்தைக் குடிச்சுக்க. ஆசாமி நம்ம கடித் தொந்திரவு தாங்காம எழுந்து வேற இடத்திற்குப் போவதற்குள் முடிச்சுக்கன்னு' எத்தனையோ தடவை சொன்னேன். சொன்னதை உடனே கேட்டால் தானே? நமக்கும் உடனுக்குடனே கவனிச்சுப் பார்க்க, ஒரு பெண் ஒரு பேத்தியோ? ''இவ வரதுக்குள்ளே அந்த ஆசாமி எழுந்து வேற இடம் போயிட்டான்'' என்று வருத்தப்பட்டது அம்மா.

வீட்டுக்கார அம்மாவும் ஐயாவும் ஒரு பெரிய பித்தளைத் தவலையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து கட்டிலருகே வைத்தார்கள். தவலை நிறையக் கொதிக்கும் வென்னீர்!


''கொதிக்கிற தண்ணியை விட்டால் நாம செத்துப் போயிடுவோம்னு இவங்க ஏற்பாடு பண்றாங்க. யாரும் பயப்படாதீங்க. கட்டில் சட்டங்களின் இடுக்கில் நாம ஒளிஞ்சுக்கிட்டா, கொதிக்கிற எண்ணையை விட்டாக் கூட நம்மை அழிக்க முடியாது. வென்னீர் மட்டும் மேல படாம கவனமா இருந்துக்குங்க. வென்னீரின் சூடு இரண்டு நிமிஷத்துல போயிடும். அப்புறம் நம்ம ராஜ்ஜியம்தான்'' என்று எச்சரித்து தைரியம் கூறியது அப்பா மூட்டை.

மூட்டைப் பூச்சிகளெல்லாம் கட்டில் சட்டத்தின் இண்டு இடுக்குகளில் விரைந்து ஒளிந்து கொண்டன. இடுக்கியால் ஒரு சின்ன அடுக்கைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்காரரும் அவரது மனைவியும் வென்னீரை எடுத்து, கட்டில் சட்டங்களில் விட்டார்கள். விட்ட இடமெல்லாம் ஆவி பறந்தது!

அரை மணிக்குப் பிறகு வென்னீரின் சூடு தணிந்த பிறகு அப்பா மூட்டை அபாயம் நீங்கி விட்டதென்று குரல் கொடுக்க, ஒளிந்திருந்த மூட்டைப் பூச்சிக் குடும்பம் வெளியே வந்து மேய்ந்தது!

அந்த வீட்டு நாய் ஜிம்மி, காலியாகக் கிடந்த கட்டிலில் தாவிப் படுத்துக் கொண்டது. நாயின் உடலைப் பதம் பார்க்க எல்லா மூட்டைப் பூச்சிகளும் நெருங்கின.

''எல்லாம் கொஞ்சம் பொறுத்துக்குங்க. முதல் சலுகை சின்னப் பொண்ணுக்குத்தான். இரத்தம் கிடைச்சதும், குடிச்சு, தோலுரிக்க அது காத்துக்கிட்டிருக்கு. அதுவும், அதனை ஒத்தவங்களும் முதலில் கழுத்தில் ஏறிக் குடியுங்க. அப்புறமா மத்தவங்களெல்லாம்'' என்று வகைப்படுத்தியது தாத்தா மூட்டை.



சின்னப் பெண்ணும் அதனை ஒத்த வயதுடைய மூட்டைகளும் நாயின் கழுத்துப் பாகத்தை நெருங்கின. முகத்தில் மறைந்திருந்த உறிஞ்சு கருவிகளை நாயின் கழுத்தில் செலுத்திக் கடித்தன. உறிஞ்சு குழலில் இரத்தம் உறிஞ்சப்படுவதற்கு முன்பு, அதிலிருந்து சுரந்த நுரை (நொதி) இரத்தம் உறைவதைத் தடுத்தது. மூன்றே நிமிடங்களில் வயறு நிரம்பி விட்டது!

இதற்குள் கடி பொறுக்காது எழுந்து விட்ட ஜிம்மி, 'படபட' வென்று தலையை அசைத்தது. எழுந்து ஓடி



விட்டது!

காத்திருந்த அடுத்த அணியினர் ஏமாற்றத்தோடு ஒளிந்து கொண்டனர்.

''கவலையே வேண்டாம். உங்க எல்லாருக்குமே கண்டிப்பா உணவு கிடைக்கும். இது பழங்காலத்துக் கட்டில். எத்தனை வேலைப்பாடு பாருங்க! இதில் ஆசையா உட்கார யாராவது வராம போகமாட்டாங்க'' என்று நம்பிக்கையூட்டியது தாத்தா மூட்டை.

அதன் நம்பிக்கை வீண் போகவில்லை. இரண்டு குழந்தைகள் கட்டிலில் ஏறி விளையாட வந்து சேர்ந்தன. மூட்டைப் பூச்சிக் குடும்பத்திற்குக் கொண்டாட்டம்தான்.

புதிதாக முட்டையிலிருந்து வெளிவந்திருந்த குஞ்சு ஒன்று, முதல் முதலாக இரத்தம் சுவைக்கும் 'ஜோரில்' உடல் நீலநிறம் ஆகும் வரை முட்ட முட்டக் குடித்து விட்டு, நன்றாகவே கடித்து விட்டது. கடிபட்ட இடத்தைக் கையால் தேய்த்துக் கொண்டு குழந்தை அழுதது. கடிபட்ட இடம் தடித்து விட்டது.

குழந்தையின் அழுகையைக் கேட்டு ஓடி வந்து பார்த்த தாய், ''மூட்டைப் பூச்சிக் கடி போல இருக்கே!'' என்றாள். பின்னாலேயே வந்த வீட்டுக்காரம்மா, 'ஆமாம். கட்டில் நிறைய மூட்டைப் பூச்சி. என்ன பண்ணினாலும் ஒழிய மாட்டேங்குது. கொதிக்கக் கொதிக்க வெந்நீர் விட்டா எல்லாம் வெந்து போயிடும்னு யாரோ சொன்னாங்க. அதான் செய்தேன். வெந்நீர் விட்டு முக்கால் மணி கூட ஆகலே. இப்படிக் கடிக்குதே! அப்ப எதுவுமே சாகலேன்னு ஆச்சு'' என்று அலுத்துக் கொண்டாள்.

''இப்படியெல்லாம் பண்ணினால் மூட்டைப்பூச்சி போகாது. இந்தக் கட்டிலை அப்படியே ஒரு அறையில் போட்டு மூடி வையுங்க. ஆறு மாதம்

வரை யாருமே அந்த அறைக்குள் போகக் கூடாது. மூட்டைப் பூச்சிங்க இரத்தம் கிடைக்காம பட்டினியால் துடிதுடித்து சாகும்'' என்று யோசனை கூறினாள் குழந்தையின் தாய்.

மொட்டை மாடியில் கண்டா முண்டா சாமான்களைப் போட்டு வைக்க ஒரு பெரிய அறை இருந்தது. அதில் கட்டிலைக் கொண்டு போய்ப் போட்டார்கள். யாரும் போய் விடாமல் இருக்கப் பூட்டி வைத்தார்கள்.

''மட சாம்பிராணிகள். ஆறு மாதம் வரை என்ன, நம்ம இனம் ஒரு வருஷம் வரை கூட உணவு இல்லாமல் வாழும் வல்லமை படைத்தது'' என்று பீற்றிக் கொண்டது தாத்தா மூட்டை.

நடுவில் யாரோ ஒருவர் கட்டிலை விலை பேச வந்தார். கட்டிலுக்கு அருகே வந்ததுமே ''ஐயையோ, மூட்டைப்பூச்சி வாடை வீசுது! சும்மா தந்தால் கூட இந்தக் கட்டில் வேண்டாம்!'' என்று ஓடி விட்டார்!

தீபாவளி வந்தது. குழந்தைகள் தாத்தா பாட்டிக்குத் தெரியாது மத்தாப்பு விட அந்த அறையைத் தேர்ந்தெடுத்தனர். எரிந்த மத்தாப்புக் குச்சிகளைப் போட ஒரு டப்பாவை எடுத்து வந்தனர். அது பூச்சிக் கொல்லி மருந்து டி.டி.டி. அடங்கிய டப்பா. அதில் இன்னும் கொஞ்சம் மருந்துப் பொடி இருந்தது. கதவை உட்பக்கம் மூடிக் கொண்டு குழந்தைகள் மத்தாப்புக் கொளுத்தினர். கொளுத்திய குச்சிகளையும், கம்பிகளையும் அந்த டப்பாவில் போட்டு விட்டு கதவை மூடிக் கொண்டு சென்றனர். கம்பி மத்தாப்பில் இருந்த அணையாத நெருப்பு மெதுவாகப் புகைந்தது. குச்சி மத்தாப்பின் குச்சிகள் அதற்கு உதவின. டி.டி.டி. மருந்தைப் புகைய வைக்க அது போதுமானதாக இருந்தது!

அறையைச் சூழ்ந்து கொண்ட புகை மூட்டம் கட்டிலில் இருந்த இண்டு இடுக்குளிலும் பரவி நிறைந்து மூட்டைப் பூச்சிகளைத் திணறவைத்து அவைகளுக்கு முடிவு கட்டின.

ஆறு மாதங்களுக்குப் பிறகு, கட்டிலில் மூட்டைப் பூச்சிகளே இல்லாததைக் கண்ட வீட்டுக்கார அம்மா, ''பட்டினி போட்டு மூட்டைப் பூச்சிகளைச் சாகடித்தோம்!'' என்று பெருமையோடு கூறிக் கொண்டாள்!

அறிவியல் உண்மைகள்!

★ மூட்டைப் பூச்சிகளுக்கு அருவருப்பான நாற்றம் உண்டு. இதை மூட்டைப் பூச்சி உள்ள அறைக்குள் நுழைந்ததுமே உணரலாம். இதுவே இதை மற்ற பெரிய பூச்சிகளிடமிருந்து விரட்டுகிறது. கரப்பும், செவ்வெறும்பும் இதற்குப் பகை. இவை மூட்டைப் பூச்சிகளின் அருவருப்பான நாற்றத்தையும் தாங்கிக் கொண்டு இரையாக்கிக் கொள்ளும்!

★ மூட்டைப் பூச்சிகளின் உணவு இரத்தம் மட்டுமே! மனிதர்களைப் போலவே இவை நாய், பூனை, மாட்டின் இரத்தத்தையும் கூடக் குடித்து வாழும்!

★ ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை கூட இவை உணவின்றி உயிர் வாழும்!

★ இவைகளுக்கு சிறிய சிறகுகள் உண்டு. ஆனால் அவை பறப்பதற்கு அல்ல!


★ குஞ்சுகள் முழு அளவில் பெரிதாக ஐந்து முறை தோலுரிக்கும். ஒவ்வொரு முறை தோலுரிக்கும் போதும் இவைகளுக்கு இரத்த உணவு தேவை.

★ நச்சுப் புகை போட்டு மட்டுமே இவைகளை அழிக்க முடியும்.

★ வெள்ளை அடிக்கும் போது ஃபினாயிலைச் சேர்த்து அடித்தால் இவைகளைக் கட்டுப்படுத்தலாம்.

★ அழுக்கு, வியர்வை, இண்டு, இடுக்கு இவைதான் இவற்றின் பெருக்கத்திற்கு உதவுபவை.






★ ஜி. வாசுதேவன்

நவராத்திரி பெண்கள் - சிறுமிகளுக்கான பண்டிகை என்பது உண்மையானாலும், அதில் சிறுவர்களுக்கும் பங்கு உண்டு - எவ்வளவோ வகைகளில். சில சிறுவர்களின் அனுபவங்கள்:



★ ஜே. கார்த்திக்



★ ஆர். விஷ்ணு வரதன்

பாடினால்தான் சுண்டல்!

ஜே. கார்த்திக் : எங்க வீட்ல நவராத்திரி என்றாலே கொண்டாட்டம் மாதிரித்தான் இருக்கும். ஏன்னா, எங்கப்பா விதம் விதமா டிராயிங், பெயின்டிங் எல்லாம் பண்ணி புதுசு புதுசா மாட்டுவாங்க. அதனால, நவ ராத்திரின்னா கேக்கவே வேண்டாம். பொம் மைங்களை விட அலங்காரம், சின்னச் சின்ன கை வேலைப்பாடுகள்தான் ஏராளமா இருக்கும். நானும் அம்மாவுக்கு உதவு வேன். என் ஐடியாவுக்கும் அம்மா உருவம் குடுப்பாங்க. கொலு பார்க்க வர்றவங்க கிட்ட 'இவனோட ஐடியா இது' அப்ப டின்னு சொல்லி அதையெல்லாம் காட்டி சந்தோஷப்படுவாங்க. ரொம்பப் பெரு மையா இருக்கும்.

ஆர். விஷ்ணு வரதன் : ஒரு தரம் நவராத்திரி கொலு வச்சோம். எங்களுக்குத் தெரிஞ்சவங்களைக் கூப்டோம். ரொம்ப ரொம்ப தூரத்லிருந்து குடும்பத்தோட கார்ல வந்தாங்க. படிப்படியா பொம்மைங்களை அடுக்கி வெச்சிருந்ததைப் பார்த்ததும் அவங்களுக்கு ரொம்ப பிரமிப்பு. 'அட தமிழ் பண்டிகையெல்லாமே ரொம்ப அழகா இருக்கே'ன்னு பாராட்டினாங்க. கொலு வுக்கு முன்னால உட்கார்ந்துக்கிட்டு அக்கா பாடினது அவங்களுக்கு இன்னும் சந்தோ ஷமா இருந்தது. 'ஓ! கண்ணு குளிர பொம்மை காட்சி; காது குளிர கர்நாடக சங்கீதம்' அப்படீன்னு சொல்லி ரொம்பப் பாராட்டினாங்க. 'முன்னூறு, நானூறு கிலோ மீட்டர் தூரத்லேருந்து வந்தது கூட அலுப்பா தெரிலேன்னாங்க. எந்த ஊர்ல நாங்க கொலு வெச்சோம்னு கேட்கறீங் களா? கலிபோர்னியால! அமெரிக்காவில் இருக்கே, அதுவேதான்! நாங்க அங்கே தானே குடியிருக்கோம்! லீவுக்கு மெட்ராஸ் வந்திருந்தப்ப கோகுலம் ஃப்ரன்ட்ஸ்கிட்ட இந்த விஷயத்தைச் சொல்ல சான்ஸ் கெடச்சது!

ஜி. வாசுதேவன் : நவராத்திரின்னாலே ஒரே ஜாலிதான். இப்ப என்னவோ நிறைய பேர் வீட்ல கொலு வைக்கறதில்லே. ரெண்டு, மூனு வருஷத்துக்கு முன்னால அக்கம் பக்கத்து வீட்டிலெல்லாம் எங்க வீடு மாதிரியே பொம்மை கொலு வெச்சு அமர்க் களப்படுத்துவாங்க. ஒவ்வொரு வீட்லயும் விதவிதமா சுண்டல்! சாயங் காலங்கள்ள, அதுக்காகவே நானும் என் ஃப்ரண்ட்ஸும் போவோம். எல்லாருமே தெரிஞ்சவாங்கறத னால உடனே சுண்டல் குடுத்து அனுப்பிடு வாங்க. ஒரு வீட்ல, 'பாட்டு பாடினாத்தான் சுண்டல்' அப்டீன்னுட்டாங்க. உடனே ஒரு சினிமா பாட்டைப் பாட ஆரம்பிச்சேன். 'போறும் போறும்' அப்படீன்னு அவங்க காதைப் பொத்திக்கிட்டாங்க! கூடுதலா கவே ரெண்டு பாக்கெட் சுண்டல் கிடைச் சது!

பேட்டி, புகைப்படங்கள்:

பிரபுசங்கர்.



டாக்டர். கு. கணேசன்

* **ஆ. அருண் ராபட், லால்குடி.**

யானைக்கால் வியாதி எதனால் வருகிறது? எப்படி வருகிறது? இது காலில் வருவதற்குக் காரணம் என்ன? இது தொத்து வியாதியா? இந்நோயைத் தவிர்க்க வழி என்ன? சொல்லுங்கள், டாக்டர்!

'விச்செரிரியா பேங்கிராஃப்டை' (Wuchereria Bancrofti) எனும் புழுவினக் கிருமிகளின் தாக்குதலால் யானைக்கால் வியாதி வருகிறது. 'க்யூலக்ஸ் ஃபெட்டிகன்ஸ்' (Culex Fatigans) எனும் கொசுக்கள் நம்மைக் கடிக்கும் போது மேற் சொன்ன யானைக்கால் வியாதிக் கிருமிகள் நம் இரத்தத்தில் கலந்து, நிணநீர்ப் பாதையைப் பாதிக்கிறது. பெரும்பாலும் காலில் உள்ள நிணநீர்ப் பாதையே அதிகமாகப் புண்ணாகிப் பழுதடைந்து அடைத்துக் கொள்கிறது. இதனால் நிணநீர் ஓட்டத்தில் தடையுண்டாகி, பாதிக்கப்பட்ட கால் வீங்குகிறது. வீக்கம் அதிகமாக அதிகமாக மேல் தோலில் விரிசலும், சுருக்கமும், முரட்டுத் தன்மையும் உண்டாகின்றன. இத்தோற்றமும் வீக்கமும் யானைக்காலை ஒத்திருப்பதால் இந்நோய்க்கு 'யானைக் கால் வியாதி' (Elephantiasis) எனப் பெயர் வந்தது. என்றாலும் நோய் முற்றிய நிலையில் இது வயிறு, மார்பு, கைகள் போன்ற பாகங்களையும் பாதிக்கக் கூடியதே! யானைக் கால் வியாதி தொற்று வியாதிதான். சந்தேகமில்லை! இதனைத் தவிர்க்க கொசுக்கடியிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்! அதற்கு கொசு விரட்டி, கொசுவலை போன்றவற்றை உபயோகிக்கலாம்; வீட்டைச் சுற்றி 'மாலத்தியான்' எனும் மருந்தைத் தெளித்து கொசுக்களை ஒழிக்கலாம்!

* **பி.எஸ். ஹரிஹரன், பவானி.**

மனிதர்களுக்குப் பல் எத்தனை வயது வரை வளரும்?

இருபத்தி எட்டு வயது வரை பல் வளரும். அதற்குப் பிறகு பற்களின் வளர்ச்சி நின்று விடும்.

* **ப.பா. ஜெயக்குமார், ச. செந்தில்குமார், இராயப்பன்பட்டி.**

'மூலம்' என்ற நோய் சிறுவர்களைப் பாதிக்குமா? இதற்கு அல்லோபதியில் மருந்து உள்ளதா?

'மூலம்' (Piles) சிறுவர்களுக்கு வருவதில்லை! பெரியவர்களுக்கு மட்டுமே மூலம் வரும். இதற்கு அல்லோபதி முறையில் சிறந்த சிகிச்சை முறைகள் உள்ளன. தற்காலிகத் தீர்வுக்கு மாத்திரை, மருந்துகள் தரப்படுகின்றன. நிரந்தரத் தீர்வுக்கு 'அறுவை சிகிச்சை'யை மேற்கொள்கிறார்கள்.

* **வா.சு. குமரேசன், ஸ்ரீவில்லிபுத்தூர்.**

டாக்டர்கள் தரும் மருந்துச் சீட்டில் ''℞'' என்ற குறியீடு உள்ளதே... அதன் விளக்கம் என்ன, டாக்டர்?



''℞'' எனும் குறியீடு 'Recipe' என்ற லத்தீன் வார்த்தையைக் குறிப்பது. அதன் அர்த்தம் 'எடுத்துக் கொள்' (Take) என்பது. அதாவது 'கீழ்க்காணும் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்; சாப்பிட வேண்டும்' என்ற அர்த்தத்தில் மருத்துவர்கள் ''℞'' குறியீட்டைப் போடுகிறார்கள்.



* எஸ். மனோகரன், சங்கமங்கலம்.


புத்தகங்களை படிப்பதற்கும், கண்கள் கெடு வதற்கும் தொடர்புண்டு என்கிறார் களே, டாக்டர்! இதை எவ்வாறு தவிர்ப்பது?

சொல்கிறேன், கேள். குறைந்த வெளிச் சத்தில் புத்தகங்களைப் படிக்கக் கூடாது. நல்ல வெளிச்சமுள்ள இடத்தில் அமர்ந்தே படிக்க வேண்டும். படிக்கும் போது குனியவோ, வளையவோ, பக்க வாட்டில் சாயவோ கூடாது. நிமிர்ந்து உட்கார்ந்து படிக்க வேண்டும். கண்களுக்கும் படிக்கும் புத்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம் 30 செ.மீ. தான் இருக்க வேண்டும். புத்தகத்தை சுமார் 45 0 கோணத்தில் வைத்துக் கொள்ள லாம்! படுக்கையில் படுத்துக் கொண்டே படிப்பதும், ஓடும் வாகனங் களில் பயணம் செய்யும் போது படிப்பதும் கண்களைப் பாதிக்கும்! இரவு நேரங்களில் படிக்கும் போது, விளக்கின் வெளிச்சம் புத்தகத்தில் விழ வேண்டுமேயன்றி, கண்களில் படக் கூடாது. 60 வாட்ஸ் மின் விளக்கு படிப்ப தற்குத் தேவையான வெளிச்சத்தைக் கொடுக் கும். அந்த மின் விளக்கு படிக்கும் புத்த கத்திலிருந்து சுமார் 4 அடி மேலே, பின் புறத்தில், இடப்பக்கமாக அமைந்திருந்தால் கண்களைப் பாதிக்காது! 40 நிமிடங்கள் தொடர்ந்து படித்தால் அடுத்த 10 நிமிடங் களுக்கு ஓய்வு அவசியம்!

* மகேஸ்வரி பிரசாந்த், காங்கயம்.

காதில் சீழ் வடிவதேன், டாக்டர்?

கோகுலம் ஆகஸ்ட் '89 இதழில் காதில் சீழ்வடிவதைப் பற்றி, தனிக்கட்டுரை யொன்று வெளி வந்ததே! படிக்கவில் லையா? பரவாயில்லை. நம் காதில் வெளிக் காது, நடுக்காது, உள்காது என மூன்று பகுதிகள் உள்ளன. இதில் நடுக்காதில் பாக்டீரியா, வைரஸ், காளான் போன்ற கிருமிகள் தாக்கும் போது அதன் சிலேட் டுமப் படலம் அரித்துப் புண்ணாகிறது. இத னால் காதில் சீழ் வடிகிறது. இது தவிர, தொண்டைப் புண், தொண்டைச்சதை அழற்சி, தொண்டை அடைப்பான், தட்டம்மை, சின்னம்மை, கக்குவான் இரு மல், காசநோய், சொத்தைப் பல் போன்ற நோய்கள் நம்மைத் தாக்கும் போது இந்நோய்க் கிரிமிகள் தொண்டையையும், நடுக்காதையும் இணைக்கக்கூடிய 'ஈஸ்டாக் கியன் குழாய்' மூலம் நடுக்காதை அடைந்து அதைப் புண்ணாக்கி சீழ் வடியச் செய்கிறது!



* எஸ். கணேஷ்குமார், சேலம் - 1.

இதயம் ஓய்வெடுக்குமா, டாக்டர்?

ஓய்வெடுக்கும், கணேஷ்குமார்! அது எப்போது தெரியுமா? இதயம் நிமிடத் திற்கு 72 முறை சுருங்கி விரிவதை நீ அறிந் திருப்பாயே....! அப்படி சுருங்கி விரியும் போது ஒவ்வொரு முறை இதயம் சுருங்கி விரிந்ததும் சுமார் 0.4 வினாடி ஓய்வெடுத்துக் கொள்ளும்!

* ஜெ. பிருந்தா, விழுப்புரம்.

காதுகளில் எண்ணெய் விடுவது நல்லதா, டாக்டர்?

நல்லதில்லை, சகோதரி! அதனால் எவ் வித பயனும் இல்லை! மாறாக, காதில் எண் ணெய் விடுவதால் சில தேவையற்ற தொந்தரவுகள் வருகின்றன. காய்ச்சிய எண் ணெய்யைக் காதில் ஊற்றினால் செவிப்பறை பழுதடைந்து காது கேட்காமல் போய்விடும்; நடுக்காதில் புண்ணாகி சீழ் வடியும்! தேவையா இது? இனிமேலாவது காதில் எண்ணெய் விடுவதைத் தவிர்க்கலா மல்லவா?





ஏமாளி ஆசிரியரே!

★ கண்ணனைப் பாடினால் தண்டனை கதை படிக்கப் படிக்க மிகவும் அற்புதமாக இருந்தது.
தடுத்தாள் கொண்டபுரம், பி. ஆத்மநாதன்.

★ அரணை கடித்தால் மரணம் என்று தவறான எண்ணம் கொண்டிருந்த நான், அரணை பற்றிய அறிவியல் உண்மைகளைப் படித்த பின்புதான் தெளிவடைந்தேன்!
கோவை - 18, கே. ரவி.

★ யாருக்கும் தரமாட்டேன் கதை மிக மிக அருமை.
குத்தாலம், ஜி. வெங்கடேசன்.

★ 'சுகன்யா' படக்கதை சூப்பர்! 'தவறுக்கு பிராயச்சித்தம்' என்ற நீதி அதில் இருந்தது.
சென்னை - 15, ஜி.கே. வெண்ணிலா.

★ டாக்டரின் பதில்கள் டக்கர்? கண்ணைப் பற்றி விளக்கியது அருமை.
சிறுகடம்பூர் (செஞ்சி), தா. ஷகிலா.

★ எழுத்துலகில் சரித்திரம் படைத்த ''சரித்திரக் கதை மன்னர்'' அமரர் கல்கி அவர்களை பற்றிய ''எழுத்தை ஆண்டவர்'' கவிதை கோகுலத்திற்குப் பெருமை சேர்த்தது.
பொகலூர், அ. இராஜப்பன்.

★ செப்டம்பர் இதழ் சிரிப்பு ஸ்பெஷலா?!! மொத்தம் 27 சிரிப்புகள் இருந்தன. ஒவ்வொன்றும் சிரிக்கும்படி அருமையாக இருந்தது.
ஆற்காடு, எஸ். அரவிந்தன்.

★ மாறுவேடப் போட்டியில் பங்கு கொண்ட சிறுவர்-சிறுமிகளின் கருத்துக்கள் ஒவ்வொன்றும், படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதமாய் இனித்தது!
சிதம்பரம், என்.ஆர். பாஸ்கரன்.

★ குஷ்வந்த் சிங்கின் 'பேரனின் பில்' சிறுகதை எங்களை வயிறு நோகச் சிரிக்கச் செய்தது! சேரநம்பியின் கேள்வி பதில்களைச் சேர்த்து பைண்டு செய்து வைத்துக் கொள்ளலாம் போலிருக்கிறது.
செல்லபிராட்டி, இரா. ரவி.

★ குருவிகளை விட்டு விடு!'' அசத்தலான அற்புதமான - சிறுகதை!
மொரப்பூர், அ. நவ்சாத்.

★ தேசப்பற்றும், நன்றி மறவா குணமும் கொண்ட வ.உ.சியைப் பற்றிய தகவல்கள், இளைய தலைமுறையினர்க்கு, ஒரு அரிய விருந்தாகும்!!
கும்பகோணம், புலவர். எஸ்.கே. மூர்த்தி.

★ ஏமாளி ஆசிரியரே, செப்டம்பர் இதழில் வெளியான எம்.ஐ.ரைஸ் எழுதிய சிரிப்பு ஏற்கனவே பாலமித்ரா 1985 ஜனவரி இதழில் வெளிவந்துள்ளது!
குடந்தை, ம. கணேசன்.

ஆசிரியரை ஏமாற்றலாம்! ஆனால், வாசகர்களை ஏமாற்ற முடியாதே! வாழ்க கோகுலம் வாசகர்கள்! - ஆசிரியர்.

★ 'பொன்மொழிகள் இங்கே - சொன்னவர் எங்கே?' போட்டிக்கான விடைகளில் 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!' என்பது பாரதியார் கூறியதாக வெளியிட்டுள்ளீர்கள். இது டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியது ஆயிற்றே?
கோட்டுச்சேரி, ஜெ. இராஜவேணி.

இல்லை. இது பாரதி பாடலே 'வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்' என்ற பாடலின் கடைசிப் பகுதியில் வருகிறது. இந்த வரிகளுக்கு உயிரூட்டி உலவவிட்ட பெருமைக்கு உரியவர் டாக்டர் கலைஞர் அவர்களே! - ஆசிரியர்.

அட்டைப்படம்
படம் முடிஞ்சதும் பாருங்க!
பரிசை உடனே தாருங்க!
அட்டையில் : ஆர்த்தி சீனிவாசன், ஆர். சந்திரசேகர்.
வண்ணப்படம் : உத்ரா.

நடந்த கதை...



அன்புள்ள அக்கா...!

ஹரிசிங்

காட்டில் சுள்ளி பொறுக்கிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தாள் நிர்மல். வழியில் சாலையைக் கடக்கும் போதே ஒரு நீல வண்ண பஸ் அவளை முந்திக் கொண்டு விரைந்தது. அதில் பக்கத்து நகரில் படிக்கும் சீருடையணிந்த மாணவிகள்.

ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்து வந்த மாணவிகளில் சிலர் நிர்மலைப் பார்த்ததும் கையசைத்து விரைந்தனர். பதிலுக்கு நிர்மலும் மகிழ்ச்சியோடு கையசைத்து ''சீரியோ!'' என்றாள். அந்த வார்த்தைக்கு என்ன பொருள் என்பது அவளுக்குத் தெரியாது. ஆனால், ஏதோ மகிழ்ச்சியூட்டும் சொல் என்பது மட்டும் தெரியும். சுற்றுலா வந்த சிலரிடமிருந்து கற்றது தான் அந்தச் ''சீரியோ!''

நமக்குத்தான் படிக்க முடியவில்லை. நமது தங்கை பிரபாவையாவது நன்கு படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை நிர்மலுக்கு இருந்தது. பிரபாவுக்கு மூன்று வயது.

மான்கோடி, சாத்பூர மலைத் தொடரில் அமைந்திருந்த அழகான கிராமம். நிர்மல், பிரபாவின் பெற்றோர் அதில் தான் வசித்து வந்தனர். தந்தை கேசவ் நல்ல உழைப்பாளி. அவரைப் போல் அற்புதமாக வீடு கட்டும் தொழிலாளி அந்தப் பகுதியில் இல்லை. அதனால் அவருக்கு வேலைக்கு மேல் வேலை வந்து கொண்டே இருந்தது. நல்ல வரும்படி. ஆனால், வருமானம் அத்தனையையும் கேசவ் குடித்தே தீர்த்து விடுவார்! வீட்டில் வறுமைதான்.

இரண்டு குழந்தைகளையும்பசி இல்லாது பார்த்துக் கொண்ட பெருமை அம்மா கங்கம்மாவையே சாரும். கணவன் ஏராளமாகச் சம்பாதித்தும், பொறுப்பு இல்லாது இருந்ததால் கங்கம்மா மலையடிவாரத்தில் கல்லுடைத்துக் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். சோற்றுக்கே பிரச்னை இருந்ததால், நிர்மலின் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது. தங்கை பிரபாவைக் கவனித்துக் கொள்ளவும், சுள்ளி பொறுக்கி வரவுமே அவளுக்குச் சரியாக இருந்தது.

ஏழு வயது நிர்மலுக்கு தங்கை பிரபாவின் மேல் கொள்ளை ஆசை. தனக்குக் கிடைக்காத படிப்பு தங்கைக்காவது கிடைக்க வேண்டும். அதற்காகவாவது தன் அப்பா திருந்த வேண்டும் என்று அவள் சாமியை விடாது வேண்டிக் கொண்டாள்.

சுள்ளி பொறுக்கிக் கொண்டு திரும்பியவளுக்கு வீட்டில் ஒரு அதிசயம் காத்திருந்தது. அவர்கள் குடிசை வாசலில் நகரத்துப் பெரிய மனிதர்கள் இரண்டு மூன்று பேர், அவளுடைய தந்தையோடு பேசிக் கொண்டிருந்தனர். ஒரு ஓரமாக அவளுடைய தாய், மூன்று வயது பிரபாவை அணைத்தபடி நின்று கொண்டிருந்தாள். என்னவோ அம்மாவின் முகம் சரியில்லாமல் இருந்ததை

நிர்மல் கவனித்து விட்டாள்.

அவளைக் கண்டதும் பிரபா ஓடி வந்து அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். காட்டிலிருந்து தங்கைக் காக என்று பொறுக்கி வந்திருந்த நாவல் பழத்தைக் கொடுத்தாள் நிர்மல்.

''ஏம்மா எப்படியோ இருக்கே? இவங்களெல்லாம் யார்?''

''இல்லையேம்மா. சரியாத்தானே இருக்கேன்'' என்று கூறினாள் கங்கம் மாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. அம்மா எதையோ மறைப்பதை நிர்ம லால் உணர முடிந்தது.

இதற்குள் வந்திருந்த பெரிய மனி தர்களில் அகலக் குங்குமம் வைத்திருந்த ஒருவர் ''வாம்மா நிர்மல் இங்கே!'' என்று அன்பொழுக அழைத்தார். அவர் கையில் ஒரு பிஸ்கட் பொட்டலம். அதை அவர் நிர்மலிடம் நீட்டினார்.

நிர்மல் அதை வாங்கவில்லை. அந்த மனிதர் நல்லவர் அல்ல என்று அவ ளுடைய உள்ளுணர்வு கூறியது.

''பிஸ்கட்டை வாங்கிக்கம்மா'' என்று அன்பொழுகக் கூறிய குங்குமம்,



''நிர்மல் உன் உடம்பில் ஏதாவது காயம் இருக்கா?'' என்று கேட்டார்.

''எதுக்குக் கேட்கறீங்க? நீங்க என்ன வைத்தியரா?''

''ஆமாம்மா. மூலிகை வைத்தியம் எனக்குத் தெரியும்.''

''துவையல் அரைக்கும் போது வலது கண்டு விரல் நசுங்கி, நகம் விழுந்து விட்டது. இதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பாருங்கள்'' என்று கையை நீட்டி, விரலைக் காட்டி னாள் நிர்மல்.



குங்குமம் சலிப்போடு திரும்பிக் கொண்டார். அவர் முகத்தில் ஏமாற்றம் நிறைந்ததை புத்திசாலியான நிர்மல் கவனிக்கத் தவறவில்லை.

''இதுக்கு ஏதாவது மருந்து இருக்கா?''

''போய் அனுப்பறேம்மா உங்க அப்பாவிடம்.''

பிஸ்கட் பொட்டலத்தைத் தங்கை யிடம் நீட்டினாள் நிர்மல். ''எனக்கும் தந்திருக்காங்க அக்கா'' என்று கையைக் காட்டினாள் பிரபா. அவளுக்குக் கொடுத்தது போலவே வட்ட நெளி பிஸ்கட்.

பெரிய மனிதர்களுடன் தானும் புறப்பட்டுச் சென்றார் கேசவ். என்ன காரணமோ தெரியவில்லை, கங்கம்மா அடிக்கடி கண்ணீர் சிந்திக் கொண்டி ருந்தாள். பிரபாவை அடிக்கடி அணைத் துக் கொண்டு முத்தம் தந்தாள். ''நீயும் தங்கைக்கு முத்தம் கொடு'' என்று நிர்மலையும் தரச் சொன்னாள்.

''ஏம்மா?'' என்று கேட்டாள் நிர்மல்.

''நாளைக்கு நம்ம பிரபாவை நகரத்தில் இருக்கிற 'ஹாஸ்டல்ல கொண்டு போய்ப் படிக்க சேர்க்கப் போறோம். செலவெல்லாத்தையும் இப்ப வந்த குங்குமப் பொட்டுக்காரர் தான் ஏத்துக்கிறார்.''

''இதுக்கு ஏம்மா அழறே! எத்தனை சந்தோஷமான செய்தி!'' என்று துள்ளிக் குதித்த நிர்மல், பிரபாவைக் கட்டிக் கொண்டு முத்தமாரி பொழிந்தாள்.

''என் தங்கை நல்லாப் படிச்சு பெரிய அதிகாரியா வருவா'' என்று கூத்தாடினாள்.

''நாம்ப அடிக்கடி போய் பிரபா வைப் பார்க்க முடியாதும்மா. அதுதான் அழுகை வரது'' என்றாள் கங்கம்மா.

''இதுக்குப் போய் அழலாமாம்மா? பிரபாவுக்குக் கிடைத்திருக்கும் அதிர்ஷ்டத்துக்காக நாம் எதையும் தாங்கிக் கொள்ளலாம் அம்மா. குடிச் சிட்டு வந்து அப்பா அடிப்பதை நாம் தாங்கிக் கொள்கிறோமே... அது மாதிரி தானே இதுவும்?'' என்று தாயைத் தேற்றினாள் நிர்மல்.

அடுத்த நாள், பிரபாவை அழைத்

துக் கொண்டு கேசவும், கங்கம்மாவும் கிளம்பினர்.

''நாளைக்குள் திரும்பி வந்து விடுவோம். கவனமாக இரு'' என்று எச்சரித்தனர் பெற்றோர்.

''அக்கா, நான் பெரிய படிப்புப் படிச்சுட்டு வந்து உனக்குக் கற்றுத் தரேன்'' என்று விடைபெற்றாள் பிரபா.

நிர்மல் சுள்ளி பொறுக்கி வரக் கிளம்பினாள். குங்குமம் கொடுத்திருந்த பிஸ்கட்டில் இரண்டு மீதி இருந்தது. எடுத்துக் கொண்டாள். தன்னுடன் வந்த சிநேகிதிகளுக்கு அதைக் கொடுத்தாள்.

பிஸ்கட்டைப் பார்த்த கோதாவரி, ''நிர்மல், இதை உனக்குக் கொடுத்தவர், ஒரு குங்குமப் பொட்டுக்காரா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்!'' என்று கூறி வியந்தாள் நிர்மல்.

''அவன் போன வாரம் எங்க வீட்டுக்கும் வந்திருந்தான். பிஸ்கட் தந்தான். எங்க அம்மா அப்பா அடிக்காத குறையா அவனை விரட்டியடிச்சுட்டாங்க.''

''ஏன் கோதாவரி?''

''அவன் பத்ரகாளி கோவில் பூசாரி. லால்பூரில் ஐம்பது கோடி செலவில் ஒரு அணை கட்டறாங்க. அது நல்லபடியா நடந்து முடிய பத்ரகாளிக்கு ஒரு குழந்தையைப் பலி கொடுக்கப் போறாங்களாம். அதுக்கு ஒரு குழந்தை வேணும். என்ன விலை வேண்டுமானாலும் தரேன்னு கேட்டான். எங்கம்மாவும் அப்பாவும் நல்லா திட்டி அனுப்பிட்டாங்க. ஆனால், பணத்தாசை பிடித்த எத்தனையோ குடிகார அப்பாக்கள் தங்கள் குழந்தைகளைக் கொண்டு வந்து காட்டினாங்க. பலியாகத் தரப்படும் குழந்தைக்கு உடம்பிலே எந்தக் காயமும் ஊனமும் இருக்கக் கூடாதாம்.''

நிர்மலுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவளுடைய குடிகாரத் தந்தை அவளுடைய அருமைத் தங்கை பிரபாவைக் காளிக்கு பலிகொடுக்க, எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்!

நிர்மல் அலறிய அலறலைக் கேட்டு எல்லாக் குழந்தைகளும் ஓடி வந்தன. விஷயத்தை அறிந்து பதறின.

இரவெல்லாம் கால்நடையாக நடந்து ஆகமதாபாது நகருக்கு வந்தனர். அங்கே கலெக்டரை நேரில் சந்தித்து முறையிட்டனர்.

''பிரபாவை எந்தக் கோவிலில் பலியிடப் போகிறார்கள் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று குழம்பினார் கலெக்டர்.

''லால்பூர் அணை திட்ட துவக்க விழாவைத் தள்ளி வையுங்கள். துவக்க விழாவன்றுதான் பலி கொடுக்க ஏற்பாடு. உடனே பலியிடுவது தடுக்கப்படும். பிறகு கண்டுபிடிக்க நேரம் இருக்கும்'' என்றாள் நிர்மல்.

அந்த யோசனை பயனளித்தது. பிரபா மட்டுமல்ல. அவளைப் போலவே இன்னொரு கிராமத்திலிருந்து பலிகொடுக்க ரூ. 3500/- க்கு வாங்கி வரப்பட்ட ஆண் குழந்தை ஒன்றின் உயிரும் காப்பாற்றப்பட்டது!

''மாடிப்படியிலே கொலு வச்சிட்டாங்க! அதான் சார்!''





''உடைஞ்ச போன பொம்மைகளையெல்லாம் குவியலா போட்டு என்னடா எழுதி வச்சிருக்கே?''

''ஈராக் போருக்குப் பின் அமைதி.''

உலகப் பரிசுக்கு உயிலெழுதி வைத்தவர்!

ஆல்ஃப்ரெட் பர்னஹார்டு பெரும் பணக்காரர். தன்னுடைய வருமானம் பற்றி அவருக்கே கணக்குத் தெரியாது!

ஒரு சமயம் அவருடைய சமையற்காரப் பெண்ணுக்குத் திருமணம். பத்திரிகையைக் கொண்டு வந்து வைத்தாள். உடனே ஆல்ஃப்ரெட் கேட்டார். ''திருமணமா? மகிழ்ச்சி! உனக்கு நான் என்ன அன்பளிப்புத் தரவேண்டும்? நீயே சொல்....'' என்றார்.

அதற்கு அவள், ''ஐயா! உங்களுடைய ஒரு நாள் வருமானத்தைக் கொடுங்கள் போதும்....'' என்றாள்.

அதுவரை அவர் அதைக் கணக்கிட்டுப் பார்த்ததே இல்லை. சிரமப்பட்டுக் கணக்கிட்டுப் பார்த்தார். பிறகு அதை அப்படியே அவளுக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்துவிட்டார். அது எவ்வளவு தெரியுமா?

நாற்பதாயிரம் ஃப்ராங்க்கள்!

சம்பாதிப்பதில் மட்டுமல்ல, பிறருக்குக் கொடுப்பதிலும் அவர் தலைசிறந்து விளங்கினார். தாராள மனமும் இரக்க குணமும் கொண்ட அவர் வாடுவோர் துயர் கண்டு வாடுவார். தினசரி நூற்றுக் கணக்கானோர் நேரில் வந்து நிதி உதவி பெற்றுச் செல்வார்கள். தபாலில் மட்டுமே தினசரி இருபத்தைந்துக்கும் அதிகமானோர் உதவி கேட்டுக் கடிதம் எழுதுவார்கள். தினசரி அவர் வழங்கிய நன்கொடையின் மதிப்பு 20 ஆயிரம் க்ரோன்கள். அதாவது, ஆண்டுக்கு எழுபது லட்சம் க்ரோன்கள்!

இத்தனை பெரிய செல்வந்தர்தானே தவிர, ஆல்ஃப்ரெட்டின் சொந்த வாழ்க்கை மிகவும் சோகம் நிறைந்தது.



கடைசி வரையில் திருமணம் ஆகாமல் தனி வாழ்க்கையே நடத்தினார். அவர் மணவாழ்க்கையை விரும்பினாலும், அவரை மணக்க எந்தப் பெண்ணும் முன் வரவில்லை!

அவருக்கு 18 வயது. பாரிசில் ஒரு அழகான பெண்ணைச் சந்தித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர்.

ஜானகி மணாளன்



''மெழுகு காய்கறி பொம்மைகள் எல்லாம் என்ன விலை?''

''தக்காளி மட்டும் பத்து ரூபா. மீதியெல்லாம் ஒரு ரூபாதான்!''

திருமணம் நிச்சயமாகும் நேரம். திடீரென்று அவள் இறந்து விட்டாள். ஆல்ஃப்ரெட் வாழ்க்கையில் இருள் சூழ்ந்தது.

முப்பத்து மூன்று வயது. மீண்டும் திருமண ஆசை. கவுண்டஸ் பந்த்தா கிங்ஸ்லி என்று ஒரு பெண். அவளைத் தனது செயலராக நியமித்துக் கொண்டார். மெல்ல மெல்ல அவளை விரும்பலானார். ஆனால், அதுவும் ஏமாற்றத்திலேயே முடிந்தது.

நாற்பத்து மூன்று வயதான போது ஆஸ்திரேலியா போனார். அங்கு ஒரு பெண்ணைச் சந்தித்தார். பெயர் ஸோஃபியா! அவளை விரும்பினார். அவளும் இவரிடம் அன்பாக இருந்தாள். ஆனால், அதுவும் ஏமாற்றம்தான்!

அவரது சொந்த வாழ்வில் இழப்புகள் தொடர்ந்தன. 1888 ல் அண்ணன் லுட்விக் இறந்தார். 1889 ல் தாயார். அடுத்து 1896, இன்னொரு சகோதரர் ராபர்ட்டும் இறந்துவிட்டார். அவருக்கு அடி மேல் அடி.நடைப்பிணம் ஆனார். தனிமை அவரை வாட்டியது. மனம் விரக்தியுற்றது. வேதனையில் துடித்தார். அதன் காரணமாக இடைவிடாத் தலைவலி. அத்துடன் இன்னும் பல உபாதைகள். பாரிசின் தலை சிறந்த மருத்துவர்களிடம் காட்டினார். முழு ஓய்வு கொள்ள வேண்டும் என்றனர். தனது அந்திம காலம் நெருங்கி விட்டதையும், உயில் ஒன்று எழுதி வைத்து விட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தார். அதை உடனே செயல் படுத்தினார்.

'அதை எங்கு பத்திரப்படுத்தி வைப்பது...?' சற்று நேரம் குழம்பினார். மனதில் பல்வேறு யோசனைகள். கடைசியில் ஒரு முடிவு. ஸ்வீடனில் ஒரு பாங்க். அதில் பத்திரப் படுத்தி வைத்து விட்டார்.

அந்த உயிலை எழுத வக்கீல் எவரிடமும் அவர் போகவில்லை. ஆனால், அதில் குறிப்பிட்டிருந்த விவரங்கள் பற்றி எவருடனாவது விவாதிக்க விரும்பினார். யாரைச் சந்திப்பது?

ஆல்ஃப்ரெட்டுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் மூன்று பேர். ஒருவர் சாலமன் என்பவர். மற்ற இருவரும் அவருடைய அண்ணன் மகன்கள். ஒருவர் பெயர் இமானுவல். இன்னொருவர் ஜய்ல்மர். இந்த மூவரையும் பார்க்க நிச்சயித்தார்.

ஆனால்,அவரால் உடனே கிளம்பிப் போக முடியவில்லை. காரணம் உடல் நலக் குறைவு. அப்போது அவர் இத்தாலியில் சான்ரிமோ நகரில் இருந்தார். தன் நிலையை குறித்து சாலமனுக்கு கடிதம் எழுதினார். நாள் 1896 டிசம்பர் 7.

''-நான் இக்கடிதத்தை மிகுந்த சிரமத்துடன் எழுதுகிறேன். என் உடல் நலம் மிகவும் சீர் கெட்டுவிட்டது. ஓரளவு சரியானதும் நம் இருவர் மனத்துக்கும் பிடித்தமான ஒரு விஷயம் பற்றிப் பேசுவோம்....''

இந்தக் கடிதம் மேஜை மீதே கிடந்தது. எழுதிய சில மணி நேரத்தில் திடீரென்று அவரது, மூளையில் பயங்கரமான ரத்த ஓட்ட அதிகரிப்பு. அவர் நிலை தடுமாறினார். அவரை அன்புடன் அணைத்து ஆறுதல் மொழி கூற, நெருக்கமான மனிதர் என்று எவரும் அப்போது அவர் அருகில் இல்லை. வேலையாள் மட்டுமே இருந்தான். அவன் ஓடி வந்து, வலுக்கட்டாயமாக அவரைப் படுக்க வைத்தான். எழுந்து உட்கார்ந்துவிடாமல் பார்த்துக் கொண்டான். மெல்ல மெல்ல அவருடைய நினைவாற்றல் குறையத் தொடங்கியது. கடைசியில் இளமைக் கால நினைவுகளின் உளறல்கள் மட்டுமே அவரிடம் எஞ்சியிருந்தன.

வேலைக்காரன் அவரது உளறல்களை உற்றுக் கேட்டான். 'தந்தி' என்ற ஒரு வார்த்தைதான் புரிந்தது. உடனே அவன் விழித்துக் கொண்டான். ஓடிப்

போய், இமானுவல், ஜைல்மர், சாலமன் மூவருக்கும் தந்தி கொடுத்தான்.

ஆனால், காலம் கடந்து விட்டது. அவர்கள் வருவதற்குள் 1896 டிசம்பர் 10 ஆம் நாள் அதிகாலை 2 மணிக்கு அவரது உயிர் பிரிந்து விட்டது.

அவரை ஸ்டாக் ஹோம் நகரின் வடக்குப் பகுதியில் அவரது முன்னோர்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் அடக்கம் செய்தனர். நாள் டிசம்பர் 29.

அவருடைய உயில் 1897 ஜனவரியில் வெளியிடப்பட்டது. உடனே ஒரு பரபரப்பு. அவர் அந்த உயிலை வக்கீலின் உதவி இன்றி எழுதியதால் சில விவாதங்கள் எழுந்தன. அத்துடன் உறவினரும் தங்களுக்கு அதிகப் பங்கு கிடைக்கவில்லையே என்று குறைப் பட்டுக் கொண்டனர்.

சர்ச்சையோடு சர்ச்சையாக ஸோஃபியாவும் ஒரு சிக்கலை ஏற்படுத்தினாள். முன்பு அவள் ஆல்ஃப்ரெட்டை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஓடியவள். இப்போது அவர் சொத்துக்கு உரிமை கொண்டாடத் திரும்பி வந்தாள்.

அதற்குள், ஆல்ஃப்ரெட்டின் உயில் படி அவர் பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவப்பட்டு விட்டது. அறக்கட்டளையும் தன் பணிகளை இடையூறு இன்றி நிறைவேற்றத் தொடங்கியது.

ஆல்ஃப்ரெட்டின் பெயரிலான அந்த அறக்கட்டளை தான் 'நோபில் ஃபவுண்டேஷன்' - 'நோபல் அறக்கட்டளை' என்பது. ஆல்ஃப்ரெட்டின் முழுப் பெயர் ஆல்ஃப்ரெட் பர்னஹார்டு நோபல் என்பது. அவர் இந்த அறக்கட்டளை மூலம் ஏற்படுத்தியதுதான் தற்போது ஆண்டுதோறும் வழங்கப் பட்டு வரும் உலகப் பரிசான 'நோபல் பரிசு' என்பது. இப்பரிசு முதன் முதலில் 1901 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அது முதல் ஆண்டுதோறும், இலக்கியம், பௌதீகம், ரசாயனம், மருத்துவம் மற்றும் உலக அமைதி ஆகியவற்றிற்குத் தனிச் சிறப்பு மிக்க பணியாற்றியவர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள இது, ஜாதி, மதம், இனம், மொழி மற்றும் நாடுகளின் எல்லை ஆகியவற்றைக் கடந்து தகுதி ஒன்றை மட்டுமே அடிப் படையாகக் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரையில் ஐந்து இந்தியர்கள் இந்த உயரிய விருதைப் பெற்றுள்ளனர். ஒருவர் ஹர்கோவிந்த் குர்ராணா. (1968 - மருத்துவம்). இன்னொருவர் எஸ். சந்திரசேகர் - (1983 - பௌதிகம்). மற்ற மூவரில் ஒருவர் அல்பேனியாவில் பிறந்து இந்தியப் பிரஜை ஆன அன்னை தெரசா (1979 - உலக அமைதி). நான்காமவர் ரவீந்திரநாத் தாகூர் (1913 - இலக்கியம்). முதன் முதல் இந்தியாவில் நோபல் பரிசு பெற்றவர் இவரே! ஐந்தாமவர் சி.வி. ராமன் (1930 - பௌதிகம்)

இத்தனை உயர்ந்தவரான ஆல்ஃப்ரெட் நோபில் பிறந்தது 1833 அக்டோபர் 21 ஆம் நாள். இறந்தது 1896 டிசம்பர் 10. எனவேதான், ஆண்டுதோறும் இந்த நோபல் பரிசுகளை அவரது பிறந்த தினம் வரும் அக்டோபர் சமயத்தில் அறிவித்துவிட்டு, அவர் இறந்த தினமாகிய டிசம்பர் 10 ஆம் நாள், கோலாகலமாக ஒரு விழாவில் வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

"ஒண்ணுமில்லை போ! போ!"

"கொலுவுக்கு அழைக்க வேஷம் போட்டிட்டு வந்திருக்கோம் மாமி!"





"கல்யாண செட் வேணுமா? கச்சேரி செட் வேணுமா? ராமாயண செட் வேணுமா?"

"இட்லி செட்; பூரி செட்!"



ஆலம் விழுது - டாக்டர் பூவண்ணன், பக். 88, ரூ. 12/- வானதி பதிப்பகம், சென்னை - 17.

குடும்ப நிர்வாகத்தில் குழந்தைகளும் பங்கு கொண்டால் எப்படி இருக்கும், அதிலும் அந்தக் குழந்தைகள் பொறுப் புணர்வு மிக்கவர்களாக இருந்தால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதை விளக் குவதே நாவலின் நோக்கம். கையிலே எடுத்து விட்டால் முடிக்கும் வரை வேறு வேலை செய்யத் தோன்றாது. ஆனந்த விகட னில் தொடர் கதையாக வந்து, திரைப் படமாகி பல பரிசுகளைப் பெற்றுத் தந்துள்ள படைப்பு. பூவண்ணனை தேசிய அளவில் உயர்த்தி வைத்த பெருமை இந்த நாவலுக்கு உண்டு.

ஆறு வெள்ளைக் குதிரைகள் - வத்சலா கோபால கிருஷ்ணன், பக். 108, ரூ. 15/- குழந்தை இலக்கியக் கழகம், 72 கிருஷ்ணா நகர், (மூவரசம்பட்டு அருகில்) சென்னை-600 091.

மாணவப் பருவத்திலேயே கவிதை எழுதி அமெரிக்க மக்களைக் கவர்ந்த டக்சன் பாரட் மாணவி காண்டிகியர், ஆறு வயதில் ஓவியங்களைப் படைத்துக் குவித்து ஓவிய உலகை அதிசயிக்க வைத்து மறைந்த கொச்சி சிறுவன் கிளிண்ட், பாடல் தந்த புலவருக்குப் பரிசளிக்கத் தனது தாலியையே ஈந்த சம்பந்தச் சர்க்கரைப் பட்டாக்காரர் போன்ற வரலாற்று மாந்தர்களும் மணியான ஆறு சிறுகதைகளும் இதில் உள்ளன. நெஞ்சை அள்ளும் பண்பட்ட நடை. புதிய கதைக்களன். இடையிடையே தரப்படும் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. ஆசிரியைக்குப் பெருமை தரும் படைப்பு.

பாலுவின் டில்லி வாழ்க்கை - இந்திரா அனந்த கிருஷ்ணன் - பக். 104, ரூ. 10/- கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

வீரச் செயல் புரிந்த சிறுவர்களுக்கான பரிசை குடியரசுத் தலைவரிடம் பெற வேண்டும், டில்லி அணிவகுப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்பது பாலுவின் ஆசை. அதற்காக அவன் எடுக்கும் முயற்சி களை அழகாக; சுவையாக விளக்குகிறது நாவல். டில்லியில் படித்து, ஒரு சர்தார்ஜி யின் குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று தனது இலட்சியங்களை அடைகிறான் பாலு. இறுதியில் தனக்கு ஆதரவு தந்த சர்தார்ஜியின் குடும்பத்தையும் காத்து, அடைக்கலம் தேடி வரும் ஒரு சிறுமியையும் காக்கிறான். டில்லி வாழ்க்கையை சுவையாகத் தந்திருக்கிறார் ஆசிரியை. சுவையான நாவல்.

நேரு மாமா - எம். எஸ். தியாகராஜன் - பக். 96, ரூ.12.50 தணிகைப் பதிப்பகம், 13, தேசிகர் தெரு, வடபழனி, சென்னை - 26.

திறமையான பல எழுத்தாளர்களும், கவிஞர்களும் உருவாகக் காரணமாக இருந்து வரும் அடக்கமான ஒரு சாதனை யாளரின் சிறுகதைத் தொகுப்பு. நேரு வுக்கும் குழந்தைகளுக்கும் இடையே இருந்த நெருக்கம், தவறு செய்யும் மகனைத் தானே தண்டித்து வழிகாட்டும் தாய், ஆடம்பர வாழ்வுக்கு ஏங்கி இறுதியில் மனம் மாறும் பாலு, பஸ்ஸில் திருடன் ஒருவனைப் பிடித்துக் கொடுக்கும் துணிச்சலான வசந்தி போன்ற பல மாறுபட்ட பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் கதைகள். பாராட்ட வேண்டிய முயற்சி, கொசுருக்கு அரிய செய்திகளின் தொகுப்பும் தரப்பட்டுள்ளது.

மதிப்புரைக்கு நூல்களை அனுப்பு வோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். கட்டணம் ஏதுமில்லை. அனுப்ப வேண்டிய முகவரி, ஆசிரியர் கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.

ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

